REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜனவரி 26 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 90 இல. 22 | Wednesday 26, January, 2022 | 20பக்கங்கள் | 30/-

நாட்டில் புதிய வகை வைரஸ் காய்ச்சல்

தீவிரமாக பரவி வருவதாக எச்சரிக்கை

கொரோனா வைரஸ் பரவலுக்கு மேலதிகமாக நாட்டில் மற்றுமொரு புதிய வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலை தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்பட 06

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்வது அவசியம்

நாட்டின் பிரஜைகளுக்கு அமைச்சர் டலஸ் அழைப்பு

ஷம்ஸ் பாஹிம்

பிரஜைகளின் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றும் வகையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். சில நபர்கள் பரப்பும் தவறான கருத்துகளாலும் தவறான தகவல்களாலும் மூன்றாவது தடுப்பூசியைப் பெற சிலர் 06

2021/2022 பெரும்போக நெல் அறுவடையில்

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க தீர்மானம்

40ஆயிரம் மில். ரூபா அமைச்சரவை ஒதுக்கீடு

ஷம்ஸ் பாஹிம்

2021/2022 பெரும் போகத்தில் நெல் அறுவடையில் குறைவு ஏற்பட்டால் அதனால் பாதிப்புக்குள்ளான நெல் விவசாயிகளின் வருமான மட்டத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒரு கிலோ நெல்லுக்கு 25 ரூபா வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி அவர்களுக்கு நட்டஈடு 06

சுகாதார துறையை முழுமையாக மேம்படுத்தவே அரசாங்கம் கையேற்பு

பெருந்தோட்ட ஆஸ்பத்திரிகள் குறித்து ஜீவன் கருத்து

ஹற்றன் சுழற்சி நிருபர்

பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள சுகாதார நிறுவனங்கள் முழுமையாக மேம்படுத்தப்படும். அதன் நிமித்தமே சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்றுள்ளது. இதன்மூலம் எமது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே 06

350 kg ஹெரோயினுடன் 11 பேர் கைது விவகாரம்;

மீன் பிடிக்கும் பாணியில் போதைப்பொருள் கடத்தல்

ஈடுபட்டால் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை

- பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ன கடும் எச்சரிக்கை
- கைப்பற்றப்பட்ட 350 Kg ஹெரோயினும் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது

படங்கள்: சுலோச்சன கமகே

ஸாதிக் ஷிஹான்

ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடும் பாணியில் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாமென கடற்றொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன, அவ்வாறனவர்கள் சட்டத்துக்கு முன்நிறுத்தப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவதுடன் வாழ்நாள் முழுவதும் சிறைக்குள் வாடும் நிலை உருவாகுமென்றும் எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் சட்டவிரோதமாக கடத்தப்படும் போதுகைப்பற்றப்படும் போதைப்பொருட்களில் விசாரணைக்கான ஒரு தொகையை மாத்திரம் வைத்துவிட்டு ஏனையவைகளை 06

அமைச்சர் அலி சப்ரி தலைமையில்

வடக்கு மக்களின் சட்டரீதியான நெருக்கடிகளுக்கு தீர்வு காணல்

நீதியமைச்சின் நடமாடும் சேவை இன்று ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் நீதியின் பொறிமுறை தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். 06

இலங்கை கடலில் அத்துமீறி மீன்பிடித்த

இந்திய மீனவர்கள் 55 பேரும் நிபந்தனையுடன் நேற்று விடுதலை

குடிவரவு குடியகழ்வு திணைக்களம் ஊடாக அனுப்பவும் உத்தரவு

பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்

இலங்கை கடற்பரப்பில் கைதான 55 இந்திய மீனவர்கள் நேற்று நிபந்தனையுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். நெடுந்தீவு மற்றும் எழுவைதீவு அருகே கடந்த வருடம் டிசம்பரில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 06

முழுமையான தடுப்பூசித் திட்டத்திற்கு மூன்று ஊசிகளையும் பெறல் அவசியம்

சுகாதார அமைச்சர் கெஹெலிய சுட்டிக்காட்டல்

முழுமையான தடுப்பூசித் திட்டத்திற்கு மூன்று தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது அவசியமென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய, இதுவரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ள அனைவரும் முழுமையான தடுப்பூசிக்காக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றிருப்பது அவசியமென்றும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். கொவிட் தடுப்பூசி செலுத்துவது தொடர்பாக உலகளாவிய ரீதியில், இலங்கை சிறந்த நிலையில் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கூறினார். 06

ஆறு மாதங்கள் கட்டணம் செலுத்தாவிடின் துண்டிப்பு

நீர் வழங்கல் அதிகார சபை அறிவிப்பு



ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக நீர் கட்டணத்தை செலுத்தாதவர்களுக்கு நீர் விநியோகத்தை துண்டிக்கும் செயற்பாடு மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார். கடந்த வருடம் 7,200 மில்லியன் ரூபாவை நீர் பாவனையாளர்கள் 06

ஜனவரி 27 வரை மின்வெட்டு இல்லை

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர்

மின் உற்பத்திக்கு எரிபொருள் கையிருப்பு போதுமானதாக இருப்பதால் ஜனவரி 27 வரை மின்வெட்டு கிடையாதென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் எரிபொருள் விநியோகம் கிடைப்பதை பொறுத்து நிலைமை மீள்பரிசீலனை செய்யப்படுமென்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து மின் விநியோகத்தை துண்டிக்காமலிருக்க தீர்மானிக்கப்பட்டதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். 06

பொலிஸ் ஊடக பேச்சாளராக மீண்டும் அஜித்

பொலிஸ் ஊடக பேச்சாளராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் மற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் அண்மைக்காலமாக 06

மட்டக்களப்பிற்கு 'புலதுசி' கடுகதி ரயில்

ஜன. 28 முதல் ஆரம்பமாகிறது

மட்டக்களப்பு முதல் கொழும்பு வரையிலான அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலன்னறுவை கொழும்பு கோட்டைக்கிடையில் நகரங்களுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட 'புலதிசி' அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில் சேவை, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் 06

நாடு முழுவதும் வேகமாக பரவி வரும்

மிகக்குறைவான அறிகுறிகளுடன் மக்களை தாக்கும் "ஒமிக்ரோன்"

நாடு மீண்டும் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில், கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் குறிப்பிட்டளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச மற்றும் குழந்தை நல மருத்துவர்கள் நிறுவகத்தின் 06

உலகின் பிரமாண்டமான திருக்குர்ஆன் காட்சிக்கு

பாகிஸ்தான் அரங்கில் மக்கள் பார்வைக்கு

துபாய் 'எக்ஸ்போ 2020' கண்காட்சியிலுள்ள பாகிஸ்தான் அரங்கில் உலகின் பிரமாண்டமான திருக்குர் ஆன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை பார்வையிட பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். உலகின் 1,400 ஆண்டுகால வரலாற்றை கொண்ட புனித நூலான திருக்குர்ஆனை 06

மர்மமாக உயிரிழந்த நிலையில்

ஆட்போ சாரதியின் சடலம் மீப்பு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பார் வீதி பெரிய உப்போடை வீதியில் மர்மமாக உயிரிழந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் 06

நேற்று முதல் வேலைத்திட்டம் ஆரம்பம்

ஒரு கிலோ நெல் 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை 03

கடல் வழி போதைப்பொருள் கடத்தல் பின்புலத்தில் 'ஹரக்கடா'

பொலிஸாரின் விசாரணையில் தகவல்கள் கசிவு 03

மின் விநியோகத்தில் தடையை ஏற்படுத்தும்

தொழிற்சங்கங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை 03

புகையிரத கடவையை கடக்கையில்

உருத்திரா தேவி மோதி 18 வயது மாணவன் பலி

யாழ். மீசாலையில் சம்பவம்

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி சென்ற உருத்திரா தேவி ரயிலுடன் மோதி மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். திங்கட்கிழமை மாலை 6.15 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. 06

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்

தயா மாஸ்டருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

வவுனியா நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மீது தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட 06

கொரோனாவை வெற்றி கொள்வதற்காக

12 நிபுணர்கள் தயாரித்த ஆலோசனை அறிக்கை தயார்

இவ்வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் மற்றும் ஒமிக்ரோன் மாறுபாட்டை வெற்றிகரமாக கையாளுவதற்கு தேவையான நிபுணர் ஆலோசனைகள் அடங்கிய விரிவான அறிக்கையை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாரித்துள்ளது. 06

மீனவர் வலையில் சிக்கிய 7 அடி நீளமான முதலை!

பாரிய மீன் என நினைத்தோருக்கு அதிர்ச்சி

முந்தல் நிருபர்

முந்தல் – சின்னப்பாடு வென்னப்புவல கடற்பிரதேசத்தில் மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய 07 அடி முதலையொன்று (24) மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். கடலிலிருந்து மீனவர்கள் வலையை கரையை நோக்கி இழுத்துக் கொண்டு வந்தபோது அந்த வலை பெரும் கனமாக காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். 06

விக்கல் வீராச்சாமி

கொரோனா வேகமா பரவுது கவனமா இருங்கோ எண்டு டாக்டர்மாரும் அரசாங்–கமும் சொல்லுகினம் ஆனா எங்கட சனம் கேட்டாத்தானே...

கொழும்பு கோல்பேசில மாலை நேரங்களில கூடுற சனக் கூட்டத்தை பாத்தா கொரோனாவே பயத்தில ஓட்டம் பிடிச்சிடும்...!!!

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்

மாத்தளை சுழற்சி நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மகோற்சவ நிகழ்வுகள் இன்று (26) காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளன.

27ஆம் திகதி வியாழக்கிழமை 07.30 மணிக்கு இடம்பெறும் உள்வீதி கொடி ஊர்வலத்தைத் தொடர்ந்து 11 மணி அளவில் கொடியேற்ற நிகழ்வு இடம்பெறும் அதனைத் தொடர்ந்து தினமும் விசேட பூஜைகளுடன் முற்பகல் 11 மணிக்கும் 6 மணிக்கும் சுவாமிகள் உள்வீதி, வெளிவீதி உலா இடம்பெறுவதுடன் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும்.

இம்முறை கொரோனா தொற்று காரணமாக தேவஸ்தானத்திற்கு வருகைதரும் அடியார்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. திருவிழா காலங்களில் வழமை போல் இடம்பெறும் அன்னதான நிகழ்வும் இம்முறை இடம்பெறாது.

பஞ்சரத பவனி நகர் வலம் வருவது குறித்து நாட்டின் சூழ்நிலைக்கேற்ப தீர்மானம் எடுக்கப்படுமென ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர்.

கிராமங்களை இணைக்கும் பாலம் உடைந்ததில் மக்கள் நிர்க்கதி

தெனியாய தினகரன் நிருபர்

தெனியாய, மெதேரிபிட்டிய - பொத்தன பிரதேசத்தை இணைக்கும் பாலம் நேற்று முன்தினம் உடைந்து விழுந்ததில் பிரதேசத்திற்கான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டது.

மெதேரிபிட்டிய பொத்தன பிரதேசத்தை இணைக்கும் இந்தப் பாலமானது ஜின் கங்கையை ஊடறுத்து அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 40 வருட காலம் பழமை வாய்ந்த இந்த பாலமானது நேற்று முன்தினம் நண்பகல் சரக்கு வண்டி ஒன்று பாலத்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் உடைந்து வீழ்ந்தது.

பாலத்தை உடைத்துக்கொண்டு ஆற்றில் விழுந்த டிரக் வண்டியின் சாரதியும் உதவியாளரும் தெய்வாதீனமாக தப்பினர். பொத்தன பிரதேசத்திற்கான போக்குவரத்து முற்றாக தடை தடைப்பட்டதால் சிங்கராஜ வனத்துக்கு செல்லும் சுற்றுலா பயணிகள், பிரதேசவாசிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் நிர்க்கதிக்கு உள்ளாகினர்.

கனிய வள அகழ்வு அனுமதி பத்திரங்களை ஒன்லைன் மூலம் வழங்க நடவடிக்கை

சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சச்சிந்ர சில்வா

(அக்குறணை குறூப் நிருபர்)

கனிய வள மற்றும் சுரங்கத் கைத்தொழில்கள் தொடர்பான அனுமதிப் பத்திரங்களை ஒன்லைன் முறையில் பெற்றுக்கொள்ள சுற்றாடல் அமைச்சு, நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சச்சிந்ர சில்வா தெரிவித்தார்.

கண்டியில் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட செயலமர்வு (23) ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகக் குறைந்த தொகை ஊழியர்களைக் கொண்டு மிகப் பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றும் நிறுவனங்களில் சுற்றாடல் அமைச்சு மிக முக்கிய மான ஒன்றாகும்.

கனிய வளங்கள், மணல், மண், கருங்கற்கள் போன்ற பல விடயங்கள் சுற்றாடல் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இதில் கனிய வளங்கள் என்பது ஒருபோதும் மீளப்பெற முடியாதவை. எனவே அவற்றை முறையாக முகாமை செய்யா விட்டால் ஒரு காலத்தில் அவை இல்லாது போகலாம். அப்படியான நிலை ஏற்படின் கனிய வளங்களுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் இல்லாது போகலாம். அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொழில்களை இழக்கவும் நேரிடும். குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டு நாம் பணியாற்றும் காரணத்தால் சில வேளைகளில் அணுமதிப்பத்திரங்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது. எனவே 'ஒன்லைன்' முறையில் அவற்றைப் பெற்றுக் கொள்ள வசதிகளை செய்துள்ளோம். எதிர்காலத்தில் அதனை இன்னும் விரிவு படுத்தி அனுமதிப்பத்திரங்கள் கூரியர் சேவையூடாக வந்தடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் மத்திய மாகாணம் முதலிடம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் மத்திய மாகாணம் முதல் இடத்தில் உள்ளதாக மாகாண ஆளுனர் லலித் யூ. கமகே தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுகிழமை (23) இடம்பெற்ற மாகாண கொவிட் தடுப்பு செயலணியின் மீள்பரிசிலனைக் கூட்டத்தில் அவர் மேற்படி தகவலை தெரிவித்தார். ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், இங்கு அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. மேலும் 30 முதல் 60 வரையிலான வயதெல்லைக்கு உட்பட்டவர்களில் பாதிபேர் வரை பூஸ்டர் தடுப்பூசி பெற்றுள்ளதாக ஆளுனர் குறிப்பிட்டார். மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில், சிவனொளி பாதமலை யாத்திரை செல்லும் அடியார்கள், உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆகியோரின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே, சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என மத்திய மாகாண ஆளுனர் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நிஹால் வீரசூரிய, மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளர் காமினி ராஜரட்ன, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பீ.எச்.என். ஜயவிக்ரம ஆகியோரும் பங்கேற்றார்கள்.

கோரமாக கொலை

வயோதிப பெண் சடலமாக மீட்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை வேவெஸ்ஸ பெருந்தோட்ட தெபத்தை தோட்டப்பிரிவிலிருந்து பெண்ணொருவர் நேற்று பதுளை பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தெபத்தை தோட்டப் பிரிவைச் சேர்ந்த லெட்சுமணன் சந்திரலேகா என்ற 58வயது பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. பதுளை – பசறை பிரதான வழியின் 6ம்மைல் அருகிலுள்ள தெபத்தை தேயிலை மலையிலேயே, இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணொருவரின் சடலம் தேயிலை மலையில் கிடப்பதாக, பதுளைப் பொலிசாருக்கு தகவல் கிடைக்கவே, பொலிசார் விரைந்து சடலத்தை மீட்டனர்.

"பாடுவோர் பாடலாம்" இசை நிகழ்ச்சி

கலைஸ்ரீ கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கிய 'பாடுவோர் பாடலாம்' புதிய பாடக, பாடகிகளுக்கான இசை நிகழ்ச்சி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவண.பிதா அருட் கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ முன்னிலை கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தயான் லங்காவின் தலைவர் கேசவன் பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், ஸ்டார் தமிழ் வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளரும் ஒலிபரப்பாளருமான எஸ்.நவநீதன் ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள் : நஸார்)

இசை சங்கமம் பாடல் வெளியீட்டு விழா

Nadi.lk நாடி வழங்கிய இசைச் சங்கமம் பாடல் வெளியீட்டு விழா Colombo City Centre இல் அமைந்துள்ள Scope Cinemas திரையரங்கில் கடந்த வெள்ளி மாலை வெகு விமர்சையாக நடைபெற்றது. பாடல்களுக்கு நிமேஸ் குலசிங்க, சத்துரங்க டி சில்வா ஆகியோர் இசை வழங்க உலகப் புகழ் பாடலாசிரியர் கவிஞர் பொத்துவில் அஸ்மின் வரிகளை எழுதியுள்ளார். பாடல்களை கோகுலன் சாந்தன் (யாழ்ப்பாணம்),சுதர்சினி கோணேஸ்வரன்(திருகோணமலை) குகனேஸ்வரன்(பதுளை) சாதீர் அஹமட் (கொழும்பு) ரவி ரொயிஸ்ட்டர் (மாத்தறை) ஆகியோர் பாடியுள்ளனர்.

(படங்கள் : அஷ்ரப் ஏ சமத்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 26 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.10
லுஹர்	12.24
அஸர்	03.47
மஃரிப்	06.18
இஷா	07.31

இன்றைய சுபதினம்

26 பிலவ வருடம் தை 13

ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: நவமி

பெப். 01ம் திகதி தொடக்கம்

யாழ். புதிய பஸ் நிலையத்தின் சேவைகள் ஆரம்பிக்கப்படும்

அங்கஜன் எம்பியின் கோரிக்கைக்கு வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இணக்கம்

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு, இதுவரை சேவை நடைபெறாமலிருக்கும் யாழ். புதிய பஸ் நிலையத்தின் சேவைகள் எதிர்வரும் பெப்ரவரி 01ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென யாழ். மாவட்ட

06

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையுடன் 12 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதனை முன்னிட்டு பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட நேற்றைய தினம் கொழும்பு முகத்துவாரம் காளி கோவிலுக்குச்சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபராக விக்கிரமசிறி நியமனம்

மாத்தறை தினகரன் நிருபர்

தென் மாகானத்தின் முதலமைச்சர் அலுவலகத்தின் செயலாளர் வை. விக்கிரமசிறி, மாத்தறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிவந்த பிரதீப் ரத்னாயக்க கம்பஹா மாவட்ட அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுச்சென்றதைத் தொடர்ந்தே வை. விக்கிரமசிறி மாத்தறை மாவட்ட அரசாங்க

06

மற்றொரு கொவிட் அலையை தவிர்க்க பூஸ்டரே ஒரே தீர்வு

உடன் பெறுமாறு மக்களுக்கு வைத்தியர்கள் கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் மற்றொரு கொரோனா அலையைத் தவிர்க்க பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிசியோதெரபிஸ்ட் பேராசிரியர் ஷர்மிளா டி சில்வா, இதுவரை மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழியவில்லயென்றாலும் ஒவ்வொரு நாளும் பதிவாகும்

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் மாறுபாடு நாட்டில் வேகமாக பரவும் மாறுபாடாக மாறுகிறதென்ற அறிக்கைகளுக்கு மத்தியில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அலர்ஜி, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு, இந்த மாறுபாட்டின் இரண்டு துணைப் பரம்பரைகள் வேகமாக பரவி வருவதாகவும் கூறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸைப் பெற்ற பலர் மூன்றாவது டோஸைப் பெறுவதற்கு அதேயளவு ஆர்வத்தைக் காட்டுவதில்லையென்பதை சுட்டிக் காட்டிய பேராசிரியர்

06

மின் விநியோகத்தில் தடையை ஏற்படுத்தும்

தொழிற்சங்கங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

மின் சக்தி அமைச்சர் காமினி எச்சரிக்கை

பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு மின் சக்தி அமைச்சர் காமினி லொக்குகே பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் மின் விநியோகத்தை தடை செய்யும் நோக்கில் செயற்படும் மின்சார சபை தொழிற் சங்கத்தினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இனி மின் விநியோகம் தடைப்படாது என்பதை பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி அமைச்சில் நடைபெற்ற

06

பொன்விழா காணும்

சிரேஷ்ட சட்டத்தரணி ஹம்ஸாவுக்கு கௌரவிப்பு

பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா சட்டத்துறையில் 50 வருடத்தை பூர்த்தி செய்து "பொன்விழா" வில் காலடியெடுத்து வைத்துள்ளார்.

இவரது சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு களுத்துறை சட்டத்தரணிகள் சங்க ஏற்பாட்டில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (28) பி.ப. 2.30 மணிக்கு களுத்துறை உயர் நீதிமன்ற கட்டட வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சிட்ரசிறி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பார்.

மேலும் களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் உபதலைவரான

06

ஒரு கிலோ நெல் 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை

நேற்று முதல் வேலைத்திட்டம் ஆரம்பம்

ஷம்ஸ் பாஹிம்

விவசாயிகளின் நெல்லுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நெல் கையிருப்பை பாதுகாப்பாக பேணுவதையும் நோக்காகக் கொண்டு பெரும் போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முதல் நெல்

சந்தைப்படுத்தல் அதிகார சபை ஊடாக ஒரு கிலோ நெல்லை தலா 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர்

06

கடல் வழி போதைப்பொருள் கடத்தல் பின்புலத்தில் "ஹரக் கடா"

பொலிஸாரின் விசாரணையில் தகவல்கள் கசிவு

தெற்கு கடற்பிராந்தியத்தில் கைப்பற்றப்பட்ட 3,300 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் தொகையை நேற்று (25) கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துபாயிலிருந்து போதைப் பொருள் கடத்தலை வழிநடத்தும் "ஹரக் கடா" என்பவரால் இந்த ஹெரோயின் தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இப் போதைப்பொருள் கடத்தலுக்கு மேலும் மூவரின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 330 கிலோவுக்குமதிக ஹெரோயின்

06

பெருந்தோட்ட வைத்தியசாலைகள் இனிமேல் மத்திய அரசின் கீழ்

நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி

ஷம்ஸ் பாஹிம்

பெருந்தோட்டங்களில் காணப்படும் வைத்தியசாலைகளை அரசின் கீழ் பொறுப்பேற்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பெருந்தோட்ட மக்களுக்கு தரமான சுகாதார சேவையை வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 450 வைத்தியசாலைகளில் முதல் கட்டமாக 59 வைத்தியசாலைகளை பொறுப்பேற்க சுகாதார அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு

06

றோயல் கல்வி நிறுவனத்தின் ஆங்கிலப் பாட ஆசிரியை ஷஹாரா கனக ஹாலால்டினின் 8ஆவது படைப்பாக பாலர் பிரிவு மாணவர்களின் ஆரம்ப எழுத்தறிவுக்கான சிங்கள மொழிநூல் வெளியீடு திங்கட்கிழமை (24) மாலை கொள்ளுப்பிட்டியிலுள்ள புரவலர் ஹாசிம் உமரின் இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நூலின் முதல் பிரதியை பதிப்பாசிரியரிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வதையும் அருகில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதாமேத்தா, ஊடகவியலாளர் சமீஹா சபீர் மற்றும் அஹாச மீடியா பெறுப்பாளர் பியன்சிகா பண்டாரநாயக்க ஆகியோரையும் படங்களில் காணலாம்.

"உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்"

கருத்திட்ட உதவித் தொகையை 650,000 ரூபாவாக அதிகரிக்க அனுமதி

தற்காலிக வீடுகளில் வசித்து வரும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் " உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் குடும்பமொன்றுக்கு 6 இலட்சம் உயர்ந்தபட்ச உதவித் தொகையொன்று வீடமைப்பு நிர்மாணத்தின் முன்னேற்றத்திற்கமைய வழங்கப்படும்.

இக்கருத்திட்டம் 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கட்டுமானப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையால் 6 இலட்சம் உதவித்தொகையில் எதிர்பார்க்கின்ற வகையில் வசிப்பதற்குப் பொருத்தமான முழுமையான வீடொன்றை அமைப்பதற்கு சிரமமாக அமையும்.

அதனால் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் தெரிவு செய்யப்படும் பயனாளர் குடும்பங்களுக்கு குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் உதவித்தொகையை 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

மக்களின் நிதியை வீண் விரயம் செய்வதற்கு இடமளித்தது யார்?

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அத்தியாவசியப் பொருட்களைக் கூட மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில்

06

கிளிநொச்சியில்

நீதியமைச்சினால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நடமாடும் சேவை

பிராந்திய இணைப்பாளர் க.செல்வகுமார்

கிளிநொச்சி குறூப் நிருபர்

நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மூலம் 27,28ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் நடமாடும் சேவையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஆலுவலகத்தின் சேவையும் நடைபெறவுள்ளதாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய இணைப்பாளர் க.செல்வகுமார் தெரிவித்துள்ளார். நீதி அமைச்சின் நடமாடும் சேவையில் இரண்டு

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	141.83	147.84
கனடியன் டொலர்	153.64	159.49
யூரோ	223.85	232.67
ஜப்பான் யென்	1.7190	1.7840
சிங்கப்பூர் டொலர்	146.13	150.84
ஸ்டேலிங் பவுன்ஸ்	265.27	[illegible]
சுவிஸ் பிராங்க்	215.03	222.69
அமெரிக்க டொலர்	198.50	202.99

06

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	533.10	கட்டார் ரியால்	55.20
குவைத் டினார்	664.02	சவூதி ரியால்	53.51
ஓமான் ரியால்	522.07	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.72

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் தை மாதம் 13ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 22

குறள் தரும் சிந்தனை

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்

ஏற்ற இடமறிந்து தொடர்ந்து தாக்கினால் பகைவர்கள், வெற்றி என்பதை நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள்.

எரிபொருள் சிக்கனத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலகட்டம்!

கொவிட் 19 தொற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்களால் உருவான நெருக்கடிகளில் புதைபடிம எரிபொருள் நெருக்கடியும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாட்டில் எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்னுற்பத்தித் துறை எதிர்கொள்ளும் நெருக்கடி இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது.

கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார சவாலின் காரணமாக எரிபொருள் நெருக்கடி தோற்றம் பெற்றுள்ள போதிலும், வாகன உரிமையாளர்கள் புதைபடிம எரிபொருளைப் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்துவது இந்நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார சவாலின் விளைவாக எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இதனை சகலரும் அறிவர். அப்படி இருந்தும் எரிபொருளை எவ்வித பொறுப்பும் அற்ற வகையில் பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் இன்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதாவது இத்தொற்று தோற்றம் பெறுவதற்கு முன்னர் இந்த எரிபொருளை எவ்வாறு பயன்படுத்தினார்களோ அதேபோன்று தான் தற்போதும், சில சமயங்களில் அவற்றை விடவும் அதிகமாகவும் அதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் வீட்டை விட்டு வெளியே சென்று வருவதென்றால், அதுவும் சில மீற்றர் தூரத்தில் இருக்கும் ஒரு கடைக்கோ, சந்தைக்கோ சென்று வருவதென்றால் கூட எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்களில்தான் சென்று வருகின்றனர். இப்பழக்கம் இந்நாட்டின் பெரும்பாலான வாகன உரிமையாளர்களிடம் காணப்படுகின்றது. இவ்வாறான பழக்கம் இந்நாட்டவரிடம் முன்பு காணப்படவில்லை.

இவ்வாறு பெற்றோலிய எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்களின் பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பின் விளைவாகப் பல்வேறு விதமான பிரச்சினைகளும் பாதிப்புகளும் ஏற்படுகின்றன. அவற்றில் வாகன நெரிசல் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் நாளாந்தம் ஏற்படும் வாகன நெரிசல் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இதன் விளைவாக பயணிகள், நோயாளர்கள் மாத்திரமல்லாமல் வாகனங்களின் உரிமையாளர்களும் கூட பலவிதமான அசௌகரியங்களுக்கு அன்றாடம் முகம் கொடுக்கின்றனர்.

அதேநேரம் எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்களின் அதிகரித்த பயன்பாட்டின் விளைவாக வளிமாசடைதலும் சுற்றுச்சூழல் பாதிப்பும் பெரிதும் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக சுவாசத் தொகுதி தொடர்பான உபாதைகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இவை இவ்வாறிருக்க, புதைபடிம எரிபொருள் உற்பத்தி உலகில் குறைவடையும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்த எரிபொருள் பயன்பாட்டினால் வளிமாசடைதல், சுற்றுச்சூழல் எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல் என்பவற்றையும் அதன் உற்பத்தியில் ஏற்பட்டு வரும் வீழச்சியையும் கருத்தில் கொண்டு மாற்றுச்சக்தி வளப் பயன்பாட்டில் உலகம் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. குறிப்பாக சூரியஒளி, காற்று, கடலலை, தண்ணீர் போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்தி எரிசக்தி ஆற்றலை பெற்றுக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் எரிசக்தி ஆற்றல் மூலம், புதைபடிம எரிபொருள் பாவனை ஊடாக ஏற்படுவது போன்று வளிமாசடைதல், சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் ஏற்படுவதுமில்லை. இந்நிலையில் பெற்றோலிய அமைச்சர் உதய கம்மன்பில, பெற்றோலிய எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வாக எரிபொருள் பாவனையைக் குறைப்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பிலான யோசனைகளை அவர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கின்றார்.

இவை வரவேற்கப்பட வேண்டிய யோசனைகளாகும். இந்த யோசனைகள் சீராகவும் ஒழுங்குமுறையாகவும் நடைமுறைப்படுத்தப்படுமாயின் இப்போது போன்று எரிபொருள் நெருக்கடி ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படாது. அத்தோடு வளிமாசடைவதையும் குறைத்துக் கொள்ளலாம்.

இவ்வாறான பிரதிபலன்களை அடைந்து கொள்வதற்கு எரிபொருள் பயன்படுத்தும் வாகனங்களின் உரிமையாளர்கள் நாட்டினதும் சுற்றுச்சுழலினதும் நலன்களை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். எரிபொருளை தாராளமாகப் பயன்படுத்தக் கூடிய காலம் இதுவல்ல. எரிபொருள் பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி எரிபொருள் பயன்படுத்தும் வாகனங்களின் உரிமையாளர்கள் செயற்படுவது அவசியம். அப்போது புதைபடிம எரபொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடிவதோடு எரிபொருளுக்கு நெருக்கடி ஏற்படும் வாய்ப்பும் இருக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

ஆரோக்கிய வாழ்வுக்கு ஆதாரம் தாவர உணவுகள்

மனித உடல் உபாதைகளில் முக்கியமானது மலச்சிக்கல்; காய்கறி, கீரை, ஆயுர்வேத மூலிகைகளில் ஒளிந்திருக்கும் மருத்துவ நன்மைகளை அறிந்து கொள்வோம்!

மலம் கழித்தல் என்பது எமது ஆரோக்கிய வாழ்வின் தினசரி கடமைகளில் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

'மலச்சிக்கல்தான் மரணத்திற்கு முதற்படி' என்றும் அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். பல நோய்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைவது மலச்சிக்கல்தான். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை சந்திக்கும் நாளாந்த பிரச்சினைகளில் ஒன்றாக மலச்சிக்கல் அமைகின்றது.

இதற்கான அடிப்படைக் காரணம் எமது ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கவழக்கங்களே என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே நாள்தோறும் கிரமமாக மலங்கழிக்க இயற்கையுடன் கூடிய நல்வாழ்வு முறைகளை கடைப்பிடித்தல் அவசியமானதாகும். மலச்சிக்கல் ஏற்படுவதற்கான காரணங்களில் முக்கியமானது தவறான உணவுப்பழக்கவழக்கங்கள்ஆகும். உள்ளெடுக்கும் உணவு சமிபாடு அடையத் தேவையான அளவு நீர் அருந்தாமையால் உண்ட உணவானது சரிவர சமிபாடு அடையாது ஈரப்பசையற்ற மலமாக வெளியேறும்.

அளவுக்கு மீறிய அதிக உணவை உண்பதனால் உண்ட உணவானது நன்கு சீரணம் அடையாது அரைகுறையாக சீரணித்து மலக்குடலில் அழுத்தமாக படியும்.

போதிய அளவு நார்ச்சத்து அற்ற கோதுமை மாவில் தயாரிக்கப்படும் பாண், பணிஸ், பிஸ்கட், கேக், பிட்டு, இடியப்பம் போன்ற உணவு வகைகளையும், இறைச்சி வகைகளையும் அளவுக்கதிகமாக உண்பது மலச்சிக்கலை அதிகரிக்கச் செய்யும். நார்ப்பொருள் உணவுகளான கீரை வகைகள், காய்கறி, பழங்கள் போன்றவற்றை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளாமை, ஒழுங்கீனமான உணவுப் பழக்கவழக்கம், விரதம், பட்டினி மற்றும் காலம் தவறி உணவு உண்ணல், உணவை நன்கு மென்று உண்ணாமல் அவசரமாக உண்ணுதல், உணவு உண்பதற்கு முன்பும் பின்பும் கோப்பி, தேநீர் போன்றவற்றை அருந்துதல் போன்றவற்றால் உணவு சரிவர சமிபாடு அடையாது.

அத்துடன் நீண்ட தூரம் பிரயாணம் செய்யும் போதும், மலம் கழிக்க வேண்டிய உணர்ச்சி உண்டாகும் போதும் உடனடியாக மலம் கழிக்காமல் தவிர்ப்பதால் நேரம் கடந்ததும் மலத்திலுள்ள ஈரப்பசை படிப்படியாக குறைந்து மலம் கெட்டியாகி விடும்.

உடல் அப்பியாசமற்ற வாழ்க்கை, உண்ணல், உறங்கல், வேலைத்தலம், வீடு எனும் சராசரி நடைமுறைகள் தவிர்ந்த வேறு எவ்வித உழைப்புமற்ற வாழ்க்கை முறை மலச்சிக்கலை உண்டாக்கும். அதிக மன உளைச்சலால் வருந்துதல், நீரிழிவு, அதி இரத்த அமுக்கம் முதலான நோய்களினால் பீடிக்கப்பட்டோரும், சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயது முதிர்ந்தோர் போன்றவர்களும் மலச்சிக்கலால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மலச்சிக்கல் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான இயற்கை வழிமுறைகள் பின்வருமாறு:

அதிகாலையில் வெறும் வயிற்றில் ஒரு கோப்பை கொதித்து ஆறிய நீரைப் பருகுதல் வேண்டும். இரவில் படுக்கைக்கு போக முன்னர் 2 கோப்பை இளஞ்சூடான நீரைப் பருகுதல் வேண்டும். தினமும் குறைந்தது 8 – 12 கோப்பை கொதித்து ஆறிய நீரை அருந்துதல் வேண்டும்.

உணவு உண்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பும், உணவு உண்ட பின்னர் ஒரு மணித்தியாலம் வரையும் கோப்பி, தேநீர் அருந்தக் கூடாது. உணவு உண்ணும் போது நீர் அருந்துதல் தவிர்க்கப்பட வேண்டும். கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளுக்குப் பதிலாக அரிசி, பயறு, இலைவகை, தேங்காய் சேர்த்து பொங்கல் அல்லது கஞ்சி, மா, இலைவகை, பருப்பு சேர்த்து கலவையாக்கி ரொட்டி, பிட்டு, கூழ் முதலியவற்றைத் தயாரித்து கூட்டுக்கலவை உணவாக உண்ணலாம்.

சுத்திகரிக்கப்படாத உணவுப் பொருட்களான தவிடு நீக்காத அரிசி, உளுந்து, குரக்கன், சோளம், வரகு, சாமை போன்ற முழு தானிய உணவுகள், அவரை, பருப்பு வகை, கோதுடன் கூடிய பாசிப் பயறு, கௌப்பி, மொச்சை, பொட்டுக்கடலை, கொண்டைக் கடலை, ஏனைய பயறு வகைகள் போன்ற உணவுகளை



அதிகம் பயன்படுத்தலாம். அதிகளவு நார்ச்சத்து நிறைந்த கீரை வகைகள், பழ வகைகள், சலாது வகைகள் போன்றன நாளாந்தம் உணவில் சேர்க்கப்படல் மிகவும் அவசியம். இரவில் உணவின் பின்னர் பப்பாளிப் பழம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் குறையும். அப்பிள், அன்னாசி, கொய்யா, நெல்லிக்கனி, எலுமிச்சை, பச்சைத் திராட்சை, தோடை, பப்பாளி, அத்தி பழங்களின் சாற்றில் ஏதாவது ஒன்றை தினமும் அருந்தி வர மலம் இளகி இலகுவில் வெளியேறும். அத்திக்காயை வாரம் ஒரு முறை யாவது விரும்பிய முறையில் சமைத்து சாப்பிடலாம்.

உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு, கோகில கிழங்கு, தாமரைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும், பச்சைப் பட்டாணி, சுரைக்காய், பீட்ரூட், கரட், முள்ளங்கி, கத்தரிக்காய், பூசணி, தேங்காய், வாழைத்தண்டு, பாகற்காய், புடலங்காய், அவரைக்காய், கொத்தவரங்காய் போன்றனவும் சிறப்பான நன்மை தரும்.

காய்கறிகளை சூப் வைத்து தினமும் ஒருவேளை அருந்தலாம்.

நாம் உண்ணும் உணவு நன்கு சமிபாடு அடைய உதவுவது நார்ப்பொருளாகும். இது கீரை வகைகளில் அதிக அளவு உள்ளமையால் உணவு இலகுவில் சமிபாடடைந்து மலச்சிக்கல் ஏற்படாது தடுக்கப்படும். உதாரணமாக முடக்கத்தான் கீரையை ரசம் வைத்து உண்ணலாம். அகத்திக்கீரை, கொத்தமல்லிக் கீரை, அரைக்கீரை, ஆரைக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முளைக்கீரை, புண்ணாக்கு கீரை, வெந்தயக்கீரை, நாயுருவி கீரை, தவசி முருங்கை, கரிசலாங்கண்ணி, தூதுவளை போன்ற கீரைகளில் ஏதேனும் ஒன்றை கறி, சம்பல் அல்லது சுண்டல் செய்து உண்ணலாம்.

சுரைக்காயை சிறுசிறு துண்டுகளாக்கி நீர் சேர்த்து அரைத்து வடிகட்டி தேன் சேர்த்து அருந்தலாம். கறிவேப்பிலைச் சாற்றுடன் தேங்காய்ப்பால், தேன் கலந்து அருந்தலாம்.

மிளகு, ஓமம், கொத்தமல்லி, மிளகாய் போன்றவற்றில் நார்ச்சத்துக்கள் அதிகம் காணப்படுவதனால் இவற்றைப் பயன்படுத்தி மிளகுரசம், கொத்தமல்லிச் சம்பல் போன்றனவற்றை உண்ணல் நலம். அதிகாலையில் அரை மணிநேர நடைப்பயிற்சி செய்தல் நலம். ஒரேநேரத்தில் நாளாந்தம் மலம் கழித்தலை பழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும். உடலை புத்துணர்வுடன் சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும்.

தேவையற்று வெயிலில் அலைவதை இயன்றவரை தவிர்த்தல் நலம். வயிற்றறை தசைநார்களை பலப்படுத்தக் கூடிய யோகாசனம், தியானம், மூச்சுப்பயிற்சி, மற்றும் கிரமமான உடற்பயிற்சிகளில் ஈடுபடல், திருப்தியான நித்திரை, ஓய்வு, ஆறுதல் மிக அவசியம். உளச்சுகாதாரம் திருப்திகரமாக பேணப்படுதல் வேண்டும்.

இவற்றுடன் புகைத்தல், மதுபாவனை, போதை முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும். இந்த எளியமுறைகளைக் கடைப்பிடித்து மலச்சிக்கல் இன்றி யாவரும் ஆரோக்கிய வாழ்வு வாழ வேண்டும். மேலும் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் மலங்கழிக்காது இருத்தல், மலங்கழிக்கையில் மிகவும் சிரமம், மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், வயிறு ஊதுதல், அடிவயிற்றில் நோ, நித்திரையின்மை போன்ற குறிகுணங்கள் அதிகரித்துக் காணப்படின் உடனடியாக மருத்துவரை நாடி ஆலோசனை பெற வேண்டியது மிக அவசியம்.

கலாநிதி திருமதி
கௌரி ராஜ்குமார்...✍
(சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம்)

வைத்திய கலாநிதி செல்வி
வினோதா சண்முகராஜா...✍
(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

அவுஸ்திரேலியாவின் விக்ரோரியா மாநிலத்தில் தமிழர் திருநாள் விழா

மெல்பன் கேசி தமிழ் மன்றம் நடத்திய பொங்கல் பெருவிழாவில் அவுஸ்திரேலிய அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்பு; 'தமிழ் மரபுத் திங்கள்' அஞ்சல்தலை வெளியீடு

புகலிடத்தில் தமிழ்மொழியையும் கலை, இலக்கியங்களையும் இனிவரும் சந்ததியினரிடத்தில் எடுத்துச் செல்லும் பணியை தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அவுஸ்திரேலியா மெல்பன் கேசி தமிழ் மன்றம் தைத்திருநாளை முன்னிட்டு ஏற்பாடு செய்த வருடாந்த தமிழர் திருநாள் இம்முறையும் சிறப்பாக நடைபெற்றது.

உலகமொழிகளில் படிப்படியாக அழிந்துவரும் மொழிகளில் தமிழும் ஒன்றாகி விடுமோ என்று தமிழ் ஆய்வாளர்களும், வரலாற்று ஆசிரியர்களும் அச்சம் தெரிவித்து வரும் சூழலில் அவுஸ்திரேலியா, விக்ரோரியா மாநிலத்தின் கேசி தமிழ் மன்றமும், அதன் மூத்த பிரஜைகள் அமைப்பும் தொடர்ச்சியாக மூத்த – இளம் தலைமுறையினருக்கு மத்தியில் ஆரோக்கியமான தொடர்பாடலையும் ஏற்படுத்தியவாறு அவர்கள் மத்தியில் இருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

புகலிடத்தில் தலைமுறை இடைவெளி என்பது பிரதான பேசுபொருள். அது பற்றி பேசிக் கொண்டே இராமல், ஆக்கபூர்மாக எதனையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வாராந்தம் நிகழ்ச்சிகளை நடத்தியவாறு, வருடாந்தம் ஆடிப்பிறப்பு விழா உட்பட பல நிகழ்வுகளையும் நடத்தியவாறு இளையோரின் சுயவிருத்தியை வெளிக்கொணரும் வகையில் 'இளவேனில்' என்ற இதழையும் வெளியிட்டு வருகின்றது.

கொரோனோ தொற்று நெருக்கடியினால், சமூக இடைவெளி பேணியவாறு முதல் சில மணிநேரங்கள் திறந்த அரங்கில் இவ்விழாவை நடத்திய பின்னர் மெய்நிகர் வழியாக அடுத்த சில மணிநேரங்கள் நடத்தியது. இரண்டு அரங்குகளையும் உலகெங்கும் வாழும் மக்கள் கண்டுகளிக்கத்தக்கவாறு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழாவுக்கு விக்ரோரியாவில் இயங்கி வரும் பல தமிழ் அமைப்புகளும் அனுசரணை வழங்கியிருந்தன.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இவ்விழாவை நடத்தி வரும் மெல்பன் கேசி தமிழ் மன்றம், இம்முறையும் கீஸ்பரோ என்ற இடத்தில் வெளியரங்கில் பல வீட்டுப்பாணைகள் இணையும் சமூகப்பொங்கலையும் நேர்த்தியாக நடத்தியது.

குலேந்திரசிங்கம் சிவசுதனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழா வெளியரங்கில் தொடங்கிய போது, சிறப்புவிருந்தினர்களாக கலந்து கொண்ட மத்திய பல்கலாசார உதவி அமைச்சர் ஜேசன் வுட், விக்டோரிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மெங் ஹியாங் டாக், கலாநிதி ரியன் கியூ, விக்டோரிய பசுமைக் கட்சித் தலைவர் கலாநிதி சமந்தா ரட்ணம் ஆகியோரும் உரையாற்றினர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் அவுஸ்திரேலிய தேசியகீதமும் ஒலிக்கப்பட்டது. 'தமிழ் மரபுத் திங்கள்' குறித்த தபால்தலை வெளியீடும் இடம்

பெற்றது. கலை நிகழ்வுகள், கண்காட்சிகள் (புகைப்படம், கைவினைப் பொருட்கள், ஓவியங்கள், புத்தகங்கள்) என்பனவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மெய்நிகர் ஊடாக காண்பித்த கண்காட்சிகளை மூத்த, இளம் தலைமுறையினர் அறிவார்ந்த தளத்தில் சங்கமித்த நிகழ்வு என்றே குறிப்பிடலாம். இவர்களின் ஓவிய, கைவினை, ஆற்றல்கள் வெளிப்பட்டிருந்தன. அத்துடன் அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்களின் தமிழ் நூல்களும் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களும் இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

மேற்படி தமிழர் திருநாளின் சிறப்பிற்கு, அதன் பின்னாளிருந்த உழைப்பு போற்றுதலுக்குரியது. அவர்களின் பெயர்களை பதிவேற்றினால், அதுவே நீண்ட பட்டியலாகி விடும். புகலிட நாட்டில், அதுவும் பல்லின கலாசாரம் பேணப்படும் அவுஸ்திரேலியா நாட்டில், தமிழர் திருநாள் இம்முறையும் மற்றும் ஒரு மைல்கல்லைத் தொட்டிருக்கிறது.

லெ. முருகபூபதி...✍
(மூத்த எழுத்தாளர் அவுஸ்திரேலியா)

ஆயிரமாயிரம் தியாகிகளின் உயிர்த் தியாகங்களுடன் உதயமான பாரத தேசம்

இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினம் இன்று

இந்தியா தனது 73 வது குடியரசு தினத்தை ஜனவரி 26 ஆம் திகதியான இன்று கொண்டாடுகிறது. குடியரசு தினத்தன்று ஒவ்வொரு ஆண்டும், புதுடெல்லியில் உள்ள செங்கோட்டையில் இந்திய தேசியக் கொடியான மூவர்ணக்கொடியை இந்தியக் குடியரசுத் தலைவர் ஏற்றுவார். இந்தியக் கொடியின் வண்ணங்கள், அதன் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் பரிணாமம் ஆகியன புகழ்மிக்கன.

இந்தியாவில் சுமார் 200 ஆண்டுகளுக்கும் மேல் நீடித்து வந்த ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல கலகங்களையும், புரட்சிகளையும், அஹிம்சை வழியில் பல போராட்டங்களையும் நிகழ்த்தி தமது குருதியையும், தேகங்களையும் தமது தாய்நாட்டிற்காக அர்ப்பணித்த தேசத் தலைவர்களையும், வீரர்களையும், புரட்சியாளர்களையும் நினைவு கூரும் நாள் குடியரசு தினம் ஆகும்.

ஆரம்ப காலத்தில் இந்திய மன்னர்கள் ஒற்றுமையாக இல்லாமல், இந்தியாவை சிறுசிறு மாநிலங்களாகப் பிரித்து ஆட்சி செய்து கொண்டிருந்ததால், வணிகம் செய்வதற்காக இந்தியாவில் நுழைந்த பிரிட்டிஷ் காரர்கள் படிப்படியாகத் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தி, இந்தியா முழுவதும் கொடுங்கோல் ஆட்சியை அரங்கேற்றினர்.

அத்தகைய கொடுங்கோல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி இந்தியா விடுதலை பெற்றது. இந்திய விடுதலைக்குப் பிறகு மக்களாட்சி மட்டுமே ஒரு நாட்டின் சிறப்பான வளர்ச்சிக்கு அடையாளம் எனக் கருதி டொக்டர் பி. ஆர். அம்பேத்கர் தலைமையில் இந்திய அரசிய ல் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1950 ஜனவரி 26 முதல் குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் தமது தாய்நாட்டை அந்நியர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி, பாரத மண்ணில் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க பாடுபட்ட தியாகிகளை நினைவு கூரும் வகையில் விடுமுறை அளிக்கப்பட்டு நாடெங்கும் அனைத்து பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் தேசிய கீதம் பாடி கொடியேற்றப்படுகின்றது.

அன்றைய காலத்தில் ஆங்கிலேயர்களின் அடக்குமுறையைக் கண்டு வெகுண்ட மக்கள் நாளுக்கு நாள் போராட்டங்கள், கலகங்கள், புரட்சிகள் எனத் தொடங்கி பிரிட்டிஷ்காரர்களை இந்தியாவை விட்டே விரட்ட எண்ணினர். அதன் அடிப்படையில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தேசியவாத உணர்வுகள் காட்டுத் தீ போல் இந்திய மக்களிடையே பரவத் தொடங்கின.

'இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி' என்னும் அமைப்பில் ஒன்றிணைந்த இந்திய மக்கள், பல போராட்டங்களை ஆங்கில ஆட்சிக்கு எதிராக அரங்கேற்றினர். இறுதியில், 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி விடுதலை இந்தியா என்ற புதிய பாரதம் உதயமானது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, இந்திய அரசியல் நிர்ணய சபைத் தலைவராக டொக்டர் ராஜேந்திரப் பிரசாத் நியமிக்கப்பட்டார். அவரே விடுதலை இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகவும் பொறுப்பேற்றார். அதன் பிறகு, இந்திய அரசியலமைப்பு வரைவுக்குழு அமைக்கப்பட்டு டொக்டர் பி. ஆர். அம்பேத்கர் தலைமையில் இந்திய அரசியல் அமைப்பு சாசனம் எழுதப்பட்டது. முகவுரை, விதிகள், அட்டவணைகள், பிற்சேர்க்கை, திருத்தமசோ தாக்கள் போன்ற சிறப்பு அம்சங்களைக் கொண்டு நீண்ட ஆவணமாக எழுதப்பட்ட இந்த சாசனம், இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மக்களாட்சியைக் குறிக்கோளாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டதால், 1930 ஜனவரி 26 ஆம் திகதியை நினைவுகூரும் வகையில் 1950 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26 ஆம் திகதி இந்திய தேசிய குடியரசு தினமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடியரசு என்பதன் பொருள் மக்களாட்சி ஆகும். அதாவது, தேர்தல் மூலம் மக்கள் விரும்பிய ஆட்சியாளர்களைத் தேர்தேடுத்துகொள்ளும் முறை குடியாட்சி எனப்படுகிறது. இந்திய விடுதலைக்குப் பிறகு 1950 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26 ஆம் நாள் இந்திய தேசிய குடியரசு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்திய மூவண்ணக் கொடியை ஏற்றி இந்த குடியரசுதினக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அன்று முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26 ஆம் திகதி தம்முடைய தாய்த்திருநாட்டை காக்க தமது இன்னுயிரை நீத்த தியாகிகளை நினைவுகூரும் வகையில் விடுமுறை அளிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல் ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று சிறந்த சேவை புரிந்தோருக்கும், வீரதீர சாகசம் புரிந்தவர்களுக்கும் விருதுகள், பாராட்டுகள், பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு ஆகும். அதன் பின்னணியில் இலட்சக்கணக்கான போராளிகளின் குருதியும், ஆயிரக்கணக்கான தேசத் தலைவர்களின் தியாகமும் மறைந்திருக்கின்றன.

இந்திய மக்களிடையே 'ஜெய் ஹிந்த்' என்ற வார்த்தை தேசிய உணர்வை தட்டி எழுப்பியது. சுதந்திர போராட்டத்தின் போது இந்த வார்த்தையை உச்சரிக்கும் போது, மக்களின் சுதந்திர தாகம் அதிகரித்தது. இதனை முதன் முதலில் இந்த தேசத்துக்கு உரக்க கூறியவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். இவர் 1941 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி ஜெர்மனியில் 'சுதந்திர இந்தியா மையம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். அதன் தொடக்க விழாவில்தான் நேதாஜி தேசிய உணர்வை தட்டி எழுப்பும் 'ஜெய்ஹிந்த்' (வெல்க இந்தியா) என்ற கோஷத்தை முழங்கினார். அப்போது முதல் இந்தியா மட்டுமல்லாமல் உலக நாடுகளில் வாழும் அனைத்து இந்தியர்களிடமும் இது வாழ்த்தாக ஒலித்தது.

இந்தியர்களின் தொடர் போராட்டங்களின் விளைவாக இந்தியாவை விட்டு வெளியேற ஆங்கிலேயர்கள் முடிவு செய்தனர். 1947ம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி இந்தியா சுதந்திரம் அடைந்தது. அப்போது கிடைத்த சுதந்திரம் முழுமையானது அல்ல. ஏனெனில் சுதந்திரம் பெற்ற போது, பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்துதான் வழங்கியது. அதன்படி ஆங்கிலேயர் சார்பில் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரல்தான் நாட்டின் தலைவராக இருந்தார். இதன் பின்னர் இந்திய அரசியலமைப்பு 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. அதுதான் குடியரசு தினம்.

நாடு விடுதலை பெறுவதற்கு 17 ஆண்டுகளுக்கு முன்பே மகாத்மா காந்தி ஏற்படுத்திய விடுதலை நாளான ஜனவரி 26ஆம் திகதியை மக்களாட்சி மலர்ந்த நாளாக கொண்டாட சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான மந்திரி சபை முடிவு செய்தது. அதன்படி 1950 ஆம் ஆண்டு முதல் குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது.

தலைநகர் டெல்லியில் இன்று குடியரசு தலைவர் மூவர்ண கொடியை ஏற்றி இந்தியப் படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வார். பிரதமர் நரேந்திர மோடி இன்றைய நிகழ்வுகளில் பிரதம அதிதியாக பங்கேற்கின்றார். சிறப்பாக பணியாற்றிய வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

மாநிலங்களில், அந்தந்த மாநில கவர்னர் தேசிய கொடியேற்றி காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வார். பின்னர் வீரதீர செயல்புரிந்த காவலர்களுக்கு பதக்கங்களையும் வழங்குவார்.

தடைகளை தாண்டியவாறு பொது நலப் பணிகள் முன்னெடுப்பு

கலாநிதி பி.எம்.சுஹைப் ஆலிம்







கலாநிதி பி.எம். சுஹைப் ஆலிம் (முன்னாள் மாத்தளை மாவட்ட காதி நீதவான்) மாத்தளை மாவட்டத்தில் இன.மத பேதமற்ற சமூக சேவையாளராவார். காலஞ்சென்ற முன்னாள் இராணுவ பொறியியலாளர் மாத்தளை ஹனீபா லெப்பை முஹம்மத் புஹாரி,ஸாவியா பீபி தம்பதிகளின் ஐந்தாவது புதல்வராவார். இவர் ஆரம்பக் கல்வியை மா/இஸ்மாலியா மகா வித்தியாலயம்,க/தெஹியங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றுள்ளார்.

மாத்தளை கொங்கா வெல பள்ளியில் அடங்கப்பட்டுள்ள மொகந்திரம் அப்பாவின் நான்காவது தலைமுறையை சேர்ந்த வராவார். ஹனீபா லெப்பே,புஹாரி நான்காவது தலைமுறை சுஹைப்.

நாடறிந்த மௌலவியான இவர் பல சாதனைகளுக்கும் சொந்தகாரர். தான் கற்ற கல்வியும் செல்வமும் இன்நாட்டு மக்களுக்கு உரித்தானதாகும் என்ற சிந்தனை கொண்டதாலே தன்னிடமிருந்த 1815 ஆம் ஆண்டு பழைமையான நாணயங்கள்,கையெழுத்து பிரதி மற்றும் பரிசு பொருட்களையும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அதில் உலகில் மிகச் சிறிய குர்ஆன் பிரதியும் அடங்கியுள்ளது.

இந்த சிறிய குர்ஆன் பிரதி தொடர்பான செய்திகள் எமது பத்திரிகையில் 1999.06.03யிலும் எமது சகோதர பத்திரிகையான டெய்லி நியூஸில் 1999.06.05யிலும் வெளியிடப்பட்டுள்ளது

இச் சேவைக்காக அவருக்கு முன்னாள் பிரதமர்கள் மற்றும் பாராளுமன்றத்திலும் வாழ்த்து மடல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர் இன்றும் பாதுகாப்பாக வைத்துள்ளார்.

மௌலவி சுஹைப் ஆலிம் அக்குபன்ச்சர் சிகிச்சை முறையில் டிப்ளோமா படித்து விட்டு அச்சிகிச்சையில் பட்டமும் பெற்றுள்ளார்.அத்தோடு IWA பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியும் மனநல ஆற்றுப்படுத்தலும் செய்துள்ளார். மூன்று வருடங்கள் தொண்டர் ஆசிரியராகவும் மூன்று பள்ளிகளில் இமாமாக பணியாற்றியுள்ளார். (அலுவிஹார ஜூம்மா பள்ளி,அக்குறணை மல்வான ஹின்ன ஜூம்மா,மவுஸாகலை வத்தேகம ஜூம்மா பள்ளி)

வரக்காமுற ஜம்மிய்யத்துள் உலமா சபை தனாதிகாரி,மாத்தளை ஜம்மிய்யத்துள் உலமா சபை உறுப்பினர்,மனித உரிமை அமைப்பின் உறுப்பினர் மற்றும் செஞ்சிலுவை சங்கத்தில் 22 வருட உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

சேவை

வரக்காமுற நகரத்திலிருந்து செல்லும் குறுக்கு வீதியில்(அமானுல்லா கடையின் பின்பக்க வீதி)பாலம் அமைப்பதற்காக தனக்கு சொந்தமான காணியை அன்பளிப்பு செய்துள்ளார். அத்தோடு மட்டாவ குறுக்கு வீதியை தனது சொந்த பணத்தில் செப்பனிட்டுள்ளார்.

★அக்குறணையில் வறிய மூன்று கும்பங்களுக்கு 07 பேர்ச் வீதம் காணி வழங்கியுள்ளார்.

★தான் வாங்குவதற்கு உத்தேசித்திருந்த காணியை அண்ணூர் மாகா வித்தியாலயத்திற்கு தேவையாக இருந்ததால் அக்காணியை பாடசாலைக்கு வழங்குவதற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளார.இவர் அண்ணூர் மாகா வித்தியாலய அபிவிருத்தி சங்க உறுப்பினருமாவார்.

★அண்ணூர் மகா வித்தியாலயத்திற்கு அம்பிளிப்பயர் இயந்திரங்களையும் அன்பளிப்பு செய்துள்ளார்.

★மட்டாவ மொஹிதீன் தக்கியா,நாகாதன்ன உதா பள்ளிகளுக்கு ஜெனரேட்டர்களை வழங்கியுள்ளார்.

★வரக்காமுற நலன்புரி சங்கத்தில் உறுப்பினராக இருந்து பல சேவைகள் செய்துள்ளார்.

★தனது ஊரில் இதுவரை அமைக்கப்படாத உபதபால் அலுவலகம்,கிராம சேவையாளர் அலுவலகம்,மருத்துவ சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக காணி வழங்கியுள்ளார்.அதில் நிர்மாணிப்பதற்கான கட்டட வரைபும் நிறைவடைந்த நிலையில் நாட்டின் அசாதாரண நிலையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக சேவைகளில் முழு முச்சாக செயற்படும் மௌலவி சுஹைப் ஆலிம், விவசாய நடவடிக்கையிலும் அதிக நாட்டம் கொண்டவர். இவர் செய்யும் சேவைகளை ஊர் பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள்,ஆன்மிக தலைவர்களும் பாராட்டி இவருக்கு அனேக வாழ்த்து மடல்களையும் அனுப்பியுள்ளனர்.

மறைந்த பெருந்தலைவர் அஷ்ரபும் இவருக்கு பல கடிதங்கள் அனுப்பியுள்ளார்.அவரின் சேவைகள் இன்னும் மக்களுக்கு தேவை என்பதை நிருபிக்கும் வகையில் ஊடக மத்திய நிலையம் பாராட்டு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது. அத்தோடு வத்தேகமையில் இவரின் பெயரில் மத்தரஸத்துள் சுஹைபியா என்ற பெயரில் மத்தரஸாவும் அமைக்கப்பட்டுள்ளது

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

சமூக சேவையோடு நின்றுவிடாத தான் கற்றுக் கொண்ட ஆன்மீக கல்வியை மக்கள் அறிந்து கொள்வதற்காக இஸ்லாம் தொடர்பான மூன்று புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு தேசகீர்த்தி பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாம் நினைப்பது போல் சமூக சேவை ஒன்றும் இலகுவான காரியமல்ல. எம்மிடம் இருக்கும் ஒரு பொருளை வழங்குவதற்கு தூய்மையான மனம் இருக்க வேண்டும். வசதிபடைத்தவர்கள் அனைவரும் வாரி வழங்குபவர்கள் அல்ல.

தூய மனமும் சேவை மனப்பாங்கு இருந்தாலே எம்மால் தொடர்ந்து மக்களுக்கு தொண்டு செய்ய முடியும்.

எம்.சதுர்தீன்...✍

இந்திய மீனவர்கள் 55 பேரும்...

இந்திய மீனவர்கள் 55 பேருக்கான ஆறு மாதகால சாதாரண சிறை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவர்களது கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 05 வருட காலத்தில் மீண்டும் இலங்கை பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாக கைது செய்வதற்கும் நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

பொலிஸ் ஊடக பேச்சாளராக...

கவனம் செலுத்தப்பட்டு வந்ததையடுத்தே அஜித் ரோஹண இந்தப் பதவிக்கு மீண்டும் நிமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது குற்றம் மற்றும் போக்குவரத்து பிரிவின் பிரதானியாக பணியாற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண மீண்டும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆட்டோ சாரதியின் சடலம்...

நேற்று (25) காலை சடலமாக முச்சக்கர வண்டியுடன் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர். கருவப்பங்கேணியைச் சேர்ந்த 02 பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய மாசிலாமணி தர்மரட்ணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந் நபர் மட்டு ரயில் நிலையத்தின் முன்னாலுள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இருந்து முச்சக்கர வண்டியை செலுத்தி வருவதாகவும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு அதிகாலை 04 மணிக்கு வந்ததையும் ரயிலிலிருந்து வரும் பிரயாணிகளை ஏற்றி செல்வதற்காக சம்பவதினமான நேற்று அதிகாலை 04 மணிக்கு வீட்டைவிட்டு முச்சக்கரவண்டியில் சென்றுள்ளார். ரயில் நிலைய முச்சக்கரவண்டி தரிப்பிடத்திலிருந்து புன்னைச்சோலை பகுதிக்கு பிரயாணி ஒருவரை ஏற்றிச் சென்ற அவர் பார்வீதி உப்போடையில் வீதியில் காலை 06 மணிக்கு சேதமடைந்த முச்சக்கரவண்டிக்கருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உலகின் பிரமாண்டமான...

தங்கம் மற்றும் அலுமினியத்தால் ஆன எழுத்துருக்களுடன் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷாகித் ரசம் என்ற கலைஞர் பிரமாண்டமாக வடிவமைத்துள்ளார்.

பொதுவாக திருக்குர்ஆன் பாரம்பரிய முறைப்படி காகிதம், துணி அல்லது தோலால் உருவாக்கப்படும். இதில் சற்று வித்தியாசமாக துபாயில் ஏற்கனவே வசித்து வந்த பாகிஸ்தானை சேர்ந்த ஷாகித் ரசம் என்ற கலைஞர் பிரமாண்டமான அமைப்பில் திருக்குர்ஆனை உருவாக்கியுள்ளார். இந்த திருக்குர்ஆன் நூல் கடந்த 05 ஆண்டுகளாக கராச்சியில் உருவாக்கப்பட்டு வந்தது.

பிரமாண்டமான இந்த புனித நூலின் உயரம் 8 அடியாகவும், அகலம் 6 அடியாகவும் உள்ளது. ஒரு பக்கத்திற்கு 150 வார்த்தைகள் என மொத்தம் 550 பக்கங்களுடன் இது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் எழுத்துக்கள் மையால் எழுதப்படவில்லை. மாறாக தங்கம் மற்றும் அலுமினிய தகடுகளால் கலை நயத்துடன் கூடிய எழுத்துருக்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை கின்னஸ் சாதனையில் இடம் பெற்றுள்ள பிரமாண்டமான திருக்குர்ஆன் 6 அடி உயரமும், 44 அடியாகவும் உள்ளது. அதனை தொடர்ந்து தற்போது இந்த பிரமாண்டமான புனித நூல் அந்த சாதனையை முறியடித்து விரைவில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற உள்ளது. தற்போது இந்த உலகின் பிரமாண்டமான திருக்குர்ஆன் துபாய் எக்ஸ்போ 2020 கண்காட்சியில் பாகிஸ்தான் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பல்வேறு நாட்டை சேர்ந்த பார்வையாளர்களும் ஆர்வத்துடன் பார்வையிட்டு புகைப்படங்களை எடுத்து செல்கின்றனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு...

வழங்குவதற்காக 40,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கையில் உர நெருக்கடிக்கு எதிராக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த சில மாதங்களாக, கரிம அல்லது இரசாயன உரங்களை கோரி இலங்கை முழுவதும் விவசாயிகள் போராட்டம் நடத்தி வந்தனர். விவசாயிகள் போராட்டத்தின் காரணமாக, இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் திரவ உரங்களை இறக்குமதி செய்ய தனியாருக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்ட போதிலும் நாட்டில் நிலவும் கரிம மற்றும் இரசாயன உரத் தட்டுப்பாட்டிற்கு எதிராகவும், சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரியும் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர். இந் நிலையிலேயே மேற்கண்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். புதிய பஸ்... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தினார்.

மற்றொரு கொவிட்... (03ஆம் பக்கத் தொடர்)

டி சில்வா, தடுப்பூசி தொடர்பான பல கட்டுக்கதைகள் சமூகத்தில் வேரூன்றியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மலட்டுத்தன்மை மற்றும் ஆண்மைக்குறைவு தடுப்பூசியின் பக்கவிளைவாக இருக்கும் போன்ற கட்டுக்கதைகளை நம்ப வேண்டாமென்று பொதுமக்களை கேட்டுக்கொண்ட அவர், நாட்டில் மற்றொரு கொரோனா அலையைத் தடுக்க ஒவ்வொரு நபரும் பூஸ்டர் டோஸைப் பெற வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்சங்கங்களுக்கு ... (03ஆம் பக்கத் தொடர்)

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், மின்னுற்பத்தி மற்றும் மின் விநியோகத்திற்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு தேவையான 50 மில்லியன் டொலரை வழங்குமாறு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மத்திய வங்கி தேவையான டொலரை விநியோகிக்க உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட... (03ஆம் பக்கத் தொடர்)

அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். வை. விக்கிரமசிறி பஸ்கொட, பென்கமுவ பாடசாலையில் கல்வி கற்று றுஹுனு பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாவார். பின்னர் அரசாங்க நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவையில் இணைந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி... (03ஆம் பக்கத் தொடர்)

இவர், சீனன்கோட்டையைச்சேர்ந்த காலஞ்சென்ற மர்ஹூம்களான வை.எல். எம். கரீம், உம்மு மழீஹா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

ஒரு கிலோ நெல்... (03ஆம் பக்கத் தொடர்)

மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இந்நெல் அறுவடையை கொள்வனவு செய்தல், நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நேரடியாகவும் மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை இயக்குவதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.அதற்குத் தேவையான 29,805 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும். அதற்கமைய, விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடல் வழி போதைப்பொருள்... (03ஆம் பக்கத் தொடர்)

பேதைப்பொருள் தொகையுடன் பயணித்த 02 படகுகளை தெற்கு கடற்பிராந்தியத்தின் சர்வதேச கடல் எல்லைக்கருகில் (24) கைப்பற்றியதாக கடற்படை பேச்சாளர், குறூப் கெப்டன் இந்திக டி சில்வா குறிப்பிட்டார்.

அந்தப் படகுகளிலிருந்த 11 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.மாத்தறை – குடாவெல்ல பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்றிருந்த மீனவ படகுகளே இவ்வாறு போதைப்பொருளுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட... (03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெருந்தோட்டங்களில் காணப்படும் வைத்தியசாலைகளை அரசிற்கு கீழ் பொறுப்பேற்பது தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, பெருந்தோட்டங்களில் காணப்படும் மருந்தகங்கள் மற்றும் வைத்தியசாலைகளை அரசிற்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் நிதியை... (03ஆம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவிக்கையில்: எமக்குத் தேவையான எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து கப்பல்களில் வந்தாலும் அதனை விடுவிப்பதற்கு டொலர் இல்லாமல் உள்ளது. பால்மா இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது அதற்கும் நிதி இல்லாத நிலைமையே காரணமாகும் என்றார்.

(ஸ)

காணாமல்... (03ஆம் பக்கத் தொடர்)

பிரிவாக காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் வடமாகாணம் தழுவிய ரீதியில் நீதியமைச்சினால் முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவையில் காணாமல் ஆக்கப்பட்போருக்கான அலுவலகம் மக்களுக்கு இரண்டு விதமான சேவையை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கான பிராந்திய இணைப்பாளர் நேற்று ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி காணாமல்போன ஆட்களின் மாவட்ட அலுவலகங்களில் அலுவலகத்தின் தலைவர் தலைமையில் ஐந்து மாவட்டங்களில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகங்களில் விசாரணை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஜனவரி 27 வரை மின்வெட்டு...

அத்துடன் மின்விநியோகத்தை திட்டமிட்டு துண்டிக்கும் தரப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். மின்சாரத் துண்டிப்பு குறித்து ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தேவையான டொலரை விநியோகிக்குமாறு ஜனாதிபதி மத்திய வங்கிக்கு இந்த சந்திப்பின்போது ஆலோசனை வழங்கினார். அதற்கமைய 35,000 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோல் மற்றும் 37,500 மெற்றிக்தொன் டீசல் அடங்கிய கப்பலுக்கு டொலர் செலுத்த மத்திய வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை தடையில்லாமல் விநியோகிக்க வலுசக்தி அமைச்சும்,பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பிற்கு 'புலதுசி' கடுகதி...

தீர்மானத்துக்கமைவாக எதிர்வரும் ஜனவரி 28 முதல் மட்டக்களப்பு கொழும்பு 'புலதிசி' கடுகதி சேவையாக விஸ்தரிக்கப்படவுள்ளது. இச் சேவை மட்டக்களப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்பட்டு காலை 08.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும். மீண்டும் பிற்பகல் 3.05 கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் இரவு 9.52 க்கு மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடையவுள்ளது.

மிகக்குறைவான அறிகுறிகளுடன்...

செயலாளர் விசேட வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதுடன் நீண்ட விடுமுறை மற்றும் அதிக பயணங்களை மேற்கொள்வதன் காரணமாகவே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் ஒமிக்ரோன் கொவிட்19 வைரஸ் திரிபு வேகமாக பரவி வருவதாகவும், நாளாந்தம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட அதிகளவானோர் அடையாளம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாடு வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மக்கள் தேவையற்ற பயணங்களை மேற்கொள்வதே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலை தொடருமானால், ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதை தவிர்க்க முடியாதெனவும், இதன் மூலம் நாட்டில் அதிகளவில் பரவும் வைரஸ் திரிபாக ஒமிக்ரொன் மாற்றமடையக்கூடுமெனவும் விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா மேலும் தெரிவித்தார். இதற்கிடையில், ஒமிக்ரோன் வைரஸ் திரிபு அறிகுறிகள் மிகவும் குறைவாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஒமிக்ரொன் கொவிட்19 வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலேசான இருமல் / தடிமன் மற்றும் இலேசான தொண்டை நோவு போன்ற சில அறிகுறிகள் மட்டுமே இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

வடக்கு மக்களின் சட்டரீதியான...

அதேவேளை வடக்கு மக்களின் சட்டபூர்வமான சிக்கல்களை தீர்த்து வைப்பது நீதிக்கான பிரவேசமாகும் எனவும் தெரிவித்துள்ள அவர், நடமாடும் சேவையின் அடிப்படை நோக்கமும் அதுவே என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின்கீழ் சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் செயற்பாடுகளை. பலப்படுத்தும் வகையில் வடக்கு மக்களுக்காக நீதியமைச்சு நடத்தவுள்ள நடமாடும் சேவை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நீதியமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை வடமாகாணத்தை உள்ளடக்கும் வகையில் நடத்தவுள்ள Access to justice என்ற நடமாடும் சேவை தொடர்பில் தெளிவூட்டும் ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேற்படி நடமாடும் சேவை வடமாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

சட்டத்தை பலப்படுத்துதல் மற்றும் சமத்துவமான சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் சட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவதே மேற்படி நடமாடும் சேவையின் நோக்கம் என்று தெரிவித்துள்ள அமைச்சர், எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் இந்த நடமாடும் சேவையை நடத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவைகளின் போது அந்தந்த மாவட்டங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எழக்கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் பலம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

நாட்டில் புதிய வகை வைரஸ்...

வேண்டுமென அந்தச் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். இதேவேளை, ஒமிக்ரோன் மற்றும் புதிய கொரோனா திரிபிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் 05 ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிபுணர் குழுவினூடன முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளை அடுத்தே இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி...

தயங்குவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், நாட்டின் 98% மக்களுக்கு முதல் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இரண்டாவது தடுப்பூசி யும் அதற்கு அண்மித்த எண்ணிக்கையில் வழங்கப்பட்டது. முதன் முதலில் கோவிட்19 தடுப்பூசி போடப்பட்ட போது, சீன தடுப்பூசியை தரமற்றதெனவும் பைசர் தடுப்பூசியாக வழங்குமாறும் சிலர் கோரிக்கை விடுத்ததையும் அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

(பா)

சுகாதார துறையை...

அவர் இந்த தகவலை வெளியிட்டார். இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் கூறுகையில்,

" சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் அண்மையில் நாம் பேச்சு நடத்தியிருந்தோம். இதன்போது பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அதில் பிரதானமாக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்தவகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்திருந்தார். இதற்கே நேற்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு எமது மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றார்.

முழுமையான தடுப்பூசித்...

கொவிட்19 பரவல் ஆரம்பித்த காலப் பகுதியில் இலங்கையில் ஒரு ஆய்வகம் மாத்திரமே இருந்தது. அது தற்போது 27ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் தடுப்பூசி செலுத்தப்பட்டமையினால், நாட்டை வழமையான நிலைக்குக் கொண்டுவர முடிந்துள்ளது.

வீடுகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டன. இந்தத் திட்டத்தில் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, எதிர்வரும் 29ஆம் திகதி ஆயிரத்து 50 வைத்தியசாலைக் கட்டமைப்புக்களில் சமய நிகழ்வுகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, மக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

ஆறு மாதங்கள் கட்டணம்...

செலுத்தத் தவறியுள்ளதாகவும், ஆறு மாதங்கள் அல்லது 2,000 ரூபாய்க்கு மேல் நிலுவையாகவுள்ள நீர் பட்டியலுக்கான நீர் விநியோகத்தை துண்டிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

27 இலட்சத்து 50,000 பேருக்கு மாதாந்தம் 50 மில்லியன் கனமீட்டர் குடிநீரை வழங்குகிறது. மேலும் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2,100 மில்லியன் ரூபாயாக இருந்த நிலுவைக் கட்டண தொகையை செலுத்தாமையினால், டிசம்பர் மாதமளவில் அத்தொகை 7,200 மில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

மாதாந்த நீர் கட்டணத்தை 14 நாட்களுக்குள் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு அடுத்த மாத கட்டணப் பட்டியலில் 1.5 சதவீத தள்ளுபடியும், பணம் செலுத்த தாமதப்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த பில்லில் 2.5 சதவீதம் தாமதக் கட்டணமும் அறவிடப்படுமென்று உதவி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

உருத்திரா தேவி மோதி...

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் கொடிகாமத்தை சேர்ந்த உதயகுமார் பானுசன் (வயது 18) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கருகில் புகையிரத பாதையை கடந்த வேளை யாழ்ப்பாணம் நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதியதில் மாணவன் உயிரிழந்துள்ளான்.மாணவன் பாடசாலையில் நடைபெறும் (சோர்சல்) நிகழ்வுக்கு ஆடைகளை தைக்க சென்ற போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தயா மாஸ்டருக்கு...

சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. தமிழீழ விடுதலை புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர், போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். இந்த நிலையில் தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உள்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்தல் விதிகளின் கீழ் தண்டனை விதிக்கப்பட கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றுவந்த நிலையில் இன்றையதினம் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. வழக்கில் தயாமாஸ்டர் மற்றும் அவர் சார்பாக சட்டத்தரணி எம்.எ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார். குறித்த வழக்கில் தயாமாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. அந்த குற்ற பத்திரிகை திருத்தப்பட்டு குறைந்த குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் அவர் மீது முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி அவர் தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

12 நிபுணர்கள் தயாரித்த...

12 விசேட வைத்தியர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை இவ்வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமென சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முழுமையாக தடுப்பூசி செலுத்தியவர்களை பொது இடங்களுக்கு அனுமதிக்கவும், வீடுகளில் இருந்தபடியே சுயமாக அன்டிஜென் பரிசோதனையை செய்வதற்கான கருவிகளை வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மீனவர் வலையில் சிக்கிய...

வலை கரையை வந்தடைந்ததும் அந்த வலைக்குள் பெரிய மீன் ஒன்று சிக்கிவிட்டதாகவே தாம் முதலில் கருதியதாகவும் எனினும், அந்த வலைக்குள்ளிருந்து 07அடி நீளமான முதலையொன்று இருப்பது பின்னர் கண்டறியப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து, இது தொடர்பில் ஆனவிழுந்தான் மற்றும் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களின் உதவியோடு முதலையை பிடித்து பாதுகாப்பாக எடுத்துச் சென்றனர்.

மீன் பிடிக்கும் பாணியில்...

மஜிஸ்திரேட் முன்னிலையில் உடனடியாகை அழிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதனால் அவை மறுசீரமைக்கப்பட்டு வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பான சட்ட மறுசீரமைப்பு மற்றும் சட்ட வரைவை தயாரிக்கும் பணியில் நீதி அமைச்சு, சட்ட மாஅதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மீன்பிடிக்கும் பாணியில் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று மீனவர்களிடம் வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர் அவ்வாறானவர்கள் சட்டத்திற்கு முன்கொண்டுச் செல்லப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு மீன்பிடி படகுகளை தென்பகுதி ஆழ்கடலில் வைத்து கைப்பற்றிய இலங்கை கடற்படையினர் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 350 கிலோ ஹெரோயினுடன் 11 சந்தேக நபர்களையும் கைது செய்திருந்தனர்.

ஹெரோயினுடன் இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகுகள் சந்தேக நபர்களுடன் கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று கொண்டுவரப்பட்டதுடன் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன ஆகியோர் தலைமையிலான குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளிக்கையில் :

அரச புலனாய்வு சேவை, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இலங்கை கடற்படையின் சமுதுர கப்பல் சுமார் ஆயிரம் கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் கடந்து இரு வாரங்களாக மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் பிரதிபலனாக சுமார் 350 கிலோ ஹெரோயின் போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன் 11 உள்ளூர் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது போன்று இரு மீன்பிடி படகுகளில் சென்றுள்ளனர். இவற்றில் ஒரு படகு வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மேற்படி போதைப் பொருளை ஆழ்கடலில் வைத்து தமது மீன்பிடி படகிற்கு மாற்றியுள்ளதுடன் மற்றைய படகு அவற்றை கொண்டுவர சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரை போதைப் பொருள் பாவனையின் மூலம் இல்லாமல் செய்யும் நோக்கில் எமது நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட போதைப் பொருட்களை எதாவது ஒரு வழியில் முறியடிக்க முன்னெடுத்த ஒரு நடவடிக்கையாகும். இது போன்று கடந்த காலங்களிலும் செய்துள்ளோம், தற்போதும் செய்துக் கொண்டு இருக்கின்றோம் எதிர்காலத்தில் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம்.

இவ்வாறு கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ள போதைப் பொருட்களை முற்றாக தடுத்து நிறுத்த தேவைய

சாதுலியா தரீக்காவின் 1210 ஆவது மஜிலிஸ்

பேருவளை விஷேட நிருபர்

பேருவளை சீனன்கோட்டையில் சாதுலிய்யா தரீக்காவின், 1210 வது ஸலவாத்து மஜிலிஸ் (21) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சீனன்கோட்டை பளீல் ஹாஜியார் மாவத்த அல்ஹாஜ் பி.எம்,எம் ஹில்மி (அர்ஷத் ஸவாஹிர்) இல்லத்தில், சீனன்கோட்டை பகுதி கலீப துஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் ஸெய்னுலாப்தீன் பஹ்ஜி தலைமையில் இது நடைபெற்றது.

பாஸியா பெரிய பள்ளிவாசல் கதீப் முகத்தமுஷ்ஷாதுலி மௌலவி ஹாபிழ் முபாரக் (மன்பயி),குட்டிமலை ஜலாலிய்யா ஸாவியா மஸ்ஜித் கதீப், முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி,) கதீப் முகத்தமுஷ்ஷாதுலி அல்ஹாஜ் மௌலவி பாருக் (மக்கி), ஜம்மிய துல் உலமா சபை உறுப்பினர் கலாநிதி மௌலவி அஸ்வர் (அஸ்ஹரி), ஜாமி அதுல் பாஸியா கலாபீட. பணிப்பாளர் மௌலவி அல்ஹாஜ் பஸ்லான் (அஷ்ரப் மௌலவி ஹாபிழ் முகத்தமுஷ்ஷாதுலி பர்ஹான் (முர்ஸி), மௌலவி அம்ஜத் ஸாலி (அஷ்ஷாதுலி மௌலவி ருக்ஷான் (அஷ்ஷாதுலி) உட்பட பல உலமாக்கள், முகத்தமீன்கள், முன்சிதீன்கள், இஹ்வான் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

மர்ஹூம் கலீபதுல் குலபா ஸுஹ்ருத்தீன் ஆலிம் ரஹ் சுமார் 31 ஆண்டுகளுக்கு முன்பு இப்புனித ஸலவாத் மஜ்லிஸை ஆரம்பித்து வைத்தார்.

நளீமிய்யா விரிவுரையாளர் அப்பாஸ் கலாநிதிப் பட்டம் பெற்றார்

பேருவளை ஜாமிஆ நளீமியாவின் விரிவுரையாளர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி) கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தின் ஹேனகெதரவில் பிறந்த இவர், ஹேனகெதர முஸ்லிம் வித்தியாலயம், மடிகே மிதியால முஸ்லிம் மஹா வித்தியாலயம் ஆகியவற்றில் தனது ஆரம்ப கல்வியை பெற்று, பின்னர் ஜாமிஆ நளீமிய்யாவில் கல்வியைத் தொடர்ந்தார்.

இறுதிப்பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்த இவர்,1990 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொதுக் கலைத் துறையிலும் 1995 ஆம் ஆண்டு அரபு மொழியில் சிறப்புத் துறையிலும் பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1997 ஆம் வருடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் Diploma கற்கை நெறியைப் பூர்த்தி செய்த இவர், மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் 2011 முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கம்பளை ஸாஹிரா கல்லூரியிலும் ஆசிரியராக கடமையாற்றிய இவர். மீண்டும் 2008 ஆம் ஆண்டு ஜாமிஆ நளீமிய்யாவில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

2016 ஆம் ஆண்டு மலேசியாவுக்குச் சென்ற அவர், அங்குள்ள சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின், பிக்ஹ், உஸூலுல் பிக்ஹ் பீடத்தில் (இஸ்லாமிய சட்டப் பரப்பில் செயல்களும் அவற்றின் விளைவுகளும் இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களுடன் தொடர்பான ஆய்வு) எனும் தலைப்பில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவிலிருந்து கலாநிதிப்பட்டத்தை பெற்று, நாடு திரும்பியுள்ள இவர், தற்போது ஜாமிஆ நளீமிய்யாவில் விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார்.

மஹ்மூத் ஆலிம் ப்ளேஸ் பெயர்ப்பலகை திரைநீக்கம்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் ஏழாம் வட்டாரத்தின் "மஹ்மூத் ஆலிம் ப்ளேஸ்" வீதிப் பெயர்ப்பலகையை, புத்தளம் நகரபிதா எம்.எஸ். எம்.ரபீக் அண்மையில் திரைநீக்கம் செய்து வைத்தார்.

காஸிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நகர சபை உறுப்பினர் ஆரிப் சிஹானின் வேண்டுகோளில் காஸிமிய்யா அரபு கலாசாலை பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த பெயர்ப்பதாதை அமைக்கப்பட்டது.

இலங்கை வாழ் முஸ்லிம்களால் கௌரவமாக பெரிய ஹஸரத் என்று அழைக்கப்படுபவர் இவர். காஸிமிய்யா அரபு கலாசாலையின் அதிபராக சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக

கடமையாற்றிய மஹ்மூத் அப்துல் மஜீத் அவர்கள், இனமத பேதமின்றி சேவையாற்றி அனைத்து சமூகத்தினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இந்நிகழ்வில், அவரது பெருமைகள் நினைவுகூரப்பட்டன. காஸிமிய்யா கலாசாலை நிர்வாகத்தினரிடம் குறைநிறைகளை கேட்டறிந்த நகரபிதா ரபீக், எதிர்கால அபிவிருத்திகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினார்.

மஹ்மூத் ஆலிம் பிளேஸ் என்பது மன்னார் நெடுஞ்சாலையின் காஸிமிய்யா மத்ரஸா உள்ளக வீதியில் ஆரம்பித்து ஐந்தாம் குறுக்கு தெருவை ஊடறுத்துச் சென்று கடற்கரை லைட் ஹவுஸ் வரையிலான பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான ஆரிப் சிஹான், ரனீஸ் பதூர்தீன், அஷ்ஷெய்க் ஷாபி ஸஹ்தி உள்ளிட்ட கலாசாலையின் உலமாக்கள், நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சுபிட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் பிரகாரம் "உங்களுக்கு வீடு நாளைய தேசம்" வீடமைப்புத் திட்டத்தின் கீழ், மதுகம பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு வீடு வழங்கப்பட்டுள்ளது. இக் குடும்பத்தினர் ஏற்கனவே வாழந்த பழைய வீட்டை படத்தில் காணலாம்.

படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

தேசிய பாலுற்பத்தி வலயம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

திறப்பனை தினகரன் நிருபர்

நாட்டின் அனைத்து மகாவலி வலயங்களையும் கேந்திரமாகக்கொண்டு, தேசிய பால் உற்பத்தி வலயம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக, கால் நடை வளர்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான வேலைத் திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.மகாவலி அமைச்சுடன் இணைந்து இவ்வேலைத் திட்டத்தை நடைமுறை படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய பால் உற்பத்தி திட்டத்திற்குரிய விவசாயிகளை தெரிவு செய்யும் பணிகளும் தற்போது ஆரம்பமாகி உள்ளன.

இதன்கீழ், இவ்வருடத்தில் திரவ பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திறப்பனை சர்வதேச விவசாய பாடசாலை இவ்வருட நடுப்பகுதியில் திறக்கப்படும்

திறப்பனை தினகரன் நிருபர்

திறப்பனை சர்வதேச விவசாய பாடசாலையின் நிர்மாண பணிகளை,ஆறு மாத காலப் பிரிவுக்குள் பூர்த்தி செய்து மாணவரின் பாவனைக்கு கையளிக்கவுள்ளதாக "சுகுறு தேசகுனிக்க" வேலை திட்டத்தின் ஊடாக பிரிவு தெரிவித்துள்ளது.இவ்வருடத்தின் நடுப்பகுதியில் (மே) இதன் வேலைத் திட்டங்களை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.விவசாயத்துடன் தொடர்புடையவர்களை நாட்டுக்கு அறிமுகப் படுத்துவதற்காக, இந்த சர்வதேச பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.விவசாயக் கல்வியுடன் சேர்த்து,பல்வேறு விவசாய ஆராச்சிகளுடன் விவசாயிகளுக்கு இதன் கீழ் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.இதன் கீழ் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற விவசாயிகளை, நாட்டுக்குள் அழைத்து வந்து அவர்களின் அனுபவம், திறன் ஆகியவற்றை பெற்றுக் கொடுக்கவும் இப்பாடசாலையூடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

திகதி 24.01.2022 www.nlb.lk NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4657
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,793,200.00
ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 2 9 4 8 6 1 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,517,500.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2952
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,977,580.00
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கங்கள் 07 46 72 78 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,604,478.00

Mega POWER மேகா பவர் மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 1005 ரூ. 4,935,060.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 183,437,722.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 09014
ஆங்கில எழுத்து B | சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கங்கள் 22 40 46 65

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 0687
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,819,940.00
R | 30 42 57 66 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,904,802.40
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 0349
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,521,800.00
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 50 64 71 73 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,249,738.40

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் : 1687
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,363,340.00
ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கங்கள் 30 65 75 97 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,290,680.30

ஜாதிக லொதரயி மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.L. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை

அலுவலகமொன்றிற்கு கட்டிடம் ஒன்று தேவைப்படுகின்றது
பயாகல பொறுப்பாளரின் அலுவலகத்திற்கு
கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல்

நீர் வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை

Contract No.: W-S/P&C/RENT(01)/KAL/O&M/2021/90

பேருவளை பிரதேச பொறியியலாளரின் அலுவலக நிருவாகத்தின் கீழ் பயாகல பொறுப்பாளரின் அலுவலகத்திற்காக 2 வருட காலப்பகுதிக்கு கட்டிடமொன்று தேவைப்படுகின்றது. இது தொடர்பாக மொறட்டுவ, அங்குலான புகையிரத நிலைய வீதியின் 07 ஆம் இலக்கத்திலுள்ள பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய ஆதரவு நிலையம் (மேற்குத்திசை-தெற்கு) மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை ஆகியனவற்றால் ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் தேவைப்படுத்தலானது கட்டிடமொன்றை அல்லது வீடொன்றை 1100 ச.அடி. தரைப் பரப்புடன் (வாகனங்களை நிறுத்துவதற்காக 400 ச.அடி தரைப்பரப்பு அடங்கலானது) வாடகைக்கு பெற்றுக் கொள்வதாகும். இந்த கட்டிடமானது பயாகல நீர் தாங்கியிலிருந்து 750 மீற்றர் தொலைவிலும் காலி வீதியிலிருந்து 150 மீற்றர் ஆக இருத்தல் வேண்டும். இந்த இடமானது பிரதான பஸ் பாதைக்கு முகப்பாகவும் அதனை அடைவதற்கு 20 அடி அகலமுள்ள பாதையொன்றாகவும் இருத்தல் வேண்டும். காணியின் எல்லைகள் தெளிவாக காட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பாதுகாப்பு சுவர்/வேலியொன்று இருத்தல் வேண்டும்.

நீர் சேவை, கழிவறை வசதிகள், மின்சாரம், முறையான காற்று வசதி முறைமை, தொலைபேசி வசதிகள் ஆகியன இருப்பதுடன் விலைமனுதாரர் உரிமைக்காரராக இருப்பதுடன் அல்லது காணிக்கான அற்றோணித்தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆகக்கூடிய முற்பணக்கொடுப்பானது வாடகையின் 6 மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

விலைமனு படிவங்கள் கிடைக்குமிடம்	- பிராந்திய ஆதரவு நிலையம் (மேற்கு திசை-தெற்கு), இல. 07, அங்குலான புகையிரத நிலைய வீதி, மொறட்டுவ அல்லது களுத்துறை முகாமையாளரின் அலுவலகம், இல.15, குரே பாதை, களுத்துறை.
விலைமனு படிவங்கள் வழங்கும் நேரம் மற்றும் இறுதித் திகதி	- வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் - 2022.02.10 ஆம் திகதியன்று வரையும்.
விசாரனைகள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களை ஒப்படைத்தல்	- பிரதி பொது முகாமையாளர் பிராந்திய ஆதரவு நிலையம் (மேற்குத்திசை-தெற்கு), இல. 07,அங்குலான புகையிரத நிலைய பாதை, மொறட்டுவ. தொலைபேசி: 011-2224888/ தொலைநகல்: 011-2637945
ஒப்படைத்தலுக்கான இறுதித் திகதி மற்றும் விலைமனுக்களை திறக்கும் நேரம்	- 2022.02.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு (தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

பிரதி பொது முகாமையாளர் (மேற்குத்திசை-தெற்கு)
பிராந்திய ஆதரவு நிலையம் (மேற்குத்திசை-தெற்கு)

SLTB

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை

இலங்கைத் தேயிலைச் சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கான பாதுகாப்பு சேவையினை வழங்குதல் 2022 – (7 மாதங்களுக்கு)

கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 574 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தேயிலைச் சபையினால் இலங்கைத் தேயிலைச் சபையின் ஏழு (07) பிராந்திய அலுவலகங்களுக்காக பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வரவேற்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 2022 பெப்ரவரி 15ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் முத்திரையிடப்படப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

1. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், வத்துரான வீதி, பதுரலிய.
2. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், இல.34, கங்காராம குருக்கு வீதி, மாகால்ல, காலி.
3. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், இல.140, அம்பகமுவ வீதி, கம்பளை.
4. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், இல.4, விசாகா மாவத்தை, பண்டாரவளை.
5. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், இல.23, உயன்வத்தை, அளுத்மாவத்தை, மாத்தறை.
6. இலங்கை தேயிலை சபை பிராந்திய அலுவலகம், இல.61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
7. இலங்கை தேயிலை சபை, பிராந்திய அலுவலகம், இல.10, கெலேகால, நானுஓயா வீதி, நுவரெலியா.

2022 ஜனவரி 26ஆம் திகதி முதல் ஒரு மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.2000/-ஐ செலுத்தி தமது உத்தியோகப்பூர்வ கடிதத்தின் மூலம் வேண்டுகோளளிப்பதால் மனுதாரர்களுக்கு கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். 2022 பெப்ரவரி 14ஆம் திகதி எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப 10.00 முதல் பி.ப 3.00 மணிக்கு இடையில் இல.574, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தேயிலைச் சபையின் பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளும் மனு ஆவணங்களின் அதன் முதற் பிரதியை இணைக்க வேண்டும். மனுக்களை முன்வைக்க வேண்டியது இலங்கைத் தேயிலைச் சபையில் பெற்றுக்கொண்ட பெற்றுக்கொண்ட ஆவணங்கள் மூலமாக மாத்திரமேயாகும். ஏல ஆவணங்களை மேற்படி முகவரியில் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபை அலுவலகத்தில் இலவசமாக பரிசோதிக்கலாம்.

இலங்கை மத்திய வங்கியினால் ஆங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட ரூ.50,000/- பெறுமதியான பிணைத்தொகையை முன்வைக்க வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியிலிருந்து 91 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். மனுக்களின் பிரதிகளை கடித உறையலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "பிராந்திய அலுவலகங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளுக்கான விலைமனுக்கள்" எனக்குறிப்பிட்டு தலைவர், கொள்முதல் குழு, இல.574, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர், இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, கொள்முதல் பிரிவில் மனுக்கள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 இல் பெற்றுக்கொள்ள முடியும் (தொலைபேசி 011 2587814, 011 2586863, 011 2582122)

தலைவர்
கொள்முதல் குழு
இலங்கைத் தேயிலைச் சபை
இல.574, காலி வீதி,
கொழும்பு 3.

சர்வதேச செய்திகள்

கண்காணிப்பு இடத்தினை அடைந்தது ஜேம்ஸ் வெப்

முப்பது நாட்களுக்கு முன் பூமியில் இருந்து ஏவப்பட்ட ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி பிரபஞ்சத்தை அவதானிப்பதற்கு விண்வெளியில் தனது நிலையை அடைந்துள்ளது.

நிலை அலைவு புள்ளி 2 என்று அழைக்கப்படும் பூமியின் இரவு பக்கத்தில் இருந்து மில்லியன் மைல்கள் (1.5 மில்லியன் கிலோ மீற்றர்) தொலைவிலேயே ஜேம்ஸ் வெப் தற்போது நிலை கொண்டுள்ளது.

இந்நிலையில் பூமியில் உள்ள கட்டுப்பாட்டாளர்கள் அந்த விண்வெளி தொலைநோக்கியை விஞ்ஞான ஆய்வுக்கு தயார்படுத்தும் பணிகளில் அடுத்த சில மாதங்களுக்கு ஈடுபடவுள்ளனர்.

இதில் இந்த கண்காணிப்பகத்தின் நான்கு உபகரணங்களை இயக்குவது மற்றும் அதன் கண்ணாடிகளை மையப்படுத்துவது, குறிப்பாக 6.5 மீற்றர் அகலமான முதன்மை பிரதிபலிப்பானை இயக்குவது உட்பட முக்கிய சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

பிரபல ஹப்பிள் விண்வெளி தொலை நோக்கிக்கு பதிலான தயாரிக்கப்பட்ட ஜேம்ஸ் வெப், பிரபஞ்சத்தில் முதலில் பிரகாசித்த நட்சத்திரங்களின் படங்களை பெறுவது மற்றும் தொலைதூர கிரகங்களை ஆய்வு செய்தல் மற்றும் அவை உயிர்வாழ தகுதியானவையா என்பதை கண்டறிவதை பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

கால்பந்து போட்டியில் நெரிசல்: எண்மர் பலி

கெமரூனில் இடம்பெற்ற ஆபிரிக்கக் கிண்ண கால்பந்து போட்டியின்போது மைதானத்திற்கு வெளியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் யவுன்டேவின் சுற்றுப்புறத்தில் உள்ள போல் பியா அரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியின்போது கால்பந்து ரசிகர்கள் அரங்கிற்குள் நுழைய முண்டியடிக்கும் வீடியோ காட்சி வெளியாகி இருந்தது.

இதில் உயிரிழந்தவர்களில் குழந்தை ஒன்றும் இருப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்போது பல சிறுவர்களும் மயக்க முற்றதாக மற்றொரு செய்தியில் கூறப்பட்டுள்ளது.

60,000 பேருக்கு இடவசதி உள்ள அரங்கில் கொவிட் கட்டுப்பாடுகள் காரணமாக 80 வீதத்திற்கு மேல் மைதானம் நிரம்பி இருக்கவில்லை. சுமார் 50,000 பேர் மைதானத்திற்குள் நுழைய முயன்றதாக போட்டி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நடைபெறும்போது கெமரூன் மற்றும் கொமொரோஸ் நாடுகளுக்கு இடையிலான போட்டி இடம்பெற்றது. இதில் கெமரூன் 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

ரஷ்யப் பதற்றத்திற்கு இடையில் நேட்டோ படை தயார் நிலையில்

8,500 அமெரிக்க துருப்புகளை நிலைநிறுத்தத் திட்டம்

ரஷ்யாவுடனான பதற்ற சூழலில் நேட்டோ தனது படைகளை தயார் நிலையில் வைத்திருப்பதோடு தென் கிழக்கு பக்கமாக மேலதிக துருப்புகள் அனுப்பப்படக் கூடும் என்றும் மேலதிக போர் விமானங்கள் மற்றும் ஆயுதங்களுடன் கிழக்கு ஐரோப்பா பிராந்தியம் பலப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உக்ரைன் விவகாரம் தொடர்பிலான பதற்றத்தை இது அதிகரிப்பதாக ரஷ்யா கண்டித்துள்ளது.

அண்மைய நாட்களில் கூட்டணி நாடுகளின் நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புகளை வரவேற்ற நேட்டோ செயலாளர் நாயகம் ஜென்ஸ் ஸ்டொல்டன்பேர்க், நேட்டோ தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று குறிப்பிட்டார்.

உக்ரைன் எல்லைக்கு அருகில் 100,000 துருப்புகளை ரஷ்யா நிலை நிறுத்தி இருக்கும் நிலையில் மேற்கத்தேய நாடுகளின் இந்த நடவடிக்கைகள் அந்தப் பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

'எமது பாதுகாப்பு நிலையில் ஏற்படும் எந்த ஒரு ஆபத்தான சூழலுக்கும் எமது கூட்டுப் பாதுகாப்பை பலப்படுத்துவது உட்பட நாம் எப்போதும் பதில் நடவடிக்கையை மேற்கோண்டு வருகிறோம்' என்று ஸ்டொல்டன்பேர்க் வெளியட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

நேட்டோ கிழக்கு பக்கத்தில் தனது நிலையை அதிகரிப்பதில் மேலதிக நேட்டோ போர்ப்படைகளை நிலை நிறுத்துவதும் அடங்கும் என்று அவர் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

'கூட்டணியின் தென்கிழப்புப் பக்கமாக போர்க் குழுக்களை ஏற்படுத்துவது பற்றியும் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை, பீரங்கிகள், வான் பாதுகாப்பு மற்றும் உளவு மற்றும் கண்காணிப்பு பிரிவுகளின் உதவியுடன் எஸ்தோனியா, லிதுவேனியா, லத்வியா மற்றும் பொலந்தில் சுமார் 4,000 பன்னாட்டு துருப்புகளை நேட்டோ நிலைநிறுத்தியுள்ளது.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு பற்றியை கூற்றை ரஷ்யா தொடர்ந்து நிராகரித்து வருகிறது. எனினும் ரஷ்ய துருப்புகள் உக்ரைனின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பக்கமாக சுற்றி வளைத்த நிலையில் உள்ளன. இந்நிலையில் மேற்கத்தேய நாடுகளின் பதில் நடவடிக்கைகள் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதாக உள்ளது என்று ரஷ்யா கூறகிறது.

ஐரோப்பாவில் நிலைநிறுத்துவதற்கு தயாராக 8,500 துருப்புகளை உஷார் நிலையில் வைத்திருப்பதாக அமெரிக்க இராணுவம் கடந்த திங்கட்கிழமை அறிவித்தது. எனினும் துருப்புகளை நிலைநிறுத்துவது பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று பெண்டகன் பேச்சாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யாவின் படைக்குவிப்புக்கு பதில் அளிப்பது பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஐரோப்பிய தலைவர்களுடன் வீடியோ அழைப்பு மூலம் கடந்த திங்கள் பின்னேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவுக்கு துருப்புகள், விமானங்கள் மற்றும் கப்பல்களை அனுப்புவது பற்றி டென்மார்க், ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து நாடுகள் திட்டமிட்டிருப்பதாக நேட்டோ தெரிவித்துள்ளது. உக்ரைன் போலந்து, ஸ்லோவாக்கியா, ஹங்கெரி மற்றும் ருமேனியா ஆகிய நான்கு நேட்டோ நாடுகளுடன் எல்லையை பகிர்ந்துகொண்டுள்ளது.

உக்ரைனுக்குள் துருப்புகளை அனுப்புவது பற்றி போலந்து திட்டத்தை வகுத்திருப்பதாக அந்நாட்டு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பதற்ற சூழலில், உக்ரைனில் உள்ள தூதரகத்தில் உள்ள சில ஊழியர்கள் மற்றும் சார்ந்திருப்போரை பிரிட்டன் திரும்ப அழைத்துக் கொண்டதோடு அமெரிக்காவும் அதன் உக்ரைன் தூதரக பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களை வெளியேறுவதற்கு உத்தரவிட்டது.

ஒஸ்லோ சென்ற தலிபான் பிரதிநிதிகளுக்கு எதிர்ப்பு

நோர்வே சென்றுள்ள ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசின் வெளிவிவகாரப் பதிலமைச்சர் அமீர் கான் முத்தகி தலைமையிலான தலிபான் பிரதிநிதிகள் குழுவுக்கு எதிராக ஒஸ்லோவிலுள்ள ஆப்கானியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

தலிபான்களின் ஆப்கானிய இஸ்லாமிய எமிரேட்ஸ் ஆப்கான் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்ததாக யூரோ நியூஸ் குறிப்பிட்டுள்ளது.

தலிபான்கள் அமெரிக்காவின் பயங்கரவாதத் தடைப்பட்டியலில் உள்ளனர். அவர்களுடன் நோர்வே பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெளிவிவகாரப் பதிலமைச்சர் முத்தகி தலைமையிலான இக்குழுவினர், நோர்வே மற்றும் பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விஷேட பிரதிநிதிகளை சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நோர்வே வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில், தலிபான்களுக்கான அழைப்பும் அவர்களுடனான பேச்சுவார்த்தையும் அவர்களை அங்கீகரிப்பதாக அர்த்தமாகாது. ஆனால் ஆப்கானிஸ்தானில் நிலவும் மனிதாபிமான நிலைமை நிவர்த்தி செய்யப்படுவது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

புர்கினா பாசோ: ஆட்சியை கைப்பற்றியது இராணுவம்

புர்கினா பாசோ இராணுவம் அந்நாட்டு ஜனாதிபதி ரொச் கபோரேவை பதவி கவிழ்த்து ஆட்சியை கைப்பற்றியதாக அறிவித்துள்ளது.

இராணுவ அதிகாரி ஒருவரினால் அரச தொலைக்காட்சியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதே இராணுவம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு காரணமாக கூறியுள்ளார்.

இஸ்லாமியவாதிகளின் தாக்குதல்களை தடுப்பதில் தோல்வி அடைந்ததாக கபோரே மீது அதிருப்தி அதிகரித்து வந்தது.

அவர் தற்போது எங்கே உள்ளார் என்று தெரியாதபோதும் கைது செய்யப்பட்ட அனைவரும் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவம் குறிப்பிட்டது.

தலைநகர் ஒவாகடுகோவில் ஜனாதிபதி மாளிகை இராணுவ முகாம்களில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்ட சம்பவங்களுக்கு அடுத்த தினமே இந்த இராணுவ சதிப்புரட்சி பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முன்னதாக கலகத்தில் ஈடுபட்ட துருப்புகள் இராணுவத் தளபதிகளை நீக்கும்படியும் ஐ.எஸ் மற்றும் அல் கொய்தாவுடன் தொடர்புபட்ட குழுக்களுக்கு எதிரான போருக்கு போதிய வளங்களை தரும்படியும் கோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசிய பப்புவாவில் இன மோதல்: 18 பேர் பலி

இந்தோனேசியாவின் மேற்குப் பப்புவா பகுதியில் உள்ள சோரோங்கில் இரு கும்பல்களுக்கு இடையிலான மோதலில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கலவரத்தால் அங்குள்ள இரவு விடுதி ஒன்றில் தீ மூண்டது. கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் கலவரம் வெடித்தது. ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். மேலும் 17 பேர் தீ விபத்தில் உயிரிழந்தனர்.

அவர்களின் உடல்கள் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக சோரோங் பொலிஸார் தெரிவித்தனர். இரு இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட இந்த மோதலின்போது கத்தி, அம்பு மற்றும் பெட்ரோல் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக இந்தோனேசிய பொலிஸ் பேச்சாளர் அஹமது ரமதான் தெரிவித்தார். 'மேற்கு பபுவா பிராந்திய பொலிஸார் மேலும் வன்முறைகள் இடம்பெறுவதை தவிர்க்க சமய மற்றும் பாராம்பரிய தலைவர்களுடன் உடனடியாக ஒருங்கிணைந்து செயற்பட்டனர்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீயினால் கருகிப்போன கட்டடம், எரிக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவை சமூக ஊடகங்களில் பரவிய புகைப்படங்களில் பதிவாகின. தீ எவ்வாறு மூண்டது என்பதைக் கண்டறியும் விசாரணை தொடர்கிறது.

தென்சூடான் இனக்குழு மோதலில் 32 பேர் பலி

தென் சூடானில் இடம்பெறும் இனக் குழுக்களுக்கு இடையிலான மோதலில் ஆயுதக் குழுக்களின் தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 32 பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பதற்றம் கொண்ட ஜொங்விமாநிலத்தில் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி இரு கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பொதுமக்கள் வெளியேறி உள்ளனர். இதன்போது போட்டி இனக்குழுவினர் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டிருப்பதோடு சொத்துகளுக்கும் தீவைத்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் தப்பிச் செல்ல முயன்றபோது ஆற்றில் மூழ்கி பலியான சிறுவர்களும் இருப்பதாக தென் சூடானின் ஐ.நா அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட குறைந்தது 26 பேர் காயமடைந்திருப்பதோடு மேலும் சிலர் காணாமல்போயுள்ளனர்.

2011 ஆம் அண்டு தென் சூடான் சுதந்திரம் பெற்றபோது அங்கு நிறுத்தப்பட்ட அமைதிகாக்கும் படை, சிவில் யுத்தம் மற்றும் இன வன்முறை காரணமாக தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளது.

46 பேரை பலி கொண்ட தீ: பெண் மீது குற்றச்சாட்டு

தனது காதலனைப் பழிவாங்குவதற்காகத் தீ மூட்டிய தாய்வானியப் பெண் மீது கொலை, வேண்டுமென்றே தீவைத்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடந்த இச் சம்பவத்தில் 46 பேர் உயிரிழந்ததோடு பலர் காயமுற்றனர்.

காவ்சியுங் நகரில் அதிகாலை 2 மணி அளவில் 13 மாடி உயரமான கட்டடத்தில் தீ மூண்டது. பல மணிநேரமாகக் கட்டடம் தீப் பற்றி எரிந்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட பெண், வேண்டுமென்றே தனது காதலனின் இருக்கையில் ஊதுபத்தியிலிருந்து வரும் சூடான சாம்பலைக் கொட்டியதாகக் கூறப்பட்டது.

தீச்சம்பவத்திற்குப் பின் தடுத்துவைக்கப்பட்ட அந்தப் பெண் மீது தற்போது கொலை, வேண்டுமென்றே தீவைத்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பலரைப் பலிகொண்ட இந்த சம்பவத்திற்காக அவர் எவ்வித வருத்தமும் காட்டவில்லை என்று அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்

பிரிட்டன் செல்வோருக்கான கட்டுப்பாட்டில் மேலும் தளர்வு

பிரிட்டன், முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகள் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறையை விரைவில் நீக்கவுள்ளது.

அடுத்த மாதம் 11 ஆம் திகதியிலிருந்து, ஒரு படிவத்தில் பயணிகள் தங்களின் தடுப்பூசித் தகுதியை உறுதி செய்தால் போதும்.

பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்துகளை இரண்டு முறை செலுத்திக் கொண்டவர்கள் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களாகக் கருதப்படுவர்.

முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் பயணத்துக்கு முன்னர் வைரஸ் தொற்று இல்லை என்ற சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும், பிரிட்டன் சென்றதும் பீ.சி.ஆர் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

சீனா, மெக்சிகோ உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட நாடுகளின் தடுப்பூசிச் சான்றிதழ்களைப் பிரிட்டன் அங்கீகரிக்கிறது. இதற்கிடையே, அங்கு புதிதாக 88,000 பேருக்குக் வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவோர் எண்ணிக்கை சற்றே அதிகரித்தாலும், கடந்த வாரத்துடன் ஒப்புநோக்க அது 7 வீதம் குறைந்துள்ளது.

நோய்த்தொற்றுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர், உயிரிழப்போர் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன)

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோடு மாத்திரம் இடுக.

★ செய்கை வேலைக்காக தாள் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

I. பந்தியை வாசித்து விடை தருக.

முன்னொரு காலத்திலே ஒரு காட்டிலே தந்திரமான நரி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்நரிக்கு மிகவும் பசியெடுத்தது. அது காட்டிலே அங்குமிங்கும் அலைந்து திரிந்தது. கடைசியாக திராட்சைக் கொடியைக் கண்டது. அந்த திராட்சைக் கொடியிலே திராட்சைப் பழங்கள் குலைகுலையாக காய்த்துத் தொங்கின. நரி மகிழ்வுடன் திராட்சைப் பழங்களைத் தின்று பசியாறியது.

1. நரி எதைத் தின்று பசியாறியது?

……

2. இங்குள்ள இணைமொழியினைக் குறிப்பிடுக.

……

3. இப்பந்தியிலுள்ள பெயரடைமொழி ஒன்றினை எழுதுக.

……

4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடுக்குத் தொடர் எழுதுக.

……

5. இதிலுள்ள அ.ஃறினை, ஒருமை, பெயர்ச்சொல்லை எழுதுக.

……

6. ஒத்த கருத்து எழுதுக.

i. காட்டிலே - ……

ii. கண்டது - ……

7. மகிழ்வுடன் என்பதன் எதிர்கருத்து யாது?

……

II. பொருத்தமான சொற்களை இட்டு இடைவெளி நிரப்புக.

(கடகட, துள்ளித்துளி, ஓடியாடி)

8. வெள்ளை முயல் …… ஓடியது.

9. மாணவர்கள் மைதானத்தில் …… விளையாடினர்.

10. புகைவண்டி …… என வேகமாக ஓடியது.

III. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடரை பூரணப்படுத்துக.

11. பூனை / அடுப்பங்கரையை / சூடுகண்ட / நாடாது

……

12. வேண்டாம் / போகவிட்டு / திரிய / புறஞ்சொல்லி

……

13. பின்வரும் பெண்பால் வாக்கியங்களை ஆண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

i. எனது அக்கா பாட்டு பாடினாள்.

……

ii. அவரது மருமகள் கண்டியில் வசிக்கின்றாள்.

……

14. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

i. பென்சில் - அ.ஃறினை, ஒருமை பெயர்ச்சொல்லாகும் ( )

ii. நாம் - தன்மை, பன்மை வினைச்சொல்லாகும் ( )

15. கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. நான் புத்தகத்தை வாங்குவேன்.

……

ii. அவர்கள் சந்தைக்குச் செல்வார்கள்.

……

16. நான் பூக்களை பறித்து மாலை கட்டினேன். இவ்வாக்கியத்திலுள்ள சினைப்பெயர் யாது?

……

17. சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.

i. இ.மி.ச. ……

ii. கி.மு. ……

18.

i. படத்திலுள்ள பறவையின் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.

……

ii. கத்தரிக்காய் - இதன் கருத்தை ஆங்கில சொல்லாக எழுதுக.

……

iii. I live in Sri Lanka - இதன் கருத்தை தமிழில் எழுதுக.

……

19. பின்வரும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. இனிய புதுவருட வாழ்த்துக்கள்

……

ii. நான் வெளியே போகவா ?

……

20. பிரித்தெழுதுக.

i. மரங்கொத்தி - ……

ii. கற்பாறை - ……

21. 

இவ்வுருவில் இன்னும் 2/8 பங்கை நிழற்றிய பின் எஞ்சியுள்ள பகுதியை பின்னமாகத் தருக.

……

22. 79,430 என்ற எண்ணில்

i. 9ன் பெறுமானம் யாது?

……

ii. 4 ன் இடப்பெறுமானம் யாது?

……

23. எழுத்தில் தரப்பட்ட எண்ணை 3 ஆல் பெருக்கினால் வரும் விடையை இலக்கத்தில் தருக.

எழுநூற்று முப்பத்திரண்டு - ……

24. 

= 9

= 6

= 10

இதன் அடிப்படையில் கீழேயுள்ள உருக்களின் மதிப்பினை அறிக.

i. = ……

ii. = ……

iii. = ……

25.

இந்த கடிகாரம் காட்டும் நேரம் முற்பகல் எனில் இதனை 24 மணித்தியால நேரமாக எழுதுக.

……

26. ஒரு கூடையில் 36 பந்துகள் இருக்கின்றன. அவற்றில் 2/3 பங்கை வெளியே எடுத்தால் மிகுதியாக உள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது?

……

27. 

இந்த கொடிகளின் எண்ணிக்கையை 7ல் பெருக்கி இரண்டால் வகுத்து வருகின்ற விடையுடன் 15ஐக் கூட்டினால் வருவது?

……

(10ஆம் பக்கம் பார்க்க)



புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

09 ஆம் பக்கத் தொடர்

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

28. 4 *l* பெற்றோலில் 60 km செல்லும் ஒரு மோட்டார் வாகனம் 6 *l* பெற்றோலில் எவ்வளவு தூரம் செல்லும்?

.....

29. 5613 → 3165
2739 → 9372
4586 → 6854
3162 → .....
இடைவெளிக்கு பொருத்தமான எண்ணை மேற்கூறிய தகவலுக்கமைய கண்டறிக.

30. சிவப்பு வர்ணத்திற்கு எதிர்வர்ணம் யாது?
i. நீலம் ii. சிவப்பு iii. பச்சை

31. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
i. 16 ii. 7 iii. 6

32. பின்வருவனவற்றுள் கொடிவகைத் தாவரம் அல்லாதது?
i. வெற்றிலை ii. மிளகு iii. துளசி

33. பானம் தயாரிக்கப் பயன்படும் வித்து
i. எள்ளு ii. கோப்பி iii. தேயிலை

34. எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவையானது
i. சுகாதாரம் ii. மின்சாரம் iii. போக்குவரத்து

35. இஸ்லாமியர்களின் புனித நூல்
i. திருவிவிலியம் ii. திரிபீடகம் iii. திருக்குர்ஆன்

36. பொருளாதார நன்மை பயக்கும் பிராணி அல்லாதது?
i. நாய் ii. கோழி iii. கிளி

37. இலங்கைக்கே உரிய தாவரம்
i. வேம்பு ii. எண்ணை iii. தேக்கு

38. தேசப்படத்தில் நதிகளைக் குறிக்கும் நிறம்
i. பச்சை ii. ஊதா iii. நீலம்

39. மஞ்சள் நிற காய்கறிகளிலும் பழங்களிலும் அதிகம் காணப்படும் விற்றமின்
i. விற்றமின் A ii. விற்றமின் B iii. விற்றமின் C

40. துருத்தி பயன்படுத்தப்படும் தொழிலாக அமைவது
i. தச்சுத் தொழில் ii. இரும்புத் தொழில் iii. நெசவுத்தொழில்

41. மயக்கமுற்ற நோயாளிக்கு செய்யக்கூடாத செயல்
i. நீரைப் பருக்குதல் ii. ஆடைகளைத் தளர்த்தல்
iii. காற்று வீசுதல்

42. பயிர்ச்செய்கைக்கு நன்மை பயக்காத பறவை
i. கிளி ii. செண்பகம் iii. ஆந்தை

43. உடல் பருமனால் ஏற்படக்கூடிய விளைவானது
i. டெங்கு ii. நீரிழிவு iii. மலேரியா

44. இரவில் இலை சுருங்கும் தாவரமானது
i. அகத்தி ii. கறிவேப்பிலை iii. வேப்பிலை

45. இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையமானது
i. இரத்மலானை ii. பலாலி iii. கட்டுநாயக்கா

46. பின்வருவனவற்றுள் சிறந்த தலைமைத்துவ பண்பானது
i. நேர முகாமைத்துவம்
ii. தான் விரும்பியவாறு செயற்படல்
iii. மற்றவர்களை அடிமைப்படுத்துதல்

47. புரதம் பெருமளவு அடங்கியுள்ள விலங்குணவு
i. நண்டு ii. இறால் iii. பால்

48. வீதியின் குறுக்கே மரம் முறிந்து கிடந்தது. இதற்கான காரணம்
i. மழை தொடர்ச்சியாக பெய்தல்
ii. காற்று வேகமாக வீசுதல்
iii. மரத்தை வெட்டுதல்

49. இலங்கையை இறுதியாக ஆட்சி செய்த வெளிநாட்டவர்
i. ஒல்லாந்தர் ii. போர்த்துக்கீசர் iii. பிரித்தானியர்

50. சட்டக்காந்தம் ஒன்றினால் கவரப்படுவது
i. இரும்பு ii. பித்தளை iii. தங்கம்

51. "வானிலிருந்து விழும் ஒரு நீர்த்துளியேனும் பயன்படுத்தாமல் கடலைச் சென்றடைய விடமாட்டேன்" எனக் கூறிய மன்னன்
i. துட்டகைமுனு ii. மகாசேனன் iii. மகா பராக்கிரமபாகு

52. எமது நாட்டின் பிரதான வர்த்தக நகரம் அமைந்துள்ள மாகாணம்
i. மத்திய மாகாணம் ii. மேல் மாகாணம்
iii. வட மாகாணம்

53. எமது நாட்டில் அதிகமாக நிகழும் இயற்கை அனர்த்தம்
i. வெள்ளப்பெருக்கு ii. சூறாவளி iii. சுனாமி

54. மின்காந்த பயன்பாட்டின் மூலம் வேலையை இலகுபடுத்தும் கருவி
i. கப்பி ii. மின் பாரந்தூக்கி iii. நெம்புகோல்

55. காகிதங்களை கிழித்து ஒட்டி செய்யப்படும் அலங்காரம்
i. ஒரிகாமி ii. கொலாஞ் iii. ஒட்டுச்சித்திரம்

56.
இதன் பயனாக அமைவது
i. கப்பலை கடலில் நிலை நிறுத்த
ii. கப்பலை செலுத்த
iii. கப்பலிலிருந்து மீன்பிடிக்க

57. ஆதிகால தகவல் தொடர்பாடல் முறைகளில் ஒன்று
i. முரசு ii. கடிதம் iii. பத்திரிகை

58. கைப்பணி பொருட்கள் தயாரிக்க பயன்படுவது
i. வைக்கோல் ii. பன்புல் iii. கோரைப்புல்

59. இலங்கைக்கு புனித வெள்ளரச மரக்கிளையைக் கொண்டு வந்தவர் யார்?
i. பிக்குணி சங்கமித்தா ii. விஜயம்
iii. மகிந்த தேரர்

60. "நான் ஒரு அழகிய கிளி" என்ற தலைப்பில் கருத்துப்புலப்பட எழுவாய் பயனிலை இடைத்தொடர்புடைய 3 வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
1. .....
2. .....
3. .....

கடந்த வார (05.01.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

01	2	11	1	21	3	31	2
02	1	12	1	22	2	32	1
03	3	13	3	23	2	33	1
04	3	14	2	24	3	34	3
05	1	15	2	25	1	35	3
06	2	16	1	26	2	36	1
07	2	17	2	27	1	37	1
08	1	18	1	28	1	38	2
09	2	19	3	29	3	39	3
10	1	20	3	30	2	40	2

இலங்கையின் சுதந்திரத்துக்கு பாடுபட்ட தேசிய தலைவர்கள்

டி. எஸ். சேனநாயக்க

ஆனந்த குமாரசுவாமி

எப்.ஆர். சேனநாயக்க

டி.பி. ஜயதிலக்க

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க

சேர். பொன். இராமநாதன்


எம்.எஸ். சித்திலெப்பை

டி.பி. ஜாயா

புலமைப் பரிசில் வழிகாட்டி மீண்டும் மாணவர் கரங்களில்!

மாணவச் செல்வங்களே...

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிவடைந்துள்ளது. அடுத்த பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் நன்மை கருதி இன்று முதல் வாரம் தோறும் 'புலமைக் கதிர்' மாதிரி வினாத்தாள் வழிகாட்டி வெளிவருகின்றது.

அதேசமயம், புலமைக் கதிருக்கு மேலதிகமாக மாணவர்களின் ஆற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் வாரம் ஒரு தடவை வெள்ளிக்கிழமை தோறும் (நாளைமறுதினம்) மற்றொரு வினாத்தாள் வழிகாட்டி தினகரனுடன் வெளிவருகின்றது.

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்காக தினகரன் வழங்கும் இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள்!

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
11
2022 ஜனவரி 26
புதன்கிழமை

சட்டவிரோத மணல் அகழ்வினால் இரணைமடுகுளத்திற்கு பெரும் ஆபத்து

(பரந்தன் குறூப் நிருபர்,கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினால் மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரும் வளமான இரணைமடுகுளத்திற்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதிகேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் (24012022) மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சட்டவிரோத மணல் அகழ்வுகளால் மாவட்டத்திலிருக்கும் மிகப் பெரிய வளத்தை நாங்கள் இழக்க முடியாது. இதனால் ஏற்படும் அழிவுகள் ஆபத்துக்கள் மிக அதிகம். எனவே அனைவரும் இதில் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அதிகாரிகளாகிய நாங்கள் இன்று இங்கே கடமையில் இருப்போம் சில வருடங்களுக்குள் சென்று விடுவோம் ஆனால் இந்த சமூகமும் மக்களும் இப்பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருக்கப் போகின்றார்கள். ஆகவே சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும்.

குறிப்பாக இங்கே இருக்கின்ற ஒரு பெரிய வளமான இரணைமடு குளத்தின் கீழ் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் பெரிய ஒரு வளத்தை நாங்கள் இழந்து போக முடியாது. இதனால் ஆபத்துக்களும் அழிவுகளும் அதிகமாக இருக்கும். எனவே சமூகத்தினுடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக மிக அவசியமானது. அந்த அடிப்படையிலேயே குறிப்பாக முதற்கட்டமாக ஐந்து இடங்களில் இராணுவ காவலரண்களை அமைத்து அதன் மூலம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இதனைகட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கு கமக்காரர் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இடங்களை அடையாளப்படுத்தி காவலரண்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருடர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி குடும்பஸ்தர் பலி

யாழ்.விசேட நிருபர்

திருடர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ராசா ரவிச்சந்திரன் (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வீதி சமிஞ்சை விளக்கு பகுதியில் நேற்றுதினம் திங்கட்கிழமை இரவு இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

சுன்னாகம் மதுபானசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது மோட்டார் சைக்கிளை தென்மராட்சியைச் சேர்ந்த இருவர் திருடி தப்பியோடுவதனை மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் கண்டுள்ளார்.

அதனையடுத்து, மோட்டார் சைக்கிள் உரிமையாளர் உள்ளிட்டோர் துரத்திச் சென்ற நிலையில் திருடர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் சுன்னாகம் சந்தி வீதி சமிஞ்சை விளக்கு பகுதியில் எதிரே வந்தவரை மோதித்தள்ளியது.

அதில் சம்பவ இடத்திலேயே அதிக குருதிப் போக்கு காரணமாக அவர் உயிரிழந்தார்.

இவ்விபத்தினை ஏற்படுத்திய இருவரும் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கள்ளியங்காடு தமிழ்கலவன் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கருதி பூமணியம்மா அறக்கட்டளையின் அனுசரணையுடன் இலங்கைக்கிளை தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கி வைத்தனர்.

மண்ணை பாதுகாக்கும் சேதன விவசாயப் புரட்சி

அரசாங்கத்தின் விசேட அபிவிருத்தி நன்கொடை நிதி மூலத்தின் கீழ் வடக்கு மாகாண சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் "சேதன பசளை மற்றும் சேதன பீடைநாசினி உற்பத்தி திட்டம்" பயனாளிகளுக்கான உதவித்திட்டங்கள் என்பன வழங்கும் நிகழ்வு நேற்று (25.01.2022) இடம்பெற்றது.

மாகாண விவசாய திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உதவித்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அங்கஜன் இராமநாதன், "வடக்கிலுள்ள 1 லட்சத்து 60 ஆயிரம் விவசாய குடும்பங்களை பாதுகாக்க வேண்டியதும் அவர்களின் விவசாயத்திற்கு பெறுமதிசேர்க்க வேண்டியதும் நமது பொறுப்பாகும், அதனடிப்படையில் இதுவரைகாலமும் இரசாயன உரகொள்வனவுக்காக வெளிநாட்டுக்கு வழங்கப்படும் பெருமளவு நிதியை பயன்படுத்தி உள்நாட்டில் சேதன உர உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்காக வழங்குவதனூடாக எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க முடியும்.

மேலும், தற்சார்பு பொருளாதாரத்தை வளர்க்கும் வகையில் எம் மண்ணிலேயே எம் வளங்களை கொண்டு விவசாய புரட்சியை செய்ய வேண்டிய தருணமொன்றாக இதை பயன்படுத்துவோம். அதனூடாக அறுவடை செய்யப்படும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து பெறுமதி சேர் ஏற்றுமதிகளாக அவற்றை மாற்றியமைத்து யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்ய முடியும்.

உதாரணமாக "சேதன விவசாயத்தின் ஊடாக பெறப்படும் காய்கறிகளுக்கு இந்தியாவில் உள்ள சந்தை வாய்ப்பை நாம் பயன்படுத்தி, யாழ் விமான நிலையத்தினூடாக ஏற்றுமதி செய்ய பெரும் வாய்பொன்று எமது விவசாய தொழில்முயற்சியாளர்களுக்கு உள்ளது. இப்படியான சாத்தியப்பாடுகளையெல்லாம் கருத்திற்கொண்டு இந்த கருவிகளை வினைத்திறனோடு பயன்படுத்துமாறு அனைத்து விவசாயிகளையும் அழைக்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.

தண்ணீரூற்று சந்தை மீது தாக்குதல்: மூவர் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்)

முள்ளியவளை தண்ணீரூற்று பொதுச்சந்தை மீது நேற்றுமுன்தினம் அதிகாலை வேளை நான்கு பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது சந்தையின் காவலாளியான 60 வயதுடைய நபர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தையினை குத்தகைக்கு எடுத்தமை தொடர்பில் எழுந்த பிரச்சினையின் விளைவாக நள்ளிரவில் வந்த கும்பல் ஒன்று அரச சொத்தான பொது சந்தைக்கு சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் உள்ள முள்ளியவளை உப அலுவலகத்திற்கு சொந்தமான பொது சந்தையே இவ்வாறு சேதப்படுத்தியுள்ளார்கள்.

இரண்டு கடைகளின் கதவுகள் சேதமடைந்துள்ளதுடன் கடைகளின் கட்டத்தினையும் பொருட்களையும் சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் உப பிரதேச சபையின் பொறுப்பதிகாரி முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். இவர்கள் தாக்குதல் நடத்தியமை சி.சி.ரிவி கமராவில் பதிவாகியுள்ளமையால் சந்தேகநபர்கள் இலகுவாக இனம்காணப்பட்டுள்ளனர். அதற்கமைய இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி – சங்கத்தானையில் ரயில் மோதி 18 வயது இளைஞன் பலி

சாவகச்சேரி விசேட , யாழ்.விசேட நிருபர்கள்

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

கொடிகாமம்இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த 18 வயதான உதயகுமார் பானுசன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அரசடி ரயில் கடவைக்கும் சங்கத்தானை ரயில் கடவைக்கும் இடைப்பட்ட பாதுகாப்பற்ற தண்டவாளப் பகுதியை கடக்க முற்பட்ட இளைஞனே இவ்வாறு ரயில் மோதி உயிரிழந்துள்ளார். கொழும்பில் இருந்து வந்த கடுகதிப் புகையிரதம் மோதியதில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தண்டவாளப்பகுதிக்கு அப்பால் உள்ள கடைக்கு சென்று விட்டு தண்டவாளத்தைக் கடந்த இளைஞன் மீண்டும் கடையில் தவற விடப்பட்ட தனது பொருள் ஒன்றினை எடுப்பதற்காக வந்த போதே ரயில் மோதித் தள்ளியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவில்

கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

24.01.2022 நேற்றுமுன்தினம் மாலை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி பகுதியில் வயலுக்கு செல்லும்போது கட்டுத்துவக்கு வெடித்துள்ளது இதன்போது 48 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்வம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

மானிப்பாயில் கோடாரிகள் வாள் என்பன மீட்பு

யாழ்.விசேட நிருபர்

மானிப்பாய் வெலக்காய் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள காணியொன்றிலிருந்து வாள்கள், மற்றும் கோடரிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அக்காணியில் மிக இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இரவு 09.30 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரினால் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் 2 கஜேந்திர கோடரிகள், நீளமான வாள் ஒன்றும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ள போதும், எவரும் கைது செய்யப்படவில்லை.

அதுதொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை மற்றும் கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையமும் இணைந்து தலைமன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பொலிஸ் நிலையம் பௌத்த விஹாரை, கிறிஸ்தவ தேவாலயங்கள், தமிழ் பாடசாலை ஆகியன 5 பிரதான இடங்களில் சுத்தமான குடி நீர் விநியோகம் பொது மக்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டது. நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட், மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் எம். பி. எம். சரூக் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர். இக்பால் அலி

கிழக்கின் குரல்

கல்முனை சுகாதார துறை அபிவிருத்திக்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் றிபாஸ்

(பாலமுனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சிறந்ததொரு கட்டமைப்பினைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் கடந்தகால செயற்பாடுகள், இங்குள்ள உத்தியோகத்தர்களின் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புக்கள் பாராட்டத்தக்கதாகும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்றுக் கொண்ட வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸுக்கு திங்கட்கிழமை (24) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் யுனிசெப்பில் கடமையாற்றிய போது இலங்கையில் உள்ள அத்தனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் விஜயம் செய்திருக்கின்றேன். கல்முனையைப் போன்று சிறந்ததொரு கட்டமைப்பினைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட பணிமனையினை எங்கும் காணவில்லை. அவ்வாறானதொரு சிறந்த பணிமனைக்கு பணிப்பாளராக வரக்கிடைத்ததையிட்டு சந்தோசமடைகின்றேன்.

நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற அடிப்படையில், ஒவ்வொருவரும் பல திட்டங்கள், அபிப்பிராயங்கள், கருத்துக்களைக் கொண்டிருக்கின்றோம். இருந்தாலும் எல்லோரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுள்ளோம். குறிப்பாக இப் பிராந்தியத்தின் சுகாதாரத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு என்னிடம் பல திட்டங்கள் உள்ளன. அதுதொடர்பில் உங்களோடு கலந்தாலோசிக்க உத்தேசித்துள்ளேன்.

அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய சூழல் உருவாகின்ற பட்சத்தில் இந்தப் பிராந்தியத்தினை இன்னும் பல படிகள் முன்னோக்கி நகர்த்த முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்குள்ளது.

குறிப்பாக இன்று தொடங்கும் இந்தப் புதிய பயணத்தில் சகலரும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இப் பிராந்தியத்தின் சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு இப்பணிமனையின் அத்தனை உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கின்றேன் என்றார்.

காத்தான்குடி ஸாவியா மகளிர் மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

தெஹிவளை மாநாகர சபை உறுப்பினர் பிரதம அதிதி

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள ஸாவியா மகளிர் வித்தியாலய மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு திங்கட்கிழமை (24) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.எல். ஏ.கபூர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தெஹிவளை மா நகர சபை உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபா பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன், காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன், காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.ரமீஸ் உட்பட பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஸாவியா மகளிர் வித்தியாலய மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டப்பட்டதுடன், சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டனர் .இதில் ஒழுக்க கோவையொன்றும் வெளியிடப்பட்டு கையளிக்கப்பட்டது.

இதன் போது தெஹிவளை மாநாகர சபை உறுப்பினர் திருமதி சரீனா முஸ்தபாவுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய நியமனங்கள் அறிவிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய தவிசாளராக டாக்டர் கே.எம். ஸாஹிரும், தேசிய அமைப்பாளராக பி.எம்.முஜீபுர் ரஹ்மானும் நியமிக்கப்பட்டுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.சபீல் தெரிவித்துள்ளார்.

கடந்த தலைமைத்துவ சபை அமர்வின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே இந்த நியமனங்கள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கடந்த 25.12.2021 அன்று தலைமைத்துவ சபை அமர்வு இடம் பெற்றது. இதில் கட்சியின் எதிர்காலத் திட்டங்களை விரிவாக்கும் பொருட்டு கட்சியின் உயர் பதவிகளுக்கான புதிய நியமனங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதற்கிணங்க கட்சியின் தவிசாளராக மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த டாக்டர் கே.எம்.ஸாஹிரும், தேசிய அமைப்பாளராக மன்னாரைச் சேர்ந்த எம்.எம்.முஜீபுர் ரஹ்மானும் நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனைகள் ஏக மனதாக முன் வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கட்சியின் செயற்குழுவின் அபிப்பிராயங்களும் பெறப்பட்டன.

இந் நியமனங்களை அவர்களும் ஆமோதித்ததைத் தொடர்ந்து கே.எம்.ஸாஹிர் தவிசாளராகவும் முஜிபுர் ரஹ்மான் அதன் தேசிய அமைப்பாளராகவும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 'நாட்டுக்கு பெறுமதியான நூலொன்று' போட்டியில் அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில், 07 மாணவிகளின் புத்தகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி நஜீமா ஹாறூனின் தெரிவித்தார். இம் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டு பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டன. பாத்திமா சஹா எனும் மாணவிக்கு அதிபர் சான்றிதழ் வழங்குவதையும், சான்றிதழ் பெற்ற மாணவிகள், அதிபர், ஆசிரியர்களுடன் கூட்டாக எடுத்த படம். **(கே.எம்.எம்.சபீக்)**

திருமலையில் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வு

(அன்புவழிபுரம் தினகரன் ரொட்டவெவ குறூப் நிருபர்கள்)

கடந்த 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16வது ஞாபகார்த்த தின நிகழ்வு திருகோணமலையில் இடம் பெற்றது.

திங்கட்கிழமை (24) மாலை 5 மணியளவில் திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில் ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16வது ஞாபகார்த்த நிகழ்வு நினைவு கூறப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதனைத் தொடர்ந்து, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

கல்முனை வடக்கு யுவதிகளுக்கு பற்றிக் கைத்தொழில் பயிற்சி நெறி

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பற்றிக் கைத்தறி, புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் பற்றிக் கைத் தொழில் பயிற்சிக்கான ஆரம்ப நிகழ்வு, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம பயிற்சி நெறி வளவாளர்களாக சிலிடா நிறுவன உத்தியோகத்தரான அஜித் சத்திய பாலா கலந்து கொண்டார். அத்துடன் பிரதேச செயலக நிதிப் பிரிவு உதவியாளர் கணேசலிங்கம் திருபாலன், தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர் எம்.எப். கே.காமிலா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஐ.ரமீஸ், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.நயீம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இங்கு தெரிவு செய்யப்பட்ட 20 யுவதிகள் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். இங்கு பயிற்சி வழங்கப்படும் பயிற்சியாளர்களுக்கு ஒருமாத பயிற்சி நெறியின் முடிவில் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கான சுயதொழில் முயற்சிக்கான உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளமை குறிபிடத்தக்கது.

தோப்பூரில் பனிப்பொழிவு

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் பிரதேசத்தில் பனியுடன் கூடிய காலநிலை நிலவுவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

பனியினால் அதிகாலை முதல் மழைபெய்வது போன்று மூடுபனி பெய்வதால் வாகன சாரதிகள் விபத்துக்குள்ளாக வாய்ப்புள்ளதால் அவதானமாக பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

பனிப்பொழிவினால் பொதுமக்கள் தடிமன், காய்ச்சல் மற்றும் உடல் வலி போன்ற நோய் அறிகுறிகளால் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெரும் போக நெல்லை அரசு உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டும்

ஸ்ரீலங்கா விவசாய அமைப்பின் தலைவர் சிறாஜுதீன்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட விவசாயிகளிடம் இருந்து பெரும்போக நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா விவசாய அமைப்பின் தலைவர் ஏ.சீ. சிறாஜுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்று விதிவிட திட்ட முகாமையாளர் அலுவலத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தலைவர் சிறாஜுதீன் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய விவசாயிகளிடமிருந்து 95 ரூபாவுக்கு ஒரு கிலோ நெல் கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நெற் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற் களஞ்சிய சாலைகள் இதுவரை திறக்கப்படாமலுள்ளன.

அரசாங்கம் உத்தரவாத விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யாமல் இருப்பதால் மிகவும் குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகள் நெல்லை கொள்வனவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போகத்தில் நெற்செய்கை பாரிய வீழ்ச்சியடைந்து ஏக்கருக்கு 20 தொடக்கம் 25 மூடை நெல் கிடைப்பதாகவும், இதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள நெல் களஞ்சிய சாலைகளை திறந்து அரசாங்கம் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார்.

கந்தளாய் ஆயிஷா மகளிர் மாணவர்களுக்கு தடுப்பூசி

(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத் திகுட்பட்ட ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (25) ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.சாகிதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது பைசர் தடுப்பூசிகள் தரம் ஏழாம் ஆண்டிலிருந்து தரம் பத்து வரையான மாணவர்களுக்கு செலுத்தப்பட்டன.

மேலும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசிகளின் முக்கியத்துவம் தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்களினால் தெளிவுபடுத்தப்பட்டது. இதில் எழுநூறு மாணவர்களுக்கு மேல் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

மூதூர் பூங்காவை மீண்டும் திறக்க ஏற்பாடு

(மூதூர் தினகரன் நிருபர்)

கொரோனா அசாதாரண சூழ்நிலை கருதி சில மாத காலமாக மூடப்பட்ட மூதூர் பொழுதுபோக்கு பூங்கா மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி 1ஆம் திகதி முதல் திறக்கப்படவுள்ளது.

மேலும் மூதூர் பொழுது போக்கு பூங்காவை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பார்வையிட வரும் மக்கள் மூதூரில் உள்ள இப்பூங்காவையும் பார்வையிட்டு செல்வது வழக்கம்.

இதனை அடுத்து சனிக்கிழமை (22) மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், செயலாளர் வி. சத்தியசோதி ஆகியோரின் வழிகாட்டலில் சபை உத்தியோகத்தர்களாக பெருமளவிலானோர் கலந்து கொண்டு சகல வசதிகளையும் ஒழுங்குற ஏற்படுத்தும் முகமாக சிரமதானப் பணிகளையும், முழு நாளாக மேற்கொண்டு மிக கவர்ச்சியகரமாக அழகுபடுத்தி திறப்பதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டு உள்ளனர்.

இலங்கை வங்கி செங்கலடி கிளை புதிய இடத்துக்கு மாற்றம்

(ஏறாவூர் நிருபர்)

இலங்கை வங்கியின் செங்கலடிக் கிளை புதிய இடத்திற்கு மாற்றும் நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

வங்கியின் கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் டபிளியு.எம்.ஏ. வணிகசேகர இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிளை முகாமையாளர் எஸ். சன்முகபிரதாப் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதேச செயலாளர் கே. தனபால சுந்தரம்,பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.ஏ. நஜீப் மற்றும் வங்கியின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மருதமுனை அல் மனார் தேசிய பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் நடைபெற்றது. அப்துல் அஸீஸ் நிறுவன தவிசாளர் ஏ.ஏ.அப்துல் ஹபீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நிகழ்வில், கல்முனை உதவி பிரதம பொலிஸ் பரிசோதகர் ரீ.எச்.டீ.எம்.எல்.புட்டிக்க கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். மாணவர்களுக்கு சின்னங்கள் சூட்டப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன், அதிதிகளும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர். **(படம்; பெரியநீலாவணை தினகரன் நிருபர்)**

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

வெற்றிடங்கள்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாக உள்ள முகாமையாளர் / சிரேஷ்ட முகாமையாளர் (கொள்முதல்) (MM 1-1) வெற்றிடங்களுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் மேலதிக விபரங்களை **www.cfc.gov.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பத்தாரர் கல்வித்தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான விடயங்களை உள்ளடங்கிய சுயவிபர கோவையுடன் (CV) கல்வித்தகைமை மற்றும் அனுபவ சான்றிதழிலுடன் உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் தொலைப்பேசி இலக்கம் உட்பட அனைத்து விடயங்களும் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு **2022.02.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக** தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை கடற்படை கூட்டுத்தாபனம்
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.
தொலைபேசி :- 0112-523689/ 0112-540455
(மின்னஞ்சல் – hr@cfc.gov.lk / it@cfc.gov.lk /)

விலைமனுக்கோரல்

போதனா வைத்தியசாலை

கராபிட்டிய - காலி

காலி, கராபிட்டிய வைத்தியசாலையின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களை 2022ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக, குறித்த துறையில் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இலக்கம்	விபரம்	மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா
01	சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துதல்	2,000.00
02	வைத்தியர்களின் உத்தியோக ஓய்வு விடுதி சிற்றுண்டிச் சாலையை நடைமுறைப்படுத்துதல்	2,000.00
03	மலிவு விற்பனை நிலையத்தை நடைமுறைப்படுத்துதல்	2,000.00
04	போசணசாலையை நடைமுறைப்படுத்துதல்	2,000.00
05	தொடர்பாடல் கூடத்தை நடைமுறைப்படுத்துதல்	2,000.00

01. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர், மேற்படி ஒவ்வொரு சேவைக்குமாக, கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பக் கடிதமொன்றுடன் மீளளிக்கப்படாத படிவக்கட்டணத்தை வைத்தியசாலையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.01.26 முதல் 2022.02.14 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. 2022.02.15 அன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவை 2022.02.15 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, கராபிட்டிய, காலி என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். விலைமனுத் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
03. விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், தொடர் இலக்கம் மற்றும் குறித்த கருமத்தின் பெயர் மிகவும் தெளிவாகக்குறிப்பிடப்படல் வேண்டும்.
04. விலைமனுப்படிவங்களை இலவசமாக பிரதிப் பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. அரச ஒப்பந்தங்களை மீறியமைக்காக, அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்ட நபர்களுக்கு விலைமனுப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
06. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
07. மேலதிக விபரங்களிற்காக 091-2232176/ 091-2232159 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.

தலைவர்
பிராந்தியப் பெறுகைக் குழு
போதனா வைத்தியசாலை,
கராபிட்டிய காலி.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

அளவீடு, படமாக்கல் மற்றும் பட பகுப்பாய்வுடன் Multispectral Sensor உடனான வான் படமாக்கலுக்கான Quad copter ஆளில்லா விமானத்தின் வழங்கல், நிறுவுதல், பயிற்சி மற்றும் பராமரிப்புக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

கேள்விமனு குறிப்பு - PR 6008

01. பெல்வத்த பிரிவுக்கு அளவீடு, படமாக்கல் மற்றும் பட பகுப்பாய் தீர்வுடன் Multispectral Sensor உடனான வான் படமாக்கலுக்கான Quad copter ஆளில்லா விமானத்தின் வழங்கல், நிறுவுதல், பயிற்சி மற்றும் பராமரிப்புக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.
    1.1 ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவது: எழுத்து அத்தாட்சிகளுடன் அளவீடு, படமாக்கல் மற்றும் பட பகுப்பாய்வுடன் Multispectral Sensor உடனான வான் படமாக்கலுக்கான Quad copter ஆளில்லா விமானத்தின் வழங்கல், நிறுவுதல், பயிற்சி மற்றும் பராமரிப்பில் குறைந்தது ஐந்து (5) ஆண்டுகள் அனுபவம்.
    1.2 05 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடன் எழுத்து அத்தாட்சிகளோடு இலங்கைக்குள் குறைந்தது ஐந்து (05) இதனையொத்த பயன்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்தியிருத்தல்.
02. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500.00 இலங்கை ரூபாவை செலுத்தி 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
03. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
04. விலைமனுக்களை 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, பதிவுத் தபால் அல்லது விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "படமாக்கல் மற்றும் பட பகுப்பாய் தீர்வுடன் Multispectral Sensor உடனான வான் படமாக்கலுக்கான Quad copter ஆளில்லா விமானத்தின் வழங்கல், நிறுவுதல், பயிற்சி மற்றும் பராமரிப்புக்கான விலைமனு - (PR-6008)" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
05. அனைத்து விலைமனுக்களும் இ. ரூபா 50,000.00 (ஐம்பதாயிரம்) "விலைமனு பிணையை" கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்படும் செலவு 3.2 மில்லியன் இ. ரூபா.
06. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பெல்வத்த கேட்போர்கூடத்தில் 2022 பெப்ரவரி 8 ஆம் திகதி 9.30 மணிக்கு இடம்பெறும்.
07. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - கொள்முதல் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 71 9803859, 0714306994, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: chandana@lscl.lk).

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

குறிப்பு இல.: 4/2/1/91
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2017/LO/213

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.11.19ஆம் திகதிய 2254/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	: கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு	: தொம்பே
கிராம உத்தியோகத்தர் பிரிவு	: 383, மெத்தெகம
கிராமத்தின் பெயர்	: மெத்தெகம
காணியின் பெயர்	: வேகெவத்தை அல்லது மாளிகாவத்தை
வரைபட இல	: ஆ.வ.கம். 4241
துண்டு இல.	: 01

என்.ஏ.ஏ.எஸ் நிஸ்ஸங்க ஆரச்சி
பிரதேச செயலாளர்
தொம்பே

விலாசம்: தொம்பே பிரதேச செயலகம்
வேகே,
கிரிதிவெல

திகதி: 2022.01.04

கணிம உர உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் விநியோக ஒழுங்குமுறை மற்றும் தானியங்கள், கணிம உணவு, காய்கறி, பழம், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

தேசிய உணவு மேம்பாட்டு சபை

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

தெஹிவளை விற்பனை நிலையத்தின் மேல்மாடியினை குத்தகைக்கு வழங்கல்

தேசிய உணவு மேம்பாட்டு சபையின் (இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின்) இல. 21B 1/1, காலி வீதி, தெஹிவளை எனும் முகவரியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான விற்பனை நிலையத்தின் மேல்மாடியினை (728 சதுர அடி) 2 வருட குத்தகைக் காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த மனுக்கோரல் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பங்களை **2022-01-26 ஆம் திகதி பி.ப.2.30** மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள தேசிய உணவு மேம்பாட்டு சபையின் தலைமை அலுவலகத்தில் மீள்ச்செலுத்தப்படாத **ரூ.500.00** கட்டணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

2022.02.25 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு மனு ஆவணம் ஏற்றுக்கொள்ளல் நேரம் நிறைவுபெறுவதுடன், மனுத்திறப்பு தலைமை அலுவலக பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெறும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் பங்கேற்கலாம். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தெஹிவளை விற்பனை நிலையத்தின் மேல்மாடி குத்தகைக்கு வழங்கள்"** எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அல்லது பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

குறித்த கட்டிடத்தினை வாரத்தில் அலுவலக நாட்களில் **மு.ப.10.00** மணி முதல் **பி.ப.4.00** வரை பரிசீலனை செய்யமுடியும். மனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை கொள்முதல் குழு கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் **011-2580194, 011-2506895, 011-3370028** எனும் இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

தலைவர்,
தேசிய உணவு மேம்பாட்டு சபை
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.

பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கும் வெளிநாட்டில் பணிபுரிகின்ற இலங்கையர்கள் உட்பட வேறு வெளிநாட்டு நாணயத்தை வைத்திருப்போருக்குமான

இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கான வாய்ப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

(ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள்)
பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
முதலிடும் தீர்ப்பனவும் : 2022 சனவரி 25இலிருந்து*

நாணயம்	: ஐக்கிய அமெரிக்க டொலர்
காலம்	: 6 மாதங்களிலிருந்து 4 ஆண்டுகள் 11 மாதங்கள் வரை
வட்டி வீதம்	: நிலையான வீத ஏற்பாடு
வட்டிக் கொடுப்பனவுகள்	: அரையாண்டுக்கு ஒரு தடவை
முதலீட்டுத் தொகை	: குறைந்தபட்சம் ஐ.அ. டொலர் 1000 மற்றும் அதனைத் தொடர்ந்து ஐ.அ. டொலர் 1000இன் பெருக்கங்களில்
வரி	: இலங்கையில் ஏற்புடைய வரிச் சட்டங்களுக்குட்பட்டது
வழங்கும் அலுவலகம்	: பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்கள்	: தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும்

உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் PDF வடிவத்தில் கடவுச்சொற்களின் பாதுகாப்புடன் குறித்துரைக்கப்பட்ட முகவர் ஊடாக fopdd@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். தொடர்புடைய கடவுச்சொற்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதே மின்னஞ்சல் முகவரிக்கு வேறாக அனுப்பப்பட வேண்டும்.

*முன்னெடுக்கப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறி ஏலத்தின் போது முதலீட்டு வசதிக் காலம் வசதிப்படுத்தப்படமாட்டாது. அதாவது, ஏலம் ஆரம்பிக்கின்ற திகதியன்று அலுவல் தொடங்கியதிலிருந்து அதற்கான தீர்ப்பனவுத் திகதியன்று அலுவல் முடிவடையும் வரை. முதலீடுகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற பிணையங்கள், குறித்துரைக்கப்பட்ட முகவர்களின் பட்டியல், வட்டிக் கொடுப்பனவு மற்றும் முதிர்ச்சிக் கொடுப்பனவு அட்டவணை என்பவற்றை கீழேயுள்ள இணைய இணைப்பின் ஊடாக அணுகலாம்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/sldb_direct_window_offer_information_e.pdf

குறிப்பு: இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கை மத்திய வங்கியால் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

முன்வைப்பு தொடர்பான விபரங்கள் 2022 சனவரி 25ஆம் திகதியிடப்பட்ட முன்வைப்பு ஆவணத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

கிடைக்கப்பெறுகின்ற இலங்கை அபிவிருத்தி முறியின் முதிர்ச்சிகளும் முதலீட்டிற்கு ஏற்புடைய நிலையான வீதங்களும்[1]

	2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி	ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்)
1	6-மாதம்	7.50
2	10-மாதம்	7.65
3	1-வருடம்	7.80
4	1-வருடம் 3-மாதம்	7.85
5	2-வருடம்	7.90

	2021 திசெம்பர் 23 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி	ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்)
6	2-வருடம் 3-மாதம்	7.90
7	3-வருடம்	7.90
8	4-வருடம்	7.95
9	4-வருடம் 6-மாதம்	7.95
10	4-வருடம் 11-மாதம்	7.95

[1] அந்தந்த இலங்கை அபிவிருத்தி முறி ஏலத்தின் தொடக்கம் வரை மாற்றமின்றி காணப்படும். மேலே குறிப்பிட்ட இணைய இணைப்பினூடாக அணுகக்கூடிய முன்வைப்பு ஆவணத்தில் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

முனைவர் எம். செ. எம். ஆரிப்
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்
பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01

தொலைபேசி: 2477011தொலைநகல்: 2477687, 2477718 /9
http:// www.cbsl.gov.lk

நொத்தாரிசின் இறுதி பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கு முன்னதாக செய்யப்படும் அறிவித்தல்

பிட்டபெத்தர, தங்கொலுவ,"அத்தநாயக்க நிவஸ" எனும் இடத்தில் குடியிருக்கும் பிரியந்த ஜயவர்தன திஸாநாயக்க ஆகிய நான் மாத்தறை மாவட்டத்தினுள் சிங்கள மொழியில் கடமையாற்றும் பிரசித்த நொத்தாரிசாக நியமிக்கப்படுவதற்காக நொத்தாரிசு இறுதி பரீட்சைக்கு சமுகமளிப்பதன் பொருட்டு, நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 107ஆம் அதிகாரம், 7ஆம் பந்திக்கு அமைவாக, இன்றைய தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைந்த பின்னர் பதிவாளர் நாயகத்திடம் இருந்து உனது பதிவை கோருவதற்கு இருப்பதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வீ.ஜே.திஸாநாயக்க,
"அத்தநாயக்க நிவஸ"
தங்கொலுவ, பிட்டபெத்தர
21.01.2022

பிரகடனதாரி நொத்தாரிசு எழுதுநர்

பெயர் மாற்றம்

அட்டாளைச்சேனை 10ஆம் பிரிவில் இல.231/சீ, முதலாம் குறுக்கு வீதியில் வசித்து வரும் முஹம்மட் இப்றாஹிம் முஹம்மட் அஸ்ரப் ஆகய நான் எனது மகனாகிய அஸ்மி முஹம்மட் அஸ்ரப் என்பவருடைய பெயரை அஸ்மி என மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முஹம்மட் இப்றாஹிம் முஹம்மட் அஸ்ரப்
(தகப்பன்)

அரசியல் பேதங்களை மறந்து ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதே இன்றுள்ள தேவை

வெலிகம தினகரன் நிருபர்

குறுகிய அரசியல் இலாபங்களை கைவிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவது சகல மக்களினதும் கடமையாகுமென, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு (பொ. ஜ. பெ) தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், கொரோனா தொற்றுக்கு அச்சமின்றி முகம் கொடுத்து அதிலிருந்து மக்களை விடுவிக்க ஜனாதிபதி முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டார்.

இதனால், மக்கள் மீண்டும் வழமையான செயற்பாடுளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் நாட்டுமக்கள் என்ற வகையில் சகலரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். இவ்வாறு சகலரும் ஒன்றிணைந்து பணியாற்றினாலே எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளிலிருந்து மீண்டெழ முடியும்.

ஜனாதிபதி உட்பட அரசு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. எமது நாட்டு பல்கலைக் கழகங்களை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்களை நாம் மதிக்க வேண்டும். மாணவர்கள் நாட்டின் எதிர்காலம். அவர்களை கட்டியெழுப்பினால் மாத்திரமே எமக்கு எதிர் காலத்தில் சுபிட்சமாக வாழமுடியும். எனவே மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் சகல நடவடிக்கை களையும் மதித்துச் செயற்படுவது கடமையாகும் என்றார்.

பசளை தயாரிப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

நீர்கொழும்பு தினகரன் நிருபர்

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிடிப்பன மீன்பிடி கிராமத்திலுள்ள அரச கட்டடமொன்றில் "அழுகிய மீன்களை பயன்படுத்தி பசளை தயாரிப்பு நிலையமொன்றை" அமைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து,பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிடிப்பன கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்னால் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், பிரதேசவாசிகள் பலர் கலந்து கொண்டனர்.

மூச்சுவிட இடங்கொடுங்கள்" என்ற கோஷத்தை எழுப்பியவாறு, பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மேல் மாகாண சபையின் பூரண அனுசரணையில், அரசுக்கு சொந்தமான கட்டடத்தில், அழுகிய மீன்களை பயன்படுத்தி திரவ நிலைப் பசளை தயாரிக்கப்படுவதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதனால் பிடிப்பன பிரதேசத்தில், அழுகிய வாடையுடன் கூடிய துர்நாற்றம் வீசுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர் .

பெறுகை அறிவித்தல்

பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2022

மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி

2022 ஆம் ஆண்டிற்காக நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் முகமாக, கீழ்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2022.02.18 மு.ப.10.30 வரை கேள்விகள் ஏற்கப்படும்.

தொடர் இல	உருப்படி	தகைமைகள்	மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்
01	2022 ஆண்டிற்காக பராமரிப்பு ஒப்பந்தக் காரர்களை பதிவுசெய்தல்	M8 அல்லது C9 (திருத்தப்பட்ட பதிவு செய்தல் முறையின் பிரகாரம்) EM5 மற்றும் அதற்கு மேல் (மின் பராமரிப்பிற்காக)	ரூ.1500.00

02. கேள்வி ஆவணங்களை 2022.01.27 முதல் 2022.02.17 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப.9.00 - பி.ப.2.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் நாவலப்பிட்டி, மாவட்ட பொது வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரிடம் காசாக செலுத்திய பின்பு பெற்றுக்கொண்ட 172 படிவத்தின் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது வேறு வைத்தியசாலை அல்லது வைத்தியசாலைகளில் கடந்த கிட்டிய மூன்று வருடங்களில் மேற்கொண்ட பராமரிப்பு விடயங்கள் சம்பந்தமான அனுபவம் பற்றிய சான்றிதழ்களை சமர்ப்பித்தல் விசேட தகைமையாக கவனத்தில் கொள்ளப்படும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2022.02.18 மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது நாவலப்பிட்டி, மாவட்ட பொதுவைத்தியசாலை கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில், "பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2022" என்று குறிப்பீடுதல் வேண்டும்.

05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2022.02.18 மு.ப.10.30இற்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணம் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது.

தலைவர்
பிரதேச பெறுகைக்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
நாவலப்பிட்டி
2022.01.24

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

ரூ.50,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.00% 2025 ''A" தொடர்களின் கீழ் ரூ. 15,000 மில்லியனையும், 11.20% 2033 ''A" தொடர்களின் கீழ் ரூ. 35,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 சனவரி 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

தொடர்கள்	11.00% 2025 ''A"	11.20% 2033 ''A"
ISIN*	LKB01025H016	LKB01533A154
முன்வைக்கப்பட்ட தொகை	ரூ. 15,000 மில்லியன்	ரூ. 35,000 மில்லியன்
நறுக்கு வீதம்	11.00% ஆண்டொன்றிற்கு	11.20% ஆண்டொன்றிற்கு
வழங்கப்பட்ட திகதி	2015 ஒகத்து 01	2018 சனவரி 15
முதிர்வுத் திகதி	**2025 ஒகத்து 01**	**2033 சனவரி 15**
நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள்	01 பெப்ரவரி & 01 ஓகத்து	15 சனவரி & 15 யூலை
ஒன்றுசேர்ந்த வட்டி வீதம்	ரூ. 100.00 இற்கு ரூ. 0	ரூ. 100 இற்கு ரூ. 0.5260
ஏல விற்பனைத் திகதி	2022 சனவரி 28, வெள்ளிக்கிழமை	
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும்	2022 சனவரி 28, வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணி	
தீர்ப்பனவுத் திகதி	**2022 பெப்ரவரி 01**	
விலைக் குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து	

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
வ்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட்	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

எம்.இசட்.எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம் : www.cbsl.gov.lk

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
சுத்திகரிப்புப் பிரிவு

2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பிற்கு 2022ஆம் ஆண்டிற்குள் கீழ்க்காணும் பொருட்களை வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தலுக்கு பதிவு செய்வதற்கு விரும்பும் இந்நாட்டு வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் www.ceypetco.gov.lk என்ற இணையதளத்தில் அல்லது இங்கு கீழே குறிப்பிடப்படுபவருக்கு 2022.01.31 வரை தமது முகவரி எழுதப்பட்ட 9"X4" அளவான முத்திரையுடனான கடித உறையொன்றை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022.02.11ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனுப்புதல் வேண்டும். எமக்கு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022 என்று குறிப்பிடுங்கள்.

வழங்கல்கள்

01. சாதாரண உலோகப் பொருட்கள்/ பைப் மற்றும் துணைப் பாகங்கள்/ இரும்புத்தகடு/டார்போலீன் போன்றன.
02. சீமெந்து/அஸ்பெஸ்டோஸ் கூரைத்தகடு/ கொங்ரீட் உற்பத்தி போன்றன
03. பாவிக்கப்பட்ட வெற்று பெரல் (தார் நிரப்புவதற்காக)
04. பூசப்படும் தீந்தை/பாதுகாப்பு தீந்தை/ பிரைமர் போன்றன
05. சீருடைத் துணி(காற்சட்டை/சேர்ட்) மற்றும் மேஸ், துவாய்
06. மழைஅங்கி/கையுறை/குடை/கம்பூட்ஸ்/ சப்பாத்து/பாதுகாப்பு பாதணிகள் போன்றவை
07. கட்டிடப்பொருட்கள்/(ஆற்றுமணல், கருங்கல் மற்றும் செங்கல்)
08. காகிதாதிகள்/போல்பொயின்ட் பேனா/அலுவலக உபகரணங்கள்
09. வேலைத்தள ஆயுதம்கட்டிங் டிஸ்க்/கிரைண்டிங் வீல் போன்றன
10. வெல்டிங் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்/வெல்டிங் இலெக்ட் ரோட் போன்றன.
11. தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணம் மற்றும் துணைபாகங்கள்/பாதுகாப்பு பொருட்கள் போன்றன.
12. அதி அமுக்க குழாய்
13. மின் உபகரணம் மற்றும் மின் துணைப்பாகங்கள்/வாகன பற்றரி/ வளிச்சீராக்கி போன்றன.
14. மோட்டார் இணைப்பு தட்டையான தகடு/மோட்டார் குளிரூட்டி விசிறிகள்
15. இரசாயனப் பொருட்கள்/ஆய்வுகூட உபகரணங்கள்/மருத்துவ உபகரணங்கள் போன்றன.
16. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்/ டயர் மற்றும் டியூப்
17. கணனி மற்றும் துணைப்பாகங்கள்
18. பீங்கான் கோப்பை கரண்டி, கெயாருப்/சுத்திகரிப்பு பொருட்கள் துப்புரவேற்பாட்டு பொருட்கள் போன்றன.
19. ஒட்டுபலகை/உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பலகைகள்
20. போல் மற்றும் ரோய் பெயாரின்
21. இறப்பர் பொருட்கள்/நீர்த்தாங்கி
22. கண்ணாடி தகடு/கண்ணாடி பொருட்கள்/பிவிசி மூடப்பட்ட வலைகள் போன்றன.
23. பொதியிடல் மற்றும் கடத்திகள்/ பட்டு பெனியன் வேஸ்ட்
24. இரும்பு ஒட்டு வேலை
25. அச்சு வேலை
26. ஔடதம்
27. பாதுகாப்பு பொருட்கள்
28. சகல வகையான காஸ்
29. அலுமினியம் கதவு ஜன்னல் மற்றும் பொருத்துதல்/ வெளிசிலைன் பிளைன்ட்
30. பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு தேவையான கனரக வாகனம் மற்றும் இலகு வாகனம்
31. பால்மா/சீனி/தேயிலை
32. போத்தலில் இடப்பட்ட குடிநீர்
33. வேறு

முகாமையாளர் (பொருட்கள்)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
சுத்திகரிப்பு பிரிவு, த.பெ.11, களனி
தொ.பே - 0112400110

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால் உற்பத்தி, கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, நீண்டநாள் கடற்றொழில் விவகாரங்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)

நாரா தலைமையகத்திற்கு மற்றும் பிரதேச நிலையங்களுக்கு பாதுகாப்பு சேவை மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரல் 2022/ 2023

2022/2023 வருட காலத்திற்காக தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையின் தலைமையகத்திற்கு மற்றும் பிரதேச நிலையங்களுக்கு பாதுகாப்புச் சேவை மற்றும் துப்புரவேற்பட்டு சேவையை பெற்றுக்கொள்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. பெறுகை விண்ணப்பப்படிவக் கட்டணமாக ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை 2022.01.26 முதல் 2022.02.14 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள், பணிப்பாளர் நாயகம்/ நாரா என்ற பெயரில் காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு - 15 இல் அமைந்துள்ள தலைமையத்தின் நிதிப் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்களை கொள்வனவு செய்தல் மற்றும் வழங்கல்கள் பிரிவிற்கு சமர்ப்பித்து பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. அச் சேவைகள் பற்றிய விபரங்கள் கீழ்க்காணுமாறு அமையும்.

பாதுகாப்புச் சேவை

பிணை முறியின் பெறுமதி	ரூ. 50,000.00
கேள்வி விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும் இறுதி திகதி	2022 பெப்ரவரி 14 வரையாகும்.
கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம்	2022 பெப்ரவரி 15 மு.ப. 10.00
கேள்விப் பெட்டி இலக்கம்	இலக்கம் 01

துப்புரவேற்பாட்டு சேவை

பிணை முறியின் பெறுமதி	ரூ. 30,000.00
கேள்வி விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி	2022 பெப்ரவரி 14 வரையாகும்.
கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம்	2022 பெப்ரவரி 15 மு.ப. 11.00
கேள்விப் பெட்டி இலக்கம்	இலக்கம் 02

❖ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணைமுறி அல்லது பணிப்பாளர் நாயகம்/ நாரா பெயரில் தலைமையகத்தின் நிதிப் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி சமர்ப்பிக்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை அதாவது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு, அச் சோடியை ஒரு உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நாரா தலைமையகத்திற்கு மற்றும் பிரதேச நிலையங்களுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குதல் - 2022/2023 கேள்விப் பெட்டி இல. -01' என்று மற்றும் 'நாரா தலைமையகம் மற்றும் பிரதேச நிலையங்களுக்கு துப்புரவேற்பாட்டு சேவையை வழங்குதல் - 2022/2023 கேள்விப் பெட்டி இல. 02 என்று குறிப்பிடுதல் வேண்டும்.
04. பாதுகாப்புச் சேவைக்காக கேள்விகளை பெற்றுக்கொண்ட கேள்விதாரர்களுக்கு முன் அறிவூட்டல் கூட்டம் 2022.02.08 மு.ப. 10.00 மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைக்காக கேள்விகளை பெற்றுக்கொண்ட கேள்விதாரர்களுக்கான முன் அறிவூட்டல் கூட்டம், 2022.02.08 ந.ப. 12.00 இற்கு பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
05. பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ளல் - 2022/2023 கேள்விப் பெட்டி இல. 01 மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை பெற்றுக்கொள்ளல் 2022/2023 கேள்விப்பெட்டி இல. 02 என வேறுவேறாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது கேள்விகளை நாரா தலைமையகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் வேலையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.
பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை
காக்கைத் தீவு, மட்டக்குளி, கொழும்பு 15
0112-529717/ 0112-521000

அறிவித்தல்

பகுதியளவில் பயன்படுத்திய சமையல் எரிவாயு சிலிண்டர்களை மீள வழங்குவது குறித்த பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

அண்மையில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பான பல்வேறு விபத்துக்கள் இடம்பெற்று வந்திருப்பதால், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட் மற்றும் லாப் காஸ் பிஎல்சி ஆகிய சமையல் எரிவாயு வழங்கும் கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்து பயன்படுத்திய எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பது குறித்து சந்தேகம் ஏற்படின் பகுதியளவில் பயன்படுத்திய மற்றும் குறைபாடுகள் இருப்பதாக சந்தேகம் நிலவும் குறித்த சிலிண்டர்களை, பாவனையாளர்கள் விரும்பின் அருகிலுள்ள எரிவாயு விநியோகஸ்தர்கள் / வியாபாரிகளிடம் குறித்த சிலிண்டர்களை மீளளிக்கும் முறையினைப் பின்பற்றுமாறும் அவ்வாறு மீளளிக்கும் போது பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ள எரிவாயுவின் நிறையானது மதிப்பீடு செய்யப்பட்டு தற்போது உள்ள விலையினைக் கருத்தில் கொண்டு அதன் பெறுமதியினை புதிய எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்யும் போது குறைத்துக் கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளது.

அதற்கிணங்க, அவ்வாறு மீளளிக்கப்படும் சந்தர்ப்பங்களில் உங்களின் எரிவாயு சிலிண்டர்களைப் மீளப் பெற்றுக் கொள்வதற்கு விநியோகஸ்தர்கள் மற்றும் / அல்லது வியாபாரிகள் மறுப்புத் தெரிவிப்பார்களாயின், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளினை எடுப்பதற்காக கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களினூடாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஹொட் லைன் - 1977

	மாவட்டம்	உத்தியோகத்தரின் பெயர்	தொலைபேசி இல.		மாவட்டம்	உத்தியோகத்தரின் பெயர்	தொலைபேசி இல.
01	கொழும்பு	திரு. ஏ.ஏ. யசூர்	0771088914	14.	யாழ்ப்பாணம்	திரு. ஏ.எல்.ஜே. சாதிக்	0771088910
02	கம்பஹா	திரு. ஆர். வீரவர்தன	0771088896	15.	வவுனியா	திரு. நிலாந்தன்	0776628200
03	களுத்துறை	திரு. பி.பி. ஜனக பிரசாத்	0770106600	16.	கிளிநொச்சி	திரு.என். விஜிதரன்	0774349080
04	காலி	திரு. பி. ஜயவர்தன	0770110101	17.	மன்னார்	திரு. ஏ.எம். ஆர்மிஸ்	0741838620
05.	மாத்தறை	திரு. டி.ஜி.டபிள்யூ. லக்மால்	0771088898	18.	முல்லைத்தீவு	திரு. என். கிருஸ்ணகுமார்	0752762008
06	ஹம்பாந்தோட்டை	திரு. எல். திக்கும்புர	0714406156	19.	பதுளை	திரு. வை.எம்.எஸ். யாபாரத்ன	0719990366
07	இரத்தினபுரி	திரு.என்.எம்.யூ.பி.கே. நாமல்கம	0770106655	20.	மொனராகலை	திரு. ஏ.என்.கே ரத்நாயக்க	0770110081
08	கேகாலை	திரு.ஆர்.ரி. ரெணபன	0770106604	21.	திருகோணமலை	திரு. வசந்தசேகரன்	0770139307
09	கண்டி	திரு.ஏ.எம்.ஜே. சமந்த	0771088901	22.	அம்பாறை	திரு. என்.எம்.எஸ்.பி. நவரத்ன	0770110068
10	மாத்தளை	திரு. எம்.ஜி.என். ஆர்குமார	0712307210	23.	மட்டக்களப்பு	திரு.ஆர்.எப்.ஏ. சதாத்	0770110096
11	நுவரெலியா	திரு. ஜே.எம்.ஆர். கருணாரத்ன	0770110054	24.	குருநாகல்	திரு.ஏ.எஸ் .நன்எதிரி	0714412667
12	அநுராதபுரம்	திரு. சி. பெரேரா	0773447974	25.	புத்தளம்	திரு. ஈ.யூ. ரஞ்சன	0770110103
13	பொலன்னறுவை	திரு. எச்.ஜி.சி.சி. குமார	0770110084				

தவிசாளர்
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
1, 2ஆம் மாடி, சதொச செயலக கட்டிடம்
த.பெ.இல.1581, 27, வொக்ஸோல் வீதி, கொழும்பு-02.

சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் கல்லூரியில்;

தேசிய பாடசாலை தரமுயர்வு சின்னம் சூட்டும் வைபவங்கள்

அதிதிகளாக அமைச்சர் பியல், மர்ஜான், இம்தியாஸ் பங்கேற்பு

(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படும் வைபவமும் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழாவும் நாளை 27ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு கல்லூரி பாக்கீர் மாக்கார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக பேருவளை தொகுதி பொதுஜன பெரமுன பிரதம அமைப்பாளரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான பியல் நிசாந்த கலந்து கொள்வார்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், களுத்துறை வலய கல்விப்பணிப்பாளர் ஏ.யூ. விக்கிரம ஆரச்சி, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல், எம்.எம்.எம். அம்ஜாத், நகர பிதா மஸாஹிம் மொஹமட் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். சிறப்பு அதிதிகளாக பேருவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.யூ. சோமரட்ன, களுத்துறை கல்வி வலய தமிழ் பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ஜெயகுமார், உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.ஏம். இல்யாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

பாதை திறந்து வைப்பு

(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

களுதாவல சுதுவெல்ல வீதி, காபர்ட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வீதியை, இராஜங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் பிரதேச சபை தலைவர் ஹேமந்த பெர்னான்டோ ஆகியோர் அண்மையில் திறந்து வைத்தனர்.

பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டனர்.

பொது அறிவித்தல்

பாம் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பிவீ 9089) மற்றும் பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பிவீ 8914) ஆகியவற்றின் உத்தேசிக்கப்பட்ட ஒன்றிணைப்பு

பாம் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகிய இவ்விரு கம்பனிகளின் பணிப்பாளர்களும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளனர். ஒன்றிணைப்பிற்கான கம்பனியானது பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் என்பதும் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியானது (அதாவது தொடர்ந்து செயற்படும் கம்பனி) பாம் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட் என்பதாகும். ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதிகள் எந்தவொரு பங்குதாரர், கடனாளி அல்லது பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் கடப்பாடுடைய எந்தவொரு நபரும் பரீட்சிப்பதற்காக சாதாரண அலுவலக நேரங்களில் கொழும்பு-08, டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை, 70/2/3B என்ற இலக்கத்திலுள்ள ஆனந்த சிரிசேன எண்ட் கம்பனி (பிறைவட்) லிமிட்டட் இலுள்ள கம்பனி செயலாளர்களின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் இன் பங்குதாரர், கடனாளி அல்லது பாம் எக்ஸ்போர்ட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் கடப்பாடுடைய எவரும் கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள உரித்தாவார்.

சபையின் கட்டளைப் பிரகாரம்
ஆனந்த சிரிசேன எண்ட் கம்பனி (பீவிடி) லிமிட்டட்
பதிவு பெற்ற கூட்டுரு செயலாளர்கள்.

கொழும்பு மாநகர சபை

2021.09.17 ஆம் திகதியிடப்பட்டதும் 2245/30 என்ற இலக்கமுடையதுமான அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதுமான கொழும்பு மாநகர சபையின் நியமமாக்கப்பட்ட துணைச்சட்டங்களின் பிரகாரமானது

[1952 ஆம் ஆண்டின் 6 இலக்க சட்டம் உள்ளூர் அதிகாரசபைகள் (நியமமாக்கப்பட்ட துணைச்சட்டம்) - 1989.01.20 ஆம் திகதியிடப்பட்டதும் 541/17 என்ற இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்; துணைச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் பிரகாரம்]

விலைமனுவிற்கான கேள்விகள்

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகள்/பண்டங்களுக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் கோருகின்றார்.

தொடர் இல.	கேள்வி இலக்கம்	விளக்கம்	கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகுதித்தன்மை	மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணக் கட்டணம்	விலைமனுப் பிணைமுறி பெறுமதி (ரூபாவில்)
1.	CPD/15/ Main tenance / 2021	மேசைக் கணினிகள், பிரின்டர், யுபிஎஸ் மற்றும் தொலைநகல் இயந்திரங்களின் பராமரிப்பு	. இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகள் ஆகியவற்றின் அனுபவம் அத்துடன் வியாபார பதிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள வழங்குநர்கள்/சேவை வழங்குநர்கள்	2,160 ரூபா	10,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
2.	CPD/ 16/ 1801/ 2022	பத்தரமுல்லவிலுள்ள முதியோர் இல்லம் மற்றும் சிறுவர் இல்லங்களில் இடம்பெறும் மரணங்களின் பொருட்டான இறுதி சடங்குகள்		2,160 ரூபா	10,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
3.	CPD/ 15/1992/ 2021	230 எண்ணிக்கையான சாக்கடை களை சுத்தம் செய்யும் உருக்கு கம்பிகள்		5,400 ரூபா	15,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
4.	CPD/ 15/3177/ 2020	ஆயுர்வேத ஔடதங்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் பெறுகை		2,160 ரூபா	50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
5.	CPD/ 20/2820/ 2021	மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் மற்றும் வாகன வளிச்சீராக்கல் உதிரிப் பாகங்கள்		2,160 ரூபா	50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
6.	CPD/ 15/ 327/ 2021	11 நிழற்பட பிரதியாக்கல் இயந்திரங் களின் பெறுகை		5,400 ரூபா	150,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
7.	CPD/ 06/ 2918/ 2021	அஸ்பெட்டஸ் சீட், கண்ணாடி சீட், ஆணிகள், கதவு பூட்டு, கட்டும் கம்பி, பிணைச்சல்கள், பொலித்தீன், கூரைத்தகடுகள் போன்றவை		5,400 ரூபா	200,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்.
8.	CPD/ 16/ 18/ 2022	கொழும்பு மாநகர எல்லைக்குற்பட்ட சுத்திகரிப்பு சேவை - 2022(1) +பொது வாசிகசாலை +போனாவிஸ்டா பலநோக்கு சமுக நிலையம்		5,400 ரூபா	300,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம் / 200,000 ரூபாவிற்கான நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதம்

கேள்வி ஆவணத்தை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரு முறைமைகளினால் பெற்றுக் கொள்ளலாம்.

01 ஆம் முறைமை - **www.colombo.mc.gov.lk** என்ற கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.

i. பின்வரும் முறைமையினால் மீளளிக்கப்படாத கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை செலுத்தலாம்.

அ) நகர மண்டப மக்கள் வங்கி கிளையின் 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்திற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலிருந்தும் பணத்தை வரவு வைத்தல்.

ஆ) வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பின்வரும் கொழும்பு மாநகர எல்லையினுள்ள மாநகர இடப்பரப்பினிலுள்ள பணக்கொடுப்பனவு கரும பீடங்களில்.

- மாவட்ட அலுவலகம் 04, இல.147, ஹைலெவல் வீதி, கிருளப்பொன, கொழும்பு-06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த கொழும்பு-10.

ii. கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் பற்றுச்சீட்டின்/ துண்டின் மூலப்பிரதியை இணைத்தல் கட்டாயமானதாகும். 02 ஆம் முறைமை - நகர மண்டப இடப்பரப்பிலிருந்து கையேற்றல்:

அ. ஒவ்வொரு கேள்வி/விலைமனுக்கோரலுக்கும் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், 2022.02.14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. 2022 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர் கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணமானது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட மாட்டாதுடன் வழங்கப்படவும் மாட்டாது.

இ. கேள்விகள்/விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக் கூடியதுமான விலைமனு பிணையம்/ உத்தரவாதம் ஆகியன 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையம்/ உத்தரவாதம் 2022.07.14 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். முன்வைப்பானது 2022.06.14 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட மூலப்பிரதி கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணமானது நகல் பிரதியுடன் 2022 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-07, மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

உ. கேள்வி/விலைமனுவானது 2022 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் கேள்விகள்/விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள்/விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாவே திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறையொன்றாக பிரகடணப்படுத்தப்படின், கேள்விகள்/ விலைமனுக்கள் அடுத்து வரும் வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும். கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். 0112-686389, 0112-686369 மற்றும் 0112-662329 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஊ. கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் கேள்விகள்/விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேலாகவிருப்பின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்த பின்னர், பிசிஏ (3) படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

ரோஷணி திசாநாயக்க - சட்டத்தரணி
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.

சுகாதார அமைச்சு

மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி

2022 ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022 ஆண்டிற்காக இவ் வைத்தியசாலைக்கு தேவையான கீழ்க்காணும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு விரும்பும் இலங்கைப் பிரஜைகளிடம் உற்பத்தியாளர்களிடம், விநியோகஸ்தர்களிடம், வழங்குநர்களிடம், கூட்டுறவுச் சங்கங்களிடம், பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பிரதிநிதிகளிடமிருந்து 2022.02.18 மு.ப. 10.30 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

1. வழங்கல்கள்

i. சகல வகைகளினாலான அலுவலக காகிதாதிகள் மற்றும் சகல அலுவலக உபகரணங்கள்
ii. கணனி இயந்திரம் உட்பட கணனி துணைப்பாகங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள், சிசிடிவி கெமரா அமைப்புக்கள்.
iii. இறப்பர் முத்திரை, தினமுத்திரை, பெயர் பலகை, அறிவித்தல் பலகை
iv. சகல வகையான அலுவலக பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள்
v. சகல ஹாட்வெயார் பொருட்கள், கட்டிட உபகரணங்கள் மற்றும் இறப்பர் கலப்பு உற்பத்திகள்
vi. சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, கால்வாய் பிரஷ், மலசலகூட பிரஷ், மொப் மற்றும் தும்பு கால்துடைப்பான் போன்றன)
vii. சகல வகையிலான மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
viii. வாகன டயர், டியூப் மற்றும் பற்றரி
ix. சகல வகையிலான பாதணிகள்
x. துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்கள் (சவர்க்காரம், சவர்க்கார தூள் மற்றும் திரவங்கள், கிருமிநாசினிப் பொருட்கள், வாகன சுத்திகரிப்பு பொருட்கள் போன்றன)
xi. பூச்சி, நுளம்பு மற்றும் ஏனைய பூச்சிநாசினிப் பொருட்கள்
xii. வைத்தியசாலை ஸ்ரெச்சர், ட்ரொலி, சக்கர நாட்காலி, ஸ்பிரேவர், சேலைன் ஸ்டான்ட் உட்பட சகல வார்ட்டுகளுக்கான உபகரணங்கள் மற்றும் ட்ரொலி சக்கரம் உட்பட அதற்கான உதிரிப் பாகங்கள்
xiii. மருத்துவ மற்றும் ரணசிகிச்சை உபகரணம், அதற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
xiv. ஆய்வுகூட உபகரணம், அதற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
xv. ஆய்வுகூடம், கதிரியக்க பிரிவு மற்றும் வார்ட்களின் நடவடிக்கைகளுக்கு தேவையான இரசாயனப் பொருட்கள் (உ+ம்: மெதிலேடட் ஸ்பிரிட், ஆய்வுகூடப் பொருட்கள்)
xvi. சகல வைத்தியசாலை துணிமனிகள், மெகிக் டோஷ் மற்றும் ரெக்ஷின்
xvii. பெரிய அளவிலான காஸ் அடுப்புகள், சாஸ்பான் உட்பட சகல சமையலறை உபகரணங்கள்.
xviii. எல்.பீ. காஸ் மற்றும் காஸ் சிலிண்டர்
xix. காபேஜ் பேக், பொலிதீன் பொருட்கள்
xx. மருந்துகள் உள்ளிடும் அச்சிடப்பட்ட கடதாசி உறை
xxi. சகல வகையிலான அலுமீனியம் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் நீர் பில்டர்
xxii. சகல டிரலிங், ரணசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் பற்சிகிச்சை பாவனைப் பொருட்கள் வழங்குதல்.

2. சேவைகள்

i. கணனி மற்றும் மின்சார அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
ii. அலுவலக காகிதாதிகள் அச்சிடல்
iii. சகல வகையிலான மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல்
vi. காற்றுச்சீராக்கி மற்றும் குளிர்சாதனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
v. துணி சலவை இயந்திரம் துணி உலர்த்தும் இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
vi. துணி சலவை இயந்திரப் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
vii. சகல வாகன பழுதுபார்த்தல் மற்றும் டின்கரிங், பெயின்டிங் மற்றும் மின் அமைப்புகளை பழுதுபார்த்தல்
viii. சகல வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
ix. திணைக்கள (அலுவலக) அடையாள அட்டை தயாரித்தல்
x. காஸ் அடுப்பு பழுதுபார்த்தல்
xi. வீட்டுத் தளபாடங்கள் பழுதுபார்த்தல்
xii. உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்தல்
xiii. பூங்கா அலங்காரம்

3. கொள்வனவு செய்தல்

i. வைத்தியசாலையின் அகற்றப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தல்
உ+ம்: கண்ணாடி/ பிளாஸ்டிக் போத்தல், பிளாஸ்டிக் கேன், சேலைன் போத்தல், தேங்காய் சிரட்டை, எக்ஸ்ரே கார்ட், எக்ஸ்ரே கார்ட் கருவி அகற்றும் திரவம், வைத்தியசாலையிருந்து அகற்றும் பிளாஸ்டிக்/ மரக்கழிவுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்

அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள்

i. ஒரு உருப்படிக்கு மேற்பட்ட தொகைக்காக வழங்குநர்களுக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.
ii. கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் தம்மால் தயாரிக்கப்படும் விண்ணப்பம், வியாபார பதிவு செய்யும் சான்றிதழின் பிரதி மற்றும் காசு செலுத்திய பற்றுச்சீட்டு/ சிட்டையுடன் 2022.02.18ம் திகதி பி.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு 'தலைவர், பிரதேச பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, நாவலப்பிட்டி' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கையோடு கொண்டுவந்து இந் நிறுவனத்தின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்
வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022ஆம் ஆண்டு
மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி

1. உற்பத்தி நிறுவனத்தின்/ வியாபாரத்தின்/ வழங்குநரின் பெயர்:-
2. முகவரி:-
3. வியாபாரத்தின் தன்மை (தனி உரிமையாளர்/ வரையறுக்கப்பட்ட கம்பனியா என்பது):-
4. தொ.பே. இலக்கம் - பெக்ஸ் இல -
5. பதிவு செய்யும் இலக்கம்:-
(எவ்வகையான வழங்கல்/ உற்பத்திக்காக பதிவு செய்து உள்ளீர்கள் - என்பதை குறிப்பிடுங்கள்)
6. வழங்கக்கூடிய கடன் வசதிகள்:-
7. பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்கல்/ சேவை மற்றும் அதன் இயக்கம்:-
8. பதிவு செய்யப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:-

வழங்கல் இல:..... சேவை இல:..... கொள்வனவு செய்யும் இல:..... இற்காக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ரூ..... பெறுமதியான காசு செலுத்திய பற்றுச்சீட்டை இதனுடன் அனுப்பியுள்ளேன் மேற்படி விபரங்கள் உண்மையானதும் சரியானதும் ஆகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏதேனும் பிழையான தகவலை வழங்கி இருப்பின் பதிவு இரத்தச் செய்யப்படுவதற்கு ஏதுவாகும் என்பதை நான் அறிவேன். இத்துடன் வியாபார பதிவு செய்தல் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியின் கையொப்பம்
உத்தியோகபூர்வ முத்திரை:.....

.....
திகதி

iii. விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022' என்று குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.
iv. பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தபட்சம் 06 வார காலத்திற்கு கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
v. வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யும் வழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படினும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமை இவ் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு உரித்தாவதுடன் எந்தக் கட்டணமும் இன்றியே பதிவிற்கான எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமையைப் பணிப்பாளருக்கு உரியது.
vi. ஓடர் செய்யும் சகல பொருட்களும் முறையாக களஞ்சியற்திற்கு வழங்கிய பின்னர் மற்றும் சேவைகளை முறையாக நிறைவேற்றிய பின்னர் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
vii. கட்டணங்கள் இன்றியே போக்குவரத்து வசதிகள் வழங்குதல் வேண்டும்.
viii. விலைமனுக்களைக் கோரும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கும் விலைமனுக்களுக்கு பொருட்களை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் (Black List) படுத்துவதற்கு ஏதுவாகும்.
ix. ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 1000.00 மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தை இவ் வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்கு செலுத்த வேண்டியதுடன், காசு செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது அதன் பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது.
x. பல உருப்படிகளுக்காக பதிவு செய்வதாயின் ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சகலதையும் ஒரே கடித உறையில் உள்ளிட்டு அனுப்புதல் வேண்டும்.
xi. மேலே குறிப்பிடப்படும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது அண்மையில் விநியோகிக்கப்பட்ட தேசிய பெறுகை முகவரகத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் பற்றியும் கவனம் செலுத்தப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை
நாவலப்பிட்டி.
2022.01.24

சூதாட்ட தரகர்கள் தன்னை அணுகியதை ஒப்புக்கொண்ட பிரண்டன் டெய்லர்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான பிரண்டன் டெய்லர், இந்தியாவில் வைத்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட சூதாட்ட தரகர்கள் தன்னை அணுகியதனை ஒப்புக்கொள்வதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்தவகையில் தனது ட்விட்டர் கணக்கு மூலமாக இந்த ஆட்ட நிர்ணய விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பிரண்டன் டெய்லர், இந்திய வியாபாரி ஒருவர் ஆட்ட நிர்ணயத்திற்காக தன்னை அழைத்த விடயத்தினை சர்வதேச கிரிக்கெட் சபை முறைப்பாடு செய்யத் தவறியது தனக்கு பல்வேறு ஆண்டுகள் வரை நீடிக்க கூடிய தடைக்காலத்தினை ஏற்படுத்தக்கூடிய விடயமாக இருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த 2019ஆம் ஆண்டு அனுசரணை என்ற பெயரில் சிம்பாப்வேயில் ரி 20 தொடர் ஒன்றினை ஏற்பாடு செய்யவிருப்பதாகவும், 15,000 அமெரிக்க டொலர்கள் பணத்தினை வழங்குவதாகவும் கூறி இந்தியாவினைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் டெய்லரினை பேச்சுவார்த்தைகளை அழைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேச்சு வார்த்தைக்குச் சென்றிருந்த பிரண்டன் டெய்லர், "கொக்கெய்ன்" என்கிற போதைப் பொருளினை பாவித்திருந்ததாக குறிப்பிட்டிருக்கின்றார். தொடர்ந்து பேச்சு வார்த்தை இடம்பெற்ற அடுத்த நாளில், தன்னை பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்த குழு தான் தங்கியிருந்த ஹோட்டலிற்கு வந்திருந்ததாகவும் அவர்கள் தான் போதைப் பொருள் அருந்துவதை வீடியோ காணொளியில் பதிவு செய்ததனை காட்டி தன்னை மிரட்டியிருந்ததாகவும் டெய்லர் கூறியிருக்கின்றார். டெய்லரினை மிரட்டிய குழு, அவரினை குறித்த குழுவிற்காக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட வேண்டும் என நிர்ப்பந்தம் செய்திருக்கின்றது. எனவே, தனது சொந்த பாதுகாப்பினை கருத்திற்கொண்ட டெய்லர் குறித்த குழுவின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்ததாக தெரிவித்திருக்கின்றார்.

டெய்லர் அப்போது இருந்த சிம்பாப்வே கிரிக்கெட் சபையினுடைய நிலைமையும் தான் இந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதற்கு காரணம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அத்துடன், இவ்வாறான விடயம் ஒன்றினை சர்வதேச கிரிக்கெட் சபையின் முறைப்பாடு செய்யாமல் போனது, தனக்கு தடைக்காலத்தினை ஏற்படுத்தும் விடயமாக இருக்கும் என தான் நம்புவதாக டெய்லர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரண்டன் டெய்லர் ஆட்டநிர்ணய சர்ச்சை ஒன்றில் சிக்கியிருக்கும் இந்த விடயமானது, தற்போது கிரிக்கெட் உலகில் மிகப் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த விடயத்தில் டெய்லருக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் பரவி வருகின்றன.

கடந்த ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற 35 வயதான பிரண்டன் டெய்லர் சிம்பாப்வே அணிக்காக 205 ஒருநாள் போட்டிகளிலும், 34 டெஸ்ட் போட்டிகளிலும், 45 ரி 20 போட்டிகளிலும் ஆடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் பிரண்டன் டெய்லரின் ஆட்ட நிர்ணய விடயம் தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபை விரைவில் அறிக்கை ஒன்றினை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான

அவுஸ்திரேலிய ரி20 அணி அறிவிப்பு

பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இலங்கை – அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் இடையே ஆரம்பமாகவுள்ள 5 போட்டிகள் கொண்ட ரி 20 தொடரில் பங்கெடுக்கும், அவுஸ்திரேலிய ரி 20 அணி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ரி 20 குழாத்தில் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் போது உபாதைக்கு ஆளான வேகப்பந்துவீச்சாளரான ஜோஸ் ஹேசல்வூட், குறித்த உபாதையில் இருந்து மீண்டதனை அடுத்து இணைக்கப்பட்டிருக்கின்றார்.

அவுஸ்திரேலிய உள்ளூர் கிரிக்கெட் தொடரான பிக் பேஷ் லீக் தொடரில் அதிக ஓட்டங்களை குவித்த வீரராக காணப்படும் பென் மெக்டெர்மேடும், இலங்கைக்கு எதிரான ரி 20 போட்டிகளுக்காக உள்வாங்கப்பட்டிருக்கின்றார். பென் மெக்டெர்மோட் 2021/22ஆம் ஆண்டுகளுக்குரிய பருவகாலத்திற்கான பிக் பேஷ் லீக் தொடரில் 153.86 என்கிற Strike Rate உடன் 577 ஓட்டங்களை குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிக் பேஷ் லீக் தொடரில் திறமையினை வெளிப்படுத்திய மற்றுமொரு வீரரான மொய்சஸ் ஹென்ரிக்ஸ், ஆஷஸ் தொடரின் தொடர் நாயகன் விருதினை வென்ற ட்ராவிட் ஹெட் மற்றும் வேகப்பந்துவீச்சாளர் ஜை ரிச்சர்ட்சன் போன்ற வீரர்களும், அவுஸ்திரேலிய ரி 20 குழாத்தினுள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர்.

அதிரடி துடுப்பாட்டவீரரான டேவிட் வோர்னர், மிச்சல் மார்ஷ் ஆகியோருக்கு இலங்கைக்கு எதிரான தொடரில் ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது. இவர்கள் தவிர அவுஸ்திரேலிய தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்டின் லேங்கரும் இலங்கை தொடரில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார். எனவே, இலங்கைக்கு எதிரானரி 20 தொடரின் போது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக அன்ட்ரூவ் மெக்டொனால்ட் செயற்படுவார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் பங்கெடுக்கும் ரி 20 தொடரின் போட்டிகள் சிட்னி, மெல்போர்ன் மற்றும் கென்பரா ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய ரி 20 அணி

ஆரோன் பின்ச் (அணித்தலைவர்), அஷ்டன் ஏகார், பேட் கம்மின்ஸ், ஜோஸ் ஹேசல்வூட், ட்ராவிஸ் ஹெட், மொய்சஸ் ஹென்ரிக்ஸ், ஜோஸ் இன்ங்லிஸ், பென் மெக்டெர்மோட், கிளன் மெக்ஷ்வெல், ஜை ரிச்சர்ட்சன், கேன் ரிச்சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிச்சல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மெத்திவ் வேட், அடம் ஷம்பா

டயலொக்–இலங்கை கிரிக்கெட்: தேசிய சுப்பர் லீக்கின் முதல் வெற்றியை பெற்ற ஜப்னா, காலி அணிகள்

இலங்கையில் இன்று (24) ஆரம்பித்த டயலொக் இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடரில், நேற்றுமுன்தினம் (24) இரண்டு போட்டிகள் நடைபெற்று முடிந்தன.

கொழும்பு அணியை எதிர்கொண்ட காலி அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற, தம்புள்ள அணியை எதிர்கொண்ட ஜப்னா அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பதிவுசெய்தது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சம்மு அஷான் தலைமையிலான கொழும்பு அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

கொழும்பு அணிக்காக குசல் மெண்டிஸ் மற்றும் கிரிஷான் சஞ்சுலா ஆகியோர் சிறந்த ஆரம்பத்துடன் முதல் விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். எனினும், வேகமாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிஸ் 27 பந்துகளில் 37 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து ஆட்டமிழக்க, கிரிஷான் சஞ்சுல 46 ஓட்டங்களை பெற்று அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார்.

அதனைத்தொடர்ந்து நுவனிந்து பெர்னாண்டோ 30 ஓட்டங்களையும், அஷேன் பண்டார 34 ஓட்டங்களையும் சிறிய இணைப்பாட்டங்களுடன் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழக்க, கொழும்பு அணி 165 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து சற்று பலமான நிலையிலிருந்தது.

அதன்பின்னர் அணித்தலைவர் சம்மு அஷான் ஆட்டமிழக்க, பிரவீன் ஜயவிக்ரம, மஹீஷ் தீக்ஷன மற்றும் தனன்ஜய லக்ஷானின் ஓவர்களில் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை விட்டுக்கொடுத்த கொழும்பு அணி 47.3 ஓவர்கள் நிறைவில் 213 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய காலி அணிசார்பாக தனன்ஜய லக்ஷான் 29 ஓட்டங்களையும், ஹிமாஷ லியனகே 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தாலும், தினேஷ் சந்திமால், ஹஷான் ரந்திக மற்றும் முதித லக்ஷான் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். அதன்படி, 93 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை காலி அணி இழந்திருந்தது.

இதன்பின்னர் ஜோடி சேர்ந்த பிரியமல் பெரேரா மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் 6வது விக்கெட்டுக்காக மிகச்சிறந்த இணைப்பாட்டத்தை பகிர்ந்தனர். இருவரும் நிதானமாக ஓட்டங்களை குவிக்க பிரியமல் பெரேரா தன்னுடைய அரைச்சதத்தை கடந்தார். இவர்கள் இருவரும் வெற்றிக்கு அருகில் அணியை அழைத்துச் சென்றனர். இவர்கள் 110 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற, ரமேஷ் மெண்டிஸ் 37 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

பிரியமல் பெரேரா இறுதிவரை ஆட்டமிழக்காமல் 98 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார். இதன்மூலம் 42.4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து காலி அணி வெற்றியிலக்கை அடைந்தது. கொழும்பு அணிசார்பாக பிரபாத் ஜயசூரிய மற்றும் கவிந்து நதீஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஜப்னா எதிர் தம்புள்ள

கொழும்பு பி.சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், அணித்தலைவர் தனஞ்சய டி சில்வாவின் சகலதுறை பிரகாசிப்பின் ஊடாக, ஜப்னா அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியை பெற்றுக்கொண்டது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ள அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்ததுடன், இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்ட ஜப்னா அணி தனன்ஜய டி சில்வாவின் அரைச்சதம், இசான் ஜயரத்ன மற்றும் சதீர சமரவிக்ரம ஆகியோரின் பங்களிப்புடன் 47.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆரம்பத்தில் சதீர சமரவிக்ரம 40 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க, மத்தியவரிசையை பலப்படுத்திய தனன்ஜய டி சில்வா வேகமாக ஓட்டங்களை குவித்தார். இவர், 64 பந்துகளில் 10 பௌண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களை குவித்தார். ஒரு கட்டத்தில் 202 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய ஜப்னா அணிக்கு, இறுதி நேரத்தில் இசான் ஜயரத்ன 44 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுசேர்த்தார். பந்துவீச்சில் லக்ஷான் சந்தகன் மற்றும் விஷ்வ பெர்னாண்டோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அணியை பொருத்தவரை அணித்தலைவர் அஷான் பிரியன்ஜனை தவிர, எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் ஓட்டக்குவிப்புக்கான ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்கவில்லை. முதல் இரண்டு விக்கெட்டுகளும் ஓட்டங்களின்றி வீழ்த்தப்பட்ட நிலையில், ஆரம்பத்திலிருந்து தம்புள்ள அணி நெருக்கடியை உணர்ந்தது.

இதனைத் தொடர்ந்து ஜப்னா அணியின் தலைவர் தனன்ஜய டி சில்வா, ரொன் சந்ரகுப்த, தம்புள்ள அணியின் தலைவர் அஷான் பிரியன்ஜன் மற்றும் சொனால் தினுஷ ஆகியோரின் விக்கெட்டுகளை வீழ்த்த போட்டியின் வெற்றி முழுமையாக ஜப்னா அணி பக்கம் திரும்பியது.

தம்புள்ள அணிசார்பாக அதிபட்சமாக அஷான் பிரியன்ஜன் 32 ஓட்டங்களையும், ரொன் சந்ரகுப்த 12 ஓட்டங்கள் மற்றும் லக்ஷான் சந்தகன் 10 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இதன்காரணமாக 25.5 ஓவர்கள் நிறைவில் வெறும் 79 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தம்புள்ள அணி தோல்வியை தழுவியது. ஜப்னா அணிசார்பாக, தனன்ஜய டி சில்வா 3 விக்கெட்டுகளையும், திலும் சுதீர, ஜெப்ரி வெண்டர்சே மற்றும் இசான் ஜயரத்ன ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடரின் அடுத்த இரண்டு போட்டிகளில் இன்று (26) ஜப்னா அணியை கண்டி அணி எதிர்கொள்ளவுள்ளதுடன், கொழும்பு அணி தம்புள்ள அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை சனி மௌன்ட் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் இருவர் தெரிவு

சவளக்கடை குறூப் நிருபர்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள, மாகாண மட்டத்திலான 28 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட போட்டித்தொடருக்கான கிழக்குமாகண அணிக்கான வீரர்கள் தெரிவில்இறுதி 30 பேர் கொண்ட கிழக்கு மாகண அணியில் அம்பாறை உதைபந்தாட்ட லீக்கில் இருந்து கல்முனை சனி மௌன்ட் விளையாட்டுக் கழக அணி வீரர்களான, எ.எஸ்.எம். ரில்வான், எ.ஆர்.எம். பிரோஸ் ஆகிய 2 வீரர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிழக்குமாகண அணி இறுதி கட்ட தெரிவுக்கு மாகாணத்தில் இருந்து 90 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து ரொஷான் மஹாநாம விலகல்

இலங்கை கிரிக்கெட் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரொஷான் மஹாநாம தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக தொழில்நுட்ப குழுவிலிருந்து அவர் விலகியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை கிரிக்கெட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அரவிந்த டி சில்வா உள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான முத்தையா முரளிதரன் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். இதனிடையே, ஐசிசி இன் முன்னாள் போட்டி மத்தியஸ்தரான ரொஷான் மஹாநாம, பாகிஸ்தானில் இம்மாதம் 27ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் போட்டி மத்தியஸ்தர்களில் ஒருவராக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

திருகோணமலைகுறூப்நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் உதைபந்தாட்டத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் நிகழ் நிலைக் கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 23) திருகோணமலை உதைபந்தாட்டத்துறை ஆர்வலர்களினால் நடாத்தப்பட்டிருந்தது. திருகோணமலை உதைபந்தாட்டக் கழகங்களுக்காக விளையாடிய பல முன்னாள் வீரர்களும் இதில் கலந்து கொண்டனர். ஸ்ரீதரனினால் இக்கூட்டம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தது.

மார்ச் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கிற்குட்பட்ட 16 வயதின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடாத்துவதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைவாக 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்களை உள்ளடக்கி பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக 070 422 9961/ 0170 42209961 ஆகிய இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

இச்சுற்றுப்போட்டியை ஒழுங்கமைப்பு செய்வதற்கான கமிட்டி ஒன்றும் உருவாக்கப்பட்டது. சிறீதரன், சையொளிபவன்(வைத்தியர்),கரிகாலன் (சட்டத்தரணி), சிவபரன் (ஆசிரிய ஆலோசகர்), சந்துரு, அகிலன், சபேஷ்குமார், வடிவேல் ஆகியோர் கமிட்டிக்கு தெர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜனவரி இரண்டாம் திகதி நந்நதராஜ் அவர்களின் அனுசரணையுடன் சன்ரைஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் ட்றின்பினிட்டி (Trinfinity) உதைப்பந்தாட்ட அக்கடமி இணைந்து நடாத்திய 15 வயதுக்குக் கீழானவர்களுக்கான சிறுவர் உதைப்பந்தாட்டத் திருவிழாவைத் தொடர்ந்து திருகோணமலையில் உதைபந்தாட்டத் துறை புத்துயிர் பெற்றுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 26ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

பொது மக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை கட்டளைகள்/ திருத்தங்கள் வரைவு

1) தனிப்பாவனைக்கான சுவாச பாதுகாப்பு சாதனத்திற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு பாகம் 1: மூச்செடுத்தல் மற்றும் மூச்சுவிடல் வால்வு இல்லாமல் முகமூடி சுவாசக்கருவிகளை வடிகட்டல். பிரிவு: எண்ணெய் அடிப்படையற்ற சூழல் **(DSLS……)**

2. விஷேடதன்மையுள்ள உரத்திற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு **(DSLS……)**

3. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 214:2010
புழ நசுக்கல்கள், பழ சிரப்புக்கள் மற்றும் பழ கோடியல்கள் ஆகியவற்றிற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு (இரண்டாம் பதிப்பு)

4. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 260:2008
தக்காளி குழம்பிற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு
(இரண்டாம் பதிப்பு)

5. திருத்த வரைவு இல. 03 இலிருந்து இலங்கை கட்டளைகள் 265:2011
யேம், ஜெலி மற்றும் மார்மலேட் (இரண்டாம் பதிப்பு)

6. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 581: 2008
மிளகாய் சோஸ்சிற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு (முதலாம் பதிப்பு)

7. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 729 : 2010 (முதலாம் பதிப்பு)
ஆயத்த நிலையிலுள்ள பழ குடிமங்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு (முதலாம் பதிப்பு)

8. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 730:2010
பழ கோர்டியல் செறிவு, பழ நசுக்கல் செறிவு மற்றும் பழ சிரப செறிவுகள் (முதலாம் பதிப்பு)

9. திருத்த வரைவு இல. 01 இலிருந்து இலங்கை கட்டளைகள் 1035:1995
சோயா சோசுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு

10. திருத்த வரைவு இல. 01 இலிருந்து இலங்கை கட்டளைகள் 1074 : 2019
கேக்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு (முதலாம் பதிப்பு)

11. திருத்த வரைவு இல. 02 இலிருந்து இலங்கை கட்டளைகள் 1328 : 2008
பழ இரசம் மற்றும் நெக்டார்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு

மேலேயுள்ள கட்டளைகள்/திருத்தங்களுக்கான கருத்துரைகளை பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்து இலங்கை கட்டளைகள் நிறுவனமானது கோருகின்றது.

இந்த வரைவு கட்டளைகள்/திருத்தங்கள் இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னராக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான குழுக்களினால் பெற்றுக் கொண்ட கருத்துரைகள் பரிசீலனை செய்யப்படும்.

மேலேயுள்ள திருத்த கட்டளைகள்/திருத்தங்களின் பிரதிகள் இலவசமாக விஞ்ஞானரீதியிலான கட்டளையாக்கல் பிரிவிலிருந்து அல்லது இலங்கை கட்டளைகள் நிறுவன ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

2022.03.26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் என்னை வந்தடைதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா இடம், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08.
தொலைபேசி: 011-2671567-72
தொலைநகல்: 011-2671579
மின்னஞ்சல்: dg@slsi.lk
இணையம்: www.slsi.lk

இலங்கை கட்டளைகள் நிறுவனம்

டிஜிட்டல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்முயற்சியாளர் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சு.

பெறுகை அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

செயற்றிறன் பரிமாற்ற நிதிக்கான வேலைத்திட்டம் – 2021

PT-2021

01) தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்கான கூடைகளை வழங்குவதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 26.01.2022 ஆம் திகதியிலிருந்து 09.02.2022 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 09.02.2022 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே (09.02.2022 பி.ப 15.00) வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்வி அடையாள இலக்கம்	வேலை விபரம்	குப்பைக்கூடைகளின் எண்ணிக்கை	வேண்டப்படும் கேள்விப் பிணை	
			பிணை வைப்பு (ரூபா)	செல்லுபடியாகும் காலம்
NP/14/45(3)/PL/PT/02/2021	Procurement for Supplying Dustbin Sets with Bin Rack for Collecting recyclable waste.	35 Sets	30,000.00	11.05.2022

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

தென் மாகாண சபை

தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

2022 ஆண்டிற்கு இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்கோரல் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் நிர்மாண, பராமரிப்பு விடயங்கள் மற்றும் கழிமுகப் வெட்டுதலுக்காக வாடகை அடிப்படையில் கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தொடர் இல	இயந்திரத்தின் / வாகனத்தின் தன்மை	தொடர் இல	இயந்திரத்தின் / வாகனத்தின் தன்மை
01	பெகோலோடர் (JCB)	37	20 தொன் Amphibious Excavator
02	குரோலர் டிரக்டர் (புல்டோசர்) D4, சமமான (டி4 டிரக்லைன் டோசர்)	38	01 தொன் வைப்பரேஷனுடன் ரோலர்
03	குரோலர் டிரக்டர் (புல்டோசர்) D6, சமமான டி6 டிரக்லைன் டோசர்)	39	02 தொன் வைப்பரேஷனுடன் ரோலர்
04	10 தொன் தட்டு லொறி நீளம் 20 அடி	40	05 தொன் வைப்பரேஷனுடன் ரோலர்
05	05 தொன் தட்டு லொறி நீளம் 20 அடி	41	10 தொன் வைப்பரேஷனுடன் ரோலர்
06	பூம்டிரக்	42	5000 லீட்டர் நீர் பவுசர்
07	PC 20 டிரக்லைன் எஸ்க்காவேட்டர் பொன்டுன் உடன்	43	10 தொன் கெட்டர்பில்லர்
08	PC 20 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	44	செயின் புளொக் இயந்திரம் 03 தொன்
09	PC 30 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	45	செயின் புளொக் இயந்திரம் 05 தொன்
10	PC 30 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	46	பிரேக்கர் இயந்திரம்
11	PC 40 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	47	ஹில்ட்டி டிரில் இயந்திரம்
12	PC 40 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	48	செட்டலிங் தொகுதி
13	PC 50 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	49	வெல்டிங் டிரான்ஸ்போமர் (வெல்டிங் பிளான்ட்)
14	PC 50 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	50	ரூமர் (வெக்கர்) இயந்திரம்
15	PC 70 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	51	75 கணஅடி பிரெயிலருடன் டிரக்டர்
16	PC 70 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	52	01 கியூப் அளவான டிப்பர் இயந்திரம்
17	PC 110 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	53	03 கியூப் அளவான டிப்பர் வண்டி
18	PC 110 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	54	கை டிரக்டர்
19	PC 120 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	55	கொங்கிறீட் மிக்ஷர் இயந்திரம்
20	PC 120 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	56	செயின் சோஇயந்திரம்
21	PC 130 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	57	மோட்டர் கிரேடர்
22	PC 130 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	58	நீர் பம்பி 2”
23	PC 140 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	59	நீர் பம்பி 4”
24	PC 140 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	60	ஜெனரேட்டர் 2 கிலோ வோட்
25	PC 150 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	61	ஜெனரேட்டர் 3 கிலோ வோட்
26	PC 150 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	62	ஜெனரேட்டர் 5 கிலோ வோட்
27	PC 200 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	63	சேற்றுப் பம்பி 2 அங்குலம்
28	PC 200 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	64	சேற்றுப் பம்பி 4 அங்குலம்
29	PC 300 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	65	இயந்திர போக்குவரத்திற்கான Low Bed
30	PC 300 டிரக்லைன் எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	66	செயின்சோ இயந்திரம் இயக்குநருடன்
31	PC 35 எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	67	செயின்சோ இயந்திரம் இயக்குநர் இன்றி
32	PC 35 எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	68	மிதக்கும் நீர்த்தாவரங்களை அகற்றும் இயந்திரம்
33	PC 60 எஸ்காவேட்டர் பொன்டுன் இன்றி	69	ஒரு கியூப் டிரக்
34	PC 60 எஸ்காவேட்டர் பொன்டுன் உடன்	70	75 தொன் லோபெட் டிரெயிலர்
35	07 தொன் Amphibious Excavator	71	5 தொன் கெட்டர்பில்லர்
36	12 தொன் Amphibious Excavator	72	சிறிய அளவிலான லொறி

அதற்கான நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வருடம் முழுவதும் எந்தவேளையிலும் வழங்கும் கொள்ளளவு வழங்குநரிடம் இருத்தல் வேண்டும்.
2. இயந்திரங்கள் அல்லது வாகனங்களை ஈடுபடுத்தும் காலம் 100 மணி நேரம் (நூறு மணித்தியாலம்) மேற்படின் மட்டும் அவை போக்குவரத்துச் செய்வதற்காக கட்டணங்களைச் செலுத்துவதற்கு இணங்குவதுடன் அவ்வாறு 100 மணி நேரம் (100 மணித்தியாலம்) மேற்படாத வேளையில் வாகன கட்டணம் சார்பாக திணைக்களத்தினால் அனுமதித்த விலைமனுக்கள் அல்லது விண்ணப்பிக்கும் தொகை ஆகிய இரண்டில் மிகக்குறைந்த பெறுமதிக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
3. குறித்த இயந்திரங்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக கொடுப்பனவுகளைச் செலுத்துவது இயந்திரத்துடன் சம்பந்தப்பட்ட தேவைப்படும் குறைந்தபட்ச கொள்ளளவுடைய வாகனங்களுக்காகும்.
4. சகல இயந்திரங்களும் சரியான செயற்பாட்டுடன் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்த காலம் 12 மாதங்கள் ஆவதுடன் அதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஒவ்வொரு மாவட்டம் சார்பாகவும் வேறு வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விதாரர்களுக்கு ஒரு இயந்திரத்திற்கு அல்லது ஒரு வாகனத்திற்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
8. வாடகை ஒப்பந்தம், ஆரம்பத்தில் ஒரு வருடம் சார்பாக ஒப்பமிடப்படுவதுடன் அதனை நீடித்தல் இரு சாராரினதும் உடன்பாட்டின் அடிப்படையில் இடம்பெறும்.
9. கேள்விகளை சமர்ப்பித்துள்ள வழங்குநர்களில் அதிகூடிய தகைமையுள்ள 05 வழங்குநர்கள் (ஒரு மாவட்டத்திற்கு) பதிவு செய்வதுடன் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்குநர்களின் சேவை கோரப்படும்.
10. தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் சேவைகளை வழங்குவதற்காக சேவை உடன்பாட்டிற்கு வரல் வேண்டும். ஆரம்ப வழங்குநரின் கொள்ளளவு திணைக்களத்தின் தேவைப்பாட்டின் படி போதுமானதாக இல்லையெனில் முறையே அடுத்த வழங்குநர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் காரணமாக தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்கள் திணைக்களம் கோரும் எந்தவேளையிலும் சேவையை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும். எதிர்பார்க்கும் சேவையை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்களின் அடுத்தவருட பதிவிற்காக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
11. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்,2022.01.26 முதல் 2022.02.08 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் அலுவலகத்தில் அல்லது எமது திணைக்களத்தின் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனைகளில் மீளளிக்கப்படாத ரூ- 1000.00 கட்டணத்தை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
12. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் ரூ. 25,000.00 பிணைத் தொகையை திணைக்களத்தின் கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும்.

அதனடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் பொறியிடப்பட்ட உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வாடகை அடிப்படையில் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள்’ என்று குறிப்பிட்டு 2022.02.09 பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தரப்பட்டுள்ள காலம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். இது பற்றிய மேலதிக விபரங்களை தொலைபேசி இல 091-2245176ஐ அழைத்து அல்லது மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம். இப்பெறுகை அறிவித்தல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான http: //www.irrigationdept.sp.gov.lk இல் பிரசுரமாகியுள்ளது.

மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்/ பெறுகைக் குழுவின் தலைவர்
தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்
5ஆம் மாடி, மாவட்ட செயலக கட்டிடம்,
காலி.
தொலைபேசி - 091-2245176
பெக்ஸ்: 091-2245176

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை

விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	தேவையான விலைமனு பிணை	தேவையான தகைமை	VAT உட்பட மதிப்பிடப் படும் செலவு (ரூபா)	தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	இறுதித் திகதி மற்றும் நேரம்
	சிவில் கேள்விகள்						
01	கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டம் - நில்லம்பே சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் பணியாளர் ஓய்வறையை நிர்மாணித்தல் ஒப்பந்த இல : **RSC-C/CS/CIVIL/REH/ NILLAMBE/2021/346**	2,000/- + VAT	ரூபா 18,000/-	கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு	1.8 மில்லியன்	பிஒநி (மத்திய), தேநீவவச, கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 2022-02-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெட்டம்பே, பேராதனை முகாமையாளர் (மத்திய தெற்கு) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.	09/02/2022 பி.ப. 2.00
02	ஹந்தான நீர் வழங்கல் திட்டம் - ஹந்தான விடுமுறை பங்களாவிற்கு தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் ஒப்பந்த இல : **RSC-C/CS/CIVIL/REH/ HANTHANA/2021/341**	2,000/- + VAT	ரூபா 34,000/-	கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு	3.4 மில்லியன்	பிஒநி (மத்திய), தேநீவவச, கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 2022-02-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கெட்டம்பே, பேராதனை முகாமையாளர் (மத்திய தெற்கு) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.	09/02/2022 பி.ப. 2.00
03	கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டம் - கலுகமுவ பொறுப்பாளர் விடுதியின் புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்த இல : **RSC-C/CS/CIVIL/REH/ KALUGAMUWA/2021/347**	2,000/- + VAT	ரூபா 18,000/-	கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு	1.8 மில்லியன்	பிஒநி (மத்திய), தேநீவவச, கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	09/02/2022 பி.ப. 2.00
